1696

(52)

தினசரி
கோசாரபோதினி

[உரையுடன்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1939
MADRAS

& S

மதராஸ்

COPY RIGHT.

உ

முருகன் துணை

தினசரி : : : : : கோசார போதினி

(மூலமும்-உரையும்)

இஃது

காவேரிப்பாக்கம்

K. M. தெய்வசிகாமணி சோதிடர்

எழுதியது.

அ. முத்துவடிவேல் முதலியாரால்

வெளியிட்டது.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடம்

சென்னை

(ரிஜிஸ்டர் காபிரைட்)

இதன் விலை] 1939 [அணா 12.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாசம் பிரஸ்

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

58

138·5

ரிஜிஸ்டர் காபிரைட்

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:—காவேரிப் பாக்கம் - மார்க்கலிங்க சோதிடர் குமாரர் K. M. தெய்வசிகாமணி சோதிடர் எழுதிய "தினசரி கோசார போதினி" என்னும் இந்நூலை அடியில் கையொப்பமிட்டுள்ள யான் மேற்படியாரிடம் சகல சுதந்திரம் பெற்று மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டிருப்பதால் இந்நூலை என் அனுமதியின்றி எவரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

விஷய அட்டவணை

விஷயம்	பக்கம்
முகவுரை	5
தெய்வஸ்துதி	8
கொடியோர் சுபர் என்றது	10
கிரகவாசம்	11
கோசார பார்வை	12
முதலெழுத்தால் நக்ஷத்திரம் அறிவது	12
பெயருக்குரிய நக்ஷத்திர அக்ஷரம்	13
நக்ஷத்திர ராசி	14
சூரியன் கோசாரம்	15
சந்திரன் கோசாரம்	17
செவ்வாய் கோசாரம்	18
புதன் கோசாரம்	19
குரு கோசாரம்	20
சுக்கிரன் கோசாரம்	21
சனி கோசாரம்	22
இராகுகேது கோசாரம்	23
ஐயறிவு ஐந்து விவரம்	24
நான்குவகை விசேஷம்	24
லக்கின இருப்பைக் காட்டும் ஜாப்தா	25
ராசிபலப் படலம்	26
தேய விவரம்	27
கிரகசந்தேக நிவர்த்தி	28
பார்வை விவரம்	35
ஐவகை ஆதிபத்தியம்	36
கேந்திரகோண பலம்	37
தாதுமூலஜீவ விவரம்	37
ஆரூடபாவ இலக்கணம்	39
சுக்கிரன் ஆராய்ச்சி	41
பார்வை ஆராய்ச்சி	41
விவாக சிந்தை	42
கடன்	43
வழக்கு	43
சண்டை	44
பொருள் களவு	44
வியாபாரம்	45
பூமி வாங்கல்	45
உத்தியோகம்	46
பூஷணம்	46
நோய்	47
குளம் கிணறு	47
ஜெயம் அபஜெயம்	48
நவகோட்களின் பஞ்சபலம்	51
கணுப்பலன்	52
நக்ஷத்திர திசை	55
கோசார திசை	55
பாவக விவரம்	57
மாரக திசை	58
கிரக திசை	58
புத்திபிரிக்கும் வகை	59
போதகன் வேதகன் பாசகன் காரகன்	62
திசாபுக்தி பலன்கள்	63
கோசார விவரம்	100
கோசாரவேதை	101
கோசார நற்பலனிடம்	101
வேதை ஸ்தானம்	102
மணிநூல்	103
பொருத்த நிர்ணயம்	103
முகூர்த்த நிர்ணயம்	110

விஷய அட்டவணை முற்றிற்று.

முகவுரை

கரையிலாதிலங்கும் திரைகடல் சூழ்ந்த இத்தரையின்கண் சிறந்து விளங்கும் இம்மானிடர்களது முக்கால நிகழ்ச்சியின் இரு வினைப்பயனால் வரும் பெரும்பயனைத் தெரிந்துணர்ந்து தாம் துன்புறாது இன்புற்று வாழும்வண்ணம் நம்முன்னோர் சுருதி யுக்தி அனுபவமென்னும் மூன்றினாலும், தொன்றுதொட்டுக் கையாண்டு பழகி எழுதிவைத்துப்போன நூற்கள் அனேகம் என்பது எவரும் அறிந்ததே. ஆயினும், யாம் இங்கு விளக்கவெண்ணிய சோதிட சாத்திரத்தினைப்பற்றி ஆராயுமளவில், சாக்ஷாத் முதற்கடவுளால் ஆக்கப்பட்ட இருக்கு-யஜுர்-ஸாமம்-அதர்வணம் என்னும் நான்கு வேதங்களே சர்வ ஆதாரமாயிருந்துளதென்பது விளங்குகிறது.

எவ்வாறெனின்? மேற்படி நான்கு வேதங்களுக்கும் ஆறு அங்கங்கள் எனவும், மேற்படி ஆறு அங்கங்களில் கூறிய விதி பிசகாது ஒழுகுபவரே இம்மையில் அடையவேண்டிய தருமம்-அருத்தம்-காமம் இவற்றினையும், மறுமையில் அடையவேண்டிய மோக்ஷசாதனத்தையும், அடைவரென வற்புறுத்திக் கூறியுள்ளதை அறியலாம். மேலேசொன்ன வேதாங்கமான சிட்சை - கற்பம் - வியாகரணம்-நிருத்தம் - சந்தோபிசிதம் - ஜோதிடம் என்னும் இவற்றை நன்கு வாசித்து தாம் வாசித்தவற்றைத் தமது யுக்தியால் பரிசீலனை செய்து, பின்னரே அதனைத் தமது அனுபவத்தில் கொண்டுவரவேண்டும் என்பது எல்லோராலும் சம்மதிக்கப்பட்டுள்ளன. ஆயினும், முன் சொன்ன இம்மைப்பயனையும், மறுமைப்பயனையும் அடையத்தகுந்த ஏதுவையும், காலத்தையும் விரித்துக் காட்டுவதேதோவெனின், அவையே மேற்படி ஆறு அங்கங்களுள் நேத்திராங்கமெனக் கூறும் சோதிடம் என்பது நிச்சயம்.

மேற்படி சோதிட சாத்திரமேதோவெனின், கணிதஸ்கந்தம்-ஓராஸ்கந்தம் - சம்ஹிதாஸ்கந்தம் என மூன்றுவகையுடையன என்பதை சாத்திரங்களால் கூறியுள்ளதை அறியலாம். இம்மூன்றின் ஆதாரத்தைக்கொண்டே ஜாதகம் - கோளம் - கணிதம் - நிமித்தம்-பிரச்சனம்-முகூர்த்தம் என ஆறு அங்கங்களாய்ப் பிரித்துதவி தத்தமது வாழ்நாளின் லக்ஷணங்களையும் அறியும்வண்ணம் உதவிய நம் முன்னோர் பெருமையைப் புகழ்வதெனின், இப்புத்தகம் இடந்தராதாயினும் நம்மால் அறிந்தவரைக்கூறக் கடமைப்பட்டவராவோம்.

இங்கு மேற்சொன்ன ஆறு அங்கங்களுள் ஜாதகம் என்பது என்னவென்பதை ஆராயுமிடத்து, ஜனனகால இலக்ஷணத்தால் கிரகங்களைக்கொண்டு வருகாலபலனை விளக்குவதெனவும், அவ்வாறான நூற்களே சாதக அலங்காரம், சோதிடக்களஞ்சியம், பாராசாரியம், சந்திர காவியம், தாண்டவமாலை முதலிய நூற்களும் இன்னும் அனேக நூற்களும் வெளிவந்துள்ளன என்பதை அறியலாம்.

இனி கோளம் என்பது என்னவென்பதை ஆராயுமிடத்து, முன் சொன்ன ஜாதகத்திற்கு முக்கிய ஆதாரமாயுள்ள கிரகம் - நக்ஷத்திரம் என்னும் இவற்றின் உருவம் - இடம் - நடை - அளவு இவைகளை எடுத்துக் காட்டுவதுடன், மேற்படி கிரகம் நக்ஷத்திரங்களால் இவ்வுல குக்கு ஏற்படும் சகல் விஷயங்களையும் எடுத்துக் காட்டுவதாகும். ஆனதால் மேற்படி கோளசாத்திரத்தைச் சகல மதத்தினரும் கையாண்டு பழகி, அவர்களது யுக்தி புக்தியால் சிற்சில இடங்களில் நக்ஷத்திரசாலையென்று ஏற்படுத்தி, அதின் சக்தியால் இவ்வுலகுக்கு ஏற்படும் சில அபூர்வ விஷயங்களை (அவையாவன:) புயல் - பூகம்பம் முதலியவற்றை முன்னதாயறிந்து உதவிசெய்து வருவதை அறிய லாம். என்னே இக்கோள சாத்திரத்தின் பெருமை!

இனி கணிதம் என்பது என்னவென்பதை ஆராயப்புகின், மேற்சொன்ன கிரகங்கள் நக்ஷத்திரங்களினது உதய உச்ச அஸ்த மயத்தையும், சூரிய சந்திரர்களது கிரகணத்தையும், திதி - வாரம் - யோகம் - கரணம் முதலியவற்றையும், நிச்சயித்துக் காணும் விவரங் களைக் கூறியுள்ளனர். இக்கணித சாத்திரமறிந்த மேலோர்களாலேயே தற்காலம் பஞ்சாங்கம் என கணிக்கப்பட்டு அவற்றுள் மேற்சொன்ன விஷயங்களை நிச்சயித்து வெளியிட்டுள்ளதை அறியலாம்.

நிமித்தம் என்பதேதோவெனின்? ஒருவன் ஏதோ ஒன்றைக் குறித்து அவை நன்மையா? அல்லது தீமையா? என்பதை அறியும் மார்க்கங்களைக் கூறியுள்ளன. இதனை நிமித்தகுறி சாத்திரம் என்றுங் கூறுவர்.

பிரச்சனம் என்பதேதோவெனின், ஆரூடம் எனப் பெயர் பெறும். அவையாவன: ஒருவன் குறித்தகாலத்தில் அப்போதுள்ள கிரக லக்ஷணத்தை முன்சொன்ன கணித சக்தியாலும், கோளசக்தியாலும் அறிந்து கூறுவது. இந்த சாத்திரம் பலர் பலமுறையாய்க் கையாண்டு வருகின்றனர்.

முகூர்த்தம் என்பதேதோவெனின், இவ்வுலகோர் கோரும் சகல காரியங்களையும் நன்னாளில் ஆரம்பித்து நற்பயன் அடையும் மார்க்க மாகும். எக்காரியத்தையும் நன்னாளில் ஆரம்பிக்காவிடின் அவை பயனடையா. ஆனதால், அவ்வாறான நன்னாளைக் காட்டுவதே முகூர்த்தம் எனப்படும்.

இவ்வறுவகைச் சாத்திரக் கருத்தினையும் ஆராயுமிடத்து எல்லா வற்றையும் கற்றுத் தெளிவதே மானிடர்களினது முக்கிய கடமை யெனக் கூறலாம். ஆயினும் இவ்வறுவகைச் சாத்திரத்தினையும் அறிந்தவர் ஒரு சிலரேயாவர். சிற்சிலரோவெனின், மேற்கூறிய அறுவகையினுள் ஏதேனும் ஒன்றையே கற்றிருப்பர். எதனா லெனின், வாசிக்கும்போதுகூட அவ்வவர்களுக்கு வேண்டிய விஷயம் என எதைத் தெரிந்தனரோ, அதனையே பெரும்பாலும் கவனித்து ஏனைய விஷயங்களை கவனியாது விடுவது சுபாவம்.

யாம் இந்நூலை எழுத முயன்றதற்குக் காரணம் என்னவெனின்? கோட்சாரம் என்பது என்னவென்பதை நம்மால் அறிந்தவரையில் விளக்கவேண்டும் என்னும் கருத்தேயாகும். கோள் + சாரம் என்னும் மொழிக்கு அருத்தம் என்னவென்பதை விளக்குகையில் (கோள் = கிரகங்களினது) (சாரம் = சத்து) என்பதேயாகும். அவையாவன: கிரகங்களின் சத்து என்பதாம். இதனைச் சிலர் கோசாரம் என்றும், கோசாரம் சொல்வதென்றால் அவரவர் பெயரின் முதலெழுத்தால் நக்ஷத்திரம் அறிந்து, மேற்படி நக்ஷத்திரத்திற்குடைய ராசியறிந்து, ராசிக்குடைய கிரக அடவியையறிந்து பொதுப்பலன் சொல்லுதல் என்று கருதுகின்றனர். இவை உண்மை அர்த்தமல்ல. பின் எவ்விதமெனின்? கிரகங்களினது சக்தியை அறிதல் என்பதேயாகும். இதனாலேயே தினசரி கோசார போதினி எனப் பெயர் கொடுத்தாம். அவையாவன: கிரகங்களுக்கு ஒவ்வொருநாளும் உண்டாகும் சக்தியை அறிவிப்பது என்பது பொருள்.

இந்நூலில் ஜாதகம் உள்ளவர்களும், இல்லாதவர்களும் தான் குறித்த காலத்தில் கிரகங்கள் இருக்கும் சக்தியையறிந்து, அதனால் இவ்வுலகிற்கும் உலகிலுள்ள மானிட வர்க்கத்தவற்கு உண்டாகும் நிகழ்ச்சியை அறியும் மார்க்கத்தை எம் சிற்றறிவிற்கு எட்டிய அளவு வரைந்துள்ளனம். இதில் பெரும்பாலும் ஜாதக அலங்காரம் - வீமேஸ்வர உள்ளமுடையான் - குமாரசுவாமியம் என்னும் நூற்களினது கருத்தே நிரம்பி இருக்கும். கிரகங்களது உண்மை சக்தியை யறியும். கோள் சாரத்தை-(கோசாரத்தை) எம்மால் அறிந்துரைக்க முடியாதாயினும், எமது பிதா காவேரிப்பாக்கம் - மார்க்கலிங்க சோதிடர் அவர்கள் தாம் வயது 64-வரையில் கையாண்டு பழகிவந்த ஓர் ஏட்டுப்பிரதி ஒன்று எம்மிடம் கிடைத்தது. ஆனதால், மேற்படி நூலின் ஆதாரத்தைக்கொண்டும், இன்னும் அனேக சோதிடர்களது உதவியாலும், தூண்டுதலாலுமே இந்நூல் எழுதத் தொடங்கினம். இந்நூலினுள் பிரச்சனம் - ஜாதகம் - கணிதம் - கோளம் என்னும் நான்கினது சாராம்சங்களும் அடங்கியுள்ளன. ஆதலால் இதனைக் கண்ணுறும் எமது சகோதரர்களான சோதிட விற்பன்னர்கள் இந்நூலின்கண் ஏதேனும் குற்றமிருக்கினும், அதனைத் திருத்தியமைத்து வாசித்து ஆசிகூறுமாறு வேண்டுவதுடன் இந்நூலின்கண் ஏதேனும் சந்தேகமுள்ளனவாயின், எம்மால் விருத்தியுரை எழுதி வெளியிட்டுள்ள சோதிடக் களஞ்சியம், தாண்டவமாலை, சந்திர காவியம், பாராசாரியம் என்னும் நூற்களையும் வாங்கி வாசித்து குகப்பெருமான் கிருபையால் தமது ஐயம் தீர்ந்து இன்புற்று வாழ்வீரென நம்புகிறேன். எல்லாம்வல்ல இறைவன் கழலிணை இன்புடனேற்றுக.

காவேரிப்பாக்கம்
2-12-39

இங்ஙனம்:
K. M. தெய்வசிகாமணி சோதிடர்.

பாயிரம்

விநாயகர் துதி

சீர்சிறந்த திரைகடல் வையினிற்
பார்விளங்க பலித்திடும் சோதிடத்
தாருயர்நவக் கிரகநூல் சாற்றிட
கார்நல் லியானை கழலிணை யேற்றுவாம்.

முருகன் துதி

எந்தனை யளிக்கும் எந்தையைச் செந்தூர்க்
கந்தனை நினைக்கிற் கலங்கிடும் வினையே.

பலதெய்வத் துதி

கடவுளான கலைஞானத் தேசிகனைக்
கயமுகனைக் குகனைக் கான்சூழ்
மடலார்தண் பூவினிலும் நாவினிலும்
வதிந்தருளும் வாணி மானை
யடலாரு மொன்பதுகோ ளாகியவா
னவர்கள்தம்மை யடியே னென்றன்
இடரான தறத்துறப்பீ ரருள்சுறப்பீர்
புறப்பீரென் றிறைஞ்சு வேனே.

நூல் வரலாறு

பாரினுயிர் பிறப்பும் பலகுணமுந் தொழிலும்
பகருமவைக் குறுமிடமும் பல்கிய நன்னலமும்
தேரியுலகோ ரொழுகுஞ் சீர்கொள் விதிவிலக்குஞ்
சேர்கதியு மற்றவையுஞ் சேர்த்துரைத்தா மிந்நூல்
ஏரியல நிகழ்கவென வியம்பிய வகத்தியனுக்
கீறியருள் சுரந்தவனை யிருக்கையி லுய்த்திருந்தான்
போரியலும் வேலனிறை பூரணன் விசாகன்
பூங்கடம்ப னெனதுளமாம் பூங்கமலா லயனே.

அவையடக்கம்

நீதி வித்தகர் சொற்றிடு நீள்பொருள்
ஆதலாற் கற்றறிந்த புலமை யோர்
தீதினைத் தள்ளித் தேன்கொள்ளல் போலென்சொற்
கோதினைத் தள்ளிக் கொள்வார் பொருளையே.

குகமயம்

தினசரி கோசார போதினி

மூலமும் - உரையும்

விருத்தம்

நீருலவு புவியினர்கள் வருகால் பலனறியும் வகையுரைத்தீர்
பாருலகில் பிறந்துவந்த வருடமுடன் மாதங்கள் தேதிமட்டாய்
சீறுபெற வறியாதார்க் கெந்தவிதம் கணிதபலன் சொல்வதென்று
ஏருலவு மகத்தியனர் வினவவதற் கிறையவனு மரடுத்துச்சொல்வார். 1

அன்புருவே அகத்தியனே விளம்பக்கேளு
ஆறிரண்டுராசியுடன் வருடம் மாதம்
இன்புறவே யறியாதாற் கிவர்கள்கொண்ட
இனிய நாமத்தின் முதலக்ஷரத்தால்
தென்புபெரு நாளறிந்து ராசிகண்டு
தினசரியாய் கோட்கள்வரும் தானந்தேர்ந்து
அன்புடனே வரும்பலனை யறியும்மார்க்கம்
அறைவிப்பேன் இனிதுறவே தெரிவிப்பேனே.

இ-ள். அன்பே திருமேனியாகக்கொண்ட அகத்தியமாமுனியே! யான் சொல்லுவதைக் கவனிப்பாயாக. ஜெனித்த வருடம், மாதம், தேதி, இராசி இவைகளை யறியாத பேர்களுக்கும், இனி வரும் இன்ப துன்பங்களை யறியும் உபாய மெப்படி யெனில்? அவ்வவர்களுடைய, திருநாமத்தின் முதலெழுத்தின் மூலமாய் நக்ஷத்திரமறிந்து அந்த நக்ஷத்திரத்தின் மூலமாய் இராசியறிந்து அவ்விராசிக்கு மாதாமாதம் நவகோட்கள் மாறிவரும் ஸ்தானபேதப்படியே நன்மையுந் தீமையு முண்டாகும். ஆகையால் அவ்வகையாய் வருகாலபலனை யறிவதே சிலாக்கியம். அவ்விபரத்தை யுரைப்பேன் கேட்பாயாக எ-று. 2

சந்தேக விடை

நாமத்தால் நாளறிந்து பலனையாய்ந்து
நவிலுமென்றீர் மானிடர்க்கு பலன்களெல்லாம்
நாமமோ பலபேர்க்கு ஒன்றுஆனல்
நவிலுகின்ற பலனவற்கு எல்லாம்ஒன்றோ
நாமமது பலபேர்க்கு ஒன்றேயானல்
நவிலுவித மெவ்விதமென் றுரைத்தல்வேண்டும்
நேமத்தோ டுனைத்துதித்தே னிதியேயுன்றன்
நிறைந்தவாய் சொற்களினை நோக்குநானே.

இ-ள். கழுகாஜலபதே! உமது வாக்கினிடத்து உண்டாகும் அமுதத்துக்கு ஒப்பான மொழிகளை எதிர்நோக்கிய வண்ண மிருக்கும்

அடியேன் சந்தேக மென்னவெனில், ஒரே திருநாமத்தையுடைய அனேகருக்கு, நீர் நவின்றபடி நாமத்தின் முதலக்ஷரத்தால் நக்ஷத்திர ராசியறிந்து பலனுரைப்பது எப்படி? அவ்வாறு உரைப்பது பிழை யின்றி யமையுமா? என்பதை உரைக்குமாறு என்னை ரக்ஷிக்கவந்த தெய்வமே! உம்மை பக்தியோடு வணங்கித் துதித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன் எ-று. 3

கூறியதோர் பலபேர்க்கு நாமமொன்றாய்
குறிப்பிடுவ தசரீரி யானதாலே
பேருடனே சொன்னமொழி பிச்காதப்பா
பிரித்துரைப்பா யிப்பலனை பிசகிராது
வீருடனுத்தமர் கொடியர் விபரமாய்ந்து
விளங்குபல னுரைத்திடுவாய் விவரமாக
சீருடைய அகத்தியனே சந்தேகத்தை
சீக்கிரமா யெடுத்துரைத்தால் விளம்புவேனே.

இ-ள். அகத்தியனே! நாமம் என்பது ஒவ்வொருவருக்கும் அசரீரியா யுண்டாவதாகையால், அந்நாமத்தின் முதலக்ஷரப்படி நக்ஷத்திர ராசியறிந்து, கொடியர், சுபர் என்கிற விபரப்படி பலன் உரைப்பாயானால் பிசகுண்டாகமாட்டாது. சிறப்புபெற்ற அகத்திய மாமுனியே! இன்னுமுள்ள சந்தேகங்களையுங் கேட்கின் விவரமாய எடுத்துரைப்பேன் கேட்பாயாக எ-று. 4

கொடியோர் சுபர் என்ற விஷயவினா

கொடியவருங் குற்றமிலா ரெவரோவென்னும்
குறிப்பதனை யுரைப்பதுடன் கோபமின்றி
கடியவருஞ் சுபர்கள்வரை ராசியொன்றில்
கணக்காக விருக்குமந்த காலந்தன்னை
நெடிய அசுரர்படையை யறுத்தமாயா
நினைப்பணிந்தோர்க் கருளளிக்கும் நெறியேயிந்த
வடிவதனை யெடுத்துரைப்பாய் வணங்கினேனே
வள்ளியிட நாயகனே போற்றி போற்றி.

இ-ள். அனேகமாயிரம் கொடுஞ்சூரர்களை வதைத்தும், உம்மை பக்தியோடு துதிப்பவரை ரக்ஷித்தும், உம்மைப் பணிந்தோர்க்கு எல்லா சுகமும் அளித்து உதவிய வள்ளிநாயகனே! உமது பாதார விந்தத்தைப் போற்றி செய்து விண்ணப்பிக்கும் விவரமென்ன வெனில், கொடியோர் எவர்? நல்லோர் எவர்? அவ்வவர்கள் ஒவ்வோர் இராசியிலும் வாசஞ்செய்யுங் காலத்தினளவு எவ்வளவு? என்பதை அடியேன் அறியும்பொருட்டு விவரமாயெடுத்து உரைப்பீராகவும் எ-று. 5

கொடியவரோ இரவிசனி செவ்வாய்பாம்பு
குற்றமிலா இறைவனுடன் மதியும்வெள்ளி

வடிவுடைய புதனென்பார் வழக்கமாக்
வாழுமந்த காலமதை வரிசையாய்க்கேள்
படிபுகழும் மன்னவனே ஆண்டுஒன்று
பக்ஷமுள புதன்வெள்ளி ரவியிம்மூவர்
நெடியவொரு மாதம்வரை ராசியொன்றில்
நிலைத்திருப்பார் மற்றவர்க்கும் விவரங்கேளே.

இ-ள். அகத்தியமாமுனியே! பொதுவாக ரவி-சனி-செவ்வாய்-இராகு-கேது இந்த ஐவருங் கொடியோரென்றும், சந்திரன்-சுக்கிரன்-புதன்-குரு இவர்களைச் சுபர்களெனவுங் கூறுவதுண்டு. இனி அவர்கள் ராசியொன்றுக்கு வாசஞ்செய்யுங் கால அளவைக் கேட்பாயாக. யாவரும் போற்றப்பட்ட குரு ஓர் வருடமும், சூரியன்-புதன்-சுக்கிரன் இவர்கள் ராசியொன்றில் ஓர் மாதமும் வாசம் செய்வர். மற்றையோர்கள் வாசம் செய்யும் விவரமுங் கேட்பாயாக எ-று. 6

கிரக வாசம்

சுந்திரஞ்சேர் மந்தனுக்கு வருடம்ரெண்டும்
சுகமான திங்களது ஆறதாகும்
அந்தமிகுஞ் செவ்வாயோ மாதம்ஒன்றும்
அழகான பதினைந்து நாளதாகும்
வந்தகுறை தீர்க்குமந்த மதியோநாட்கள்
வளமான இரண்டுடனே காலதாகும்
விந்தைசெறி பாம்புகளோ ஆண்டுஒன்று
விளக்கமுறு மாதங்க ளாறதாமே.

இ-ள். அழகுபொருந்திய சனியோ இராசி யொன்றுக்கு இரண்டரை வருஷமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், குறையகற்றுஞ் சக்திவாய்ந்த சந்திரன் இரண்டேகால் நாட்களும், இராகு-கேதுக்கள் இராசி ஒன்றில் ஒன்றரை வருடமும் வாசம் செய்வார்கள் எ-று. 7

அல்லல் அகற்றுங்குருவே அன்னோர்க்கங்கு
அமர்ந்திருக்குங் காலமதி னளவுதன்னை
தொல்லைபிலா தருள்செய்வாய் சுருக்கமாக
தோகைமயில் மீதமருந் தோன்றலேயென்
அல்லலதைத் தீர்க்கவந்த குருவேஅன்பின்
ஆரமுதே சர்க்கரையே அறிவேயிந்த
நல்லமொழி தனையுரைத்து அருள்வாயென்று
நான்துதித்தே னென்குறையைத் தீர்ப்பாய்போற்றி.

இ-ள். என் மனத்துயரை நீக்கவும், துன்ப முதலிய கொடிய பிணி யணுகவொட்டாமல் காக்கத் தகுந்தவரும், அமுதத்திலும் சர்க்கரையின் மேலான யினிமையையுடைய தேவதேவே! மேலே சொன்ன கோட்கள் ஒவ்வொரிராசியிலும் வாசம் செய்யுங்காலங்களில் பார்வைகாலம் எவ்வளவென்பதை அடியேன் அறியும்வண்ணம்

உரைத்தருள வேண்டுமாய் உம்மை அனேகவிதமாய்த் துதித்து வேண்டிக்கொள்ளுகிறேன் எ-று. 8

கோசார பார்வை காலம்

உரைசெய்வா ரிரவிக்கு நாட்களைந்து
உத்தமனே புதன்வெள்ளிக் கேழதாகும்
தரைமகனுக் கெட்டாகும் நாட்கடன்னில்
தவரில்லா வியாழனுக்கு மாதம்ரெண்டு
முரையுடைய நீலனுக்கு மாதமாறு
முழங்கிடுவார் பாம்புகட்கு மாதம்மூன்று
திரமுடைய பார்வையென்பார் தெரிந்துகொள்வாய்
தீதில்லை யிவ்வகையாய்த் தெரிவிப்பாயே.

இ-ள். நவகோட்கள் ஒவ்வொரு ராசியிலும் வாசம் செய்யுங் காலங்களில் பார்வை காலங்கள் எவ்வளவெனில்? சூரியனுக்கு ஐந்து நாளும், புதன் சுக்கிரன் இவ்விருவர்களுக்குந் தனித்தனியே ஏழு நாட்களும், செவ்வாய்க்கு எட்டுநாளும், குருவுக்கு இரண்டு மாதங் களும், சனிக்கு ஆறு மாதங்களும், இராகு கேதுகட்கு தனித்தனியே மூன்று மாதம் பார்வையென்று சொல்வர் எ-று. 9

முதலெழுத்தால் நக்ஷத்திரம் அறிவது

மின்னுகலை நிறைந்தமதி சிரமணிந்த
மேலவற்கு புத்திரரே யரைநொடிக்குள்
வன்னமிகு புவியதனை வலமேவந்தாய்
வானவரும் போற்றுகின்ற வளமேஎந்தன்
சின்னமொழி தனக்கிணங்கி யருள்சுரந்த
சின்மயமே முதலெழுத்தால் நாட்கள்தன்னை
பின்னமிலா தறியும்வகை யுரைப்பீரையா
பேதையெந்தன் குறையகலப் போற்றினேனே.

இ-ள். சந்திரனை சடாபாரத்திலணிந்த சிவபிரானுக்கு இளைய புத்திரரே! மாங்கனிக்காக அரைநொடிக்குள் இப்புவியை மயில்மீதேறி வலம் வந்த அன்பே! வானோர்முதல் யாவரும் போற்றத்தகுந்த பொன்னே! அடியேன் மொழியை யொருபொருட்டாயெண்ணி பதி லளித்து என் குறை தீர்க்கும் தோன்றலே! நாமத்தின் முதலெழுத் தால் நட்சத்திரமறியும் விவரம் எப்படி? அதனை அடியேன் அறியும் வண்ணம் எடுத்துரைப்பீராக எ-று. 10

பேசுவர்காண் நாளொன்றிற் கீரிரண்டு
பிசகாத அக்ஷரமாய் துடருமந்த
தேசுபெரு மக்ஷரங்கள் வேறதாகும்
தேடறியா அக்ஷரமொவ் வொன்றினிற்கு
நேசமுள காலொன்று நாட்குளன்பர்
நிச்சயமா யிவ்வகையை யாய்ந்துபார்த்து

பாசமிகு விவரமதை யறிவாயப்பா
பாருலகில் பலனுரைக்க பக்ஷந்தானே.

இ-ள். அகத்தியமாமுனியே! நக்ஷத்திர மொன்றுக்கு நான்கு அக்ஷரங்களாகும். அவ்விவரங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நக்ஷத்திரபாத மெனப்படும். பின்னும் தொடர் எழுத்துக்களுமுண்டு. இவற்றின் விவரங்களை யாராய்ந்தே நக்ஷத்திரபாதங்கள் அறியவேண்டும். இவ்வாறறிந்து பலனுரைக்கின் சித்தியாகும். ஆதலால் அவற்றின் விவரங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக எ-று. 11

பெயருக்குரிய நக்ஷத்திர அக்ஷர விவரங்கள்

நெம்பர்	நக்ஷத்திரம்	அக்ஷரம் 1 பாத	2 பாத	3 பாத	4 பாத	தொடர் எழுத்து
1	அசுபதி	சு	செ	சொ	ல	அ-ஆ-இ-ஈ
2	பரணி	லீ	லு	லெ	லொ	வ-வா-வி-வீ
3	கார்த்திகை	ஆ	ஈ	ஊ	ஏ	வெ-வே-வை-வௌ
4	உரோகணி	ஒ	வா	வீ	வு	கூ-கு
5	மிருகசிரம்	வே	வோ	கா	கி	கெ-கே-கை
6	திருவாதிரை	கூ	க்க	ஙு	ச	கொ-கோ-கௌ
7	புனர்பூசம்	கே	கோ	ஹ	ஹி	மெ-மே-மை
8	பூசம்	கு	கெ	ஹோ	ட	ம-மா-மி-மீ-மு-மூ
9	ஆயிலியம்	டீ	டு	டே	டோ	மொ-மோ-மௌ
10	மகம்	மா	மீ	மு	மே	ப-பா-பி-பீ
11	பூரம்	மோ	டா	டி	டு	பு-பூ
12	உத்திரம்	டே	டோ	பா	பி	பெ-பே-பை-பொ-
13	அஸ்தம்	பூ	ஷ	ணா	ட்டா	த-தா [போ-பௌ
14	சித்திரை	பே	போ	ரா	ரி	தி-தீ-து-தூ-தெ-தே
15	சுவாதி	ரூ	ரே	ரோ	தா	ந-நா-நி-நீ-நு-நூ
16	விசாகம்	தீ	தூ	தே	தோ	நெ-நே-நை
17	அனுடம்	நா	நீ	நு	நே	யு-யூ
18	கேட்டை	நோ	யா	இ	யு	உ-ஊ-எ-ஏ-ஐ
19	மூலம்	எ	யோ	பா	ப்பி	ஒ-ஓ-ஔ
20	பூராடம்	பூ	தா	ப	ட	க-கா-கி-கீ
21	உத்திராடம்	பே	போ	ஜ	ஜி	ஞு-ஞூ-ஞி
22	திருவோணம்	ஜூ	ஜே	ஜோ	க	தொ-தோ-தௌ
23	அவிட்டம்	க	கி	கு	கே	நொ-நோ-நௌ
24	சதயம்	கோ	சா	சி	சூ	யா
25	பூரட்டாதி	ஸே	ஸோ	தா	தி	ச-சா-சி-சீ
2	உததிரட்டாதி	தூ	ஸ	த்தா	தி	சு-சீ-செ-சே-சை
27	ரேவதி	தே	தோ	ச்சா	சி	சொ-சோ-சௌ

நக்ஷத்திர இராசியறியும் விவரம்

12 பூரட்டாதி-4 உத்ரட்-1-2-3-4 ரேவதி-1-2-3-4 மீனம்	1 அசுவதி 1-2-3-4 பரணி-1-2-3-4 கார்த்திகை-1 மேஷம்	2 கார்த்திகை-3 உரோகணி-4 மிருகசிர்ம்-2 இடபம்	3 மிருகசிரம்-2-3 திருவா-1-2-3-4 புனர்பூச-1-2-3 மிதுனம்
11 அவிட்டம்-3-4 சதயம்-1-2-3-4 பூரட்டா-1-2-3 கும்பம்	நக்ஷத்திரங்களுக்கு இடையில் தோன்றும் எண்கள் நக்ஷத்திர பாதங்களைக் குறித்த தாகும்		4 புனர்பூசம்-4 பூசம்-1-2-3-4 ஆயிலி-1-2-3-4 கடகம்
10 உத்திராட 2-3-4 திருஓ-1-2-3-4 அவிட்டம்-1-2 மகரம்			5 மகம்-1-2-3-4 பூரம்-1-2-3-4 உத்ரம்-1 சிங்கம்
9 மூலம்-1-2-3-4 பூராட-1-2-3-4 உத்திராடம்-1 தனுசு	8 விசாகம்-4 அனுஷ-1-2-3-4 கேட்-1-2-3-4 விருச்சிகம்	7 சித்திரை-3-4 சுவாதி-1-2-3-4 விசாகம்-1-2-3 துலாம்	6 உத்திரம்-2-3-4 அத்தம்-1-2-3-4 சித்திரை-1-2 கன்னி

அகத்தியமாமுனியே! மேலேசொன்ன நாமத்தின் முதலெழுத்தால் நக்ஷத்திரம் தெரிந்து கீழே சொல்லியபடி இராசி யறிந்து, அவ்விராசியை அவரவர் லக்கினமாகக்கொண்டு கோசாரபலன் சொல்ல வேண்டும் என்பதாம். 12

பாரெல்லாம் போற்றுகின்ற இரவியோடு
பளிங்கான சசிகுஜனும் புந்தியோடு
ஏருலவுங் குருவுடனே வெள்ளிதானும்
இன்புடைய சன்னேடு பாம்புமட்டாய்
பாருலகில் மாந்தருக்கு பலனளிக்கும்
பத்திரமும் பலவிதமும் உரைப்பேன்நன்ருய்
பேருடைய அகத்தியனே கவனமாய்க்கேள்
பெரியோர்கள் நூல்முறையாய் விளம்புவேனே.

இ-ள். ஓ அகத்தியமாமுனியே! நவகோட்களும், ராசியொன்றில் தங்கள் தங்களது காலெல்லையில் ஒவ்வொரு ராசியிலும் நின்று இப் பூமியிலுள்ளோர்க்கு நற்பலன் தீப்பலன் கொடுக்கும் விவரத்தைச்

சகல சாஸ்திரங்களேயும் அறிந்த மேதாவிகளால் கூறியவண்ணம் கூறுவேன் கேட்பாயாக எ-று. 13

சூரியன் கோசாரம்

சொல்லுமப்பா ஜென்மத்தி லிரவிநின்ருல்
 சோதனையாய் சொரிசிரங்கு பயித்தியமுண்டு
அல்லலுண்டு அலேச்சலுண்டு அவனிமீதில்
 அன்பான சோதரர்கள் பிரிவார்பாரு
எல்லேயிலா தனம்யாவும் சேதமாகும்
 இவனுக்கு வறுமையுண்டு என்னசொல்வேன்
வல்லப்பா பலபேர்க்கும் விரோதமாகி
 வாழ்ந்திருப்பா னெனப்பெரியோர் சாற்றுவாரே.

இ-ள். சூரியன் ஜென்மத்தில் வாசம் செய்யும் மாதம் 1-லும் அவர் தரும்பலன் என்னவெனில்? சொறியுண்டாதல், சிரங்கு உண்டாதலும், பயித்தியம் உண்டாதலும், அளவிடமுடியாத அல்லல் அலேச்சலும் அன்பார்ந்த சகோதரர்கள் தன்னைவிட்டுப் பிரிதலும், தன் கையிலுள்ள அளவற்ற தனம் முதலியன நாசமாதலும், வறுமையுண்டாதலும், அனைவருக்கும் விரோதமுடையவனுகி யிருப்பான் எனக் கூறுவர் எ-று. 14

இரவியஞ்சா மிடந்தனிலே திங்களெட்டி
 லேழதனிற் செவ்வாயு மிரண்டிற்புந்தி
விரவுகுரு மூன்றிடத்தில் சுங்கனுறில்
 மிக்கசனி ஜென்மத்தில் மிகுபாம்பொன்பான்
திரமுடனே இத்தலங்கள் சேருமாயின்
 சிறைகாவல் வெகுநோயாம் சிலுகுசண்டை
உரைத்த மானச்சேதம் மரணச்சேதம்
 உற்றபலன் ஆகாதென் றுரைக்கலாமே.

இ-ள். சந்திரனுக்கு 5-ல் ரவி, 8-ல் மதி, 7-ல் செவ்வாய், 2-ல் புதன், 3-ல் குரு, 6-ல் சுக்கிரன், 1-ல் சனி கேது அல்லது ராகு 9-ல் நின்றகாலம் அந்த ஜாதகனுக்கு சிறையுண்டாதல், காவல் உண்டாதல், அளவிடமுடியாத நோய் உண்டாதல், சிலுகு உண்டாதல், சண்டை உண்டாதலும், மானம் உண்டாதல், மரணம் உண்டாதல் முதலியனவும், மகா கொடியபலனே ஓ்ண்டாகும் என்றுங் கூறுவாய் எ-று. 15

கண்டங்கள் நாலுமெட்டுக் கருதிய சனிசெய்நிற்க
தெண்டங்கள் மிகவுண்டாகும் திரவியம் நாசமாகும்.
கொண்டதோர் மனைவிவேறுங் குறித்திடும் செட்டுநட்டம்
பண்டுள நாடுவிட்டு பரதேசம் போவன்ருனே.

இ-ள். கண்டங்களாகிய 1-4-7-10-என்னும் இடத்திலேனும், 4-8-ஆம் ராசியிலேனும் கோசாரப்படி சனி செவ்வாய் இவர்கள் நிற்பாரேயாமாஞல் பலதண்டனை உண்டாதல், திரவியநாசம் உண்டாதல், மனைவி பிரிந்துபோதல், பூஸ்திதி விரயமாதல், தன் சுயதேசத்தை விட்டு அந்நியதேசம் செல்லுதல்முதலிய பலன் உண்டாகும் எ-று. 16

ஆதித்தன் பன்னிரண்டி லஷ்டமம் நாலிலஞ்சில்
வாதித்த ஜென்மம்ரெண்டில் வந்துதான் நிற்குமாகில்
வேதிக்கும் வெதுப்புகாச்சல் மீறிய வயிற்றுநோயும்
தீதுற்ற மனையாள்கேடு சிரங்குடன் பிணியுமுண்டாம்.

இ-ள். சூரியனுனவர் கோசாரப்படி ஜென்மம் 2-4-5-8-12-முதலிய ராசிகளில் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? மனவியாகூலம், வெதுப்புநோய், காச்சல் உண்டாதல், மிக்க வாதையைத் தரத்தகுந்த வயிற்றுநோய், மனைவிக்குத் துன்பம், சிரங்கு முதலிய நோய் உண்டாகும் எ-று. 17

இரவிதான் பகைநீசத்தி லிருப்பிடம் விட்டுப்போகும்
மருவிய வாதநோயாம் வரன்பொருள் மாடுகேடு
எரியினுற் பயமதாகும் எண்ணிய கருமமாகா
குருகிய புருவத்தாளே குலதெய்வம் குற்றம்சொல்லே.

இ-ள். கோசாரகாலத்தில் மேலேசொன்ன சூரியன் தனக்கு பகை க்ஷேத்திரத்திலேனும், நீசக்ஷேத்திரத்திலேனும் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? தனது சுயயிடத்தை விட்டு மாறுதலும், வாதநோய் உண்டாதல், பொருள் வாகனம் முதலியன நாசமாதலும், அக்கினியால் பயமும், தொடுத்த காரியம் பங்கமும், குலதெய்வத்தால் குற்றம் முதலியனவும் உண்டாகுமென சிறிய புருவத்தினையுடைய பெண்பாவாய்! இப்பூமியிலுள்ளோர்க்குக் கூறுவாயாக எ-று. 18

ஞாயிறு மூன்றிலாறில் நயந்தபன் னென்றிலொன்பான்
தூயுறும் பத்தில்நின்ருல் சுகமது மிகவுண்டாகும்
சேயசங் கடகமானுற் றேன்வளங் குழலாள்சேர்வர்
ஆயிழை யாளேசொல்லாய் ஆதித்த னிருப்பதாலே.

இ-ள். ஓ பெண்பாவாய்! மேலேசொன்ன ரவி சந்திரலக்கினத்திற்கு மூன்றிலிருந்தாலும், 6-11-10-முதலிய இடங்களில் வாசம் செய்யும்போது நல்ல மேலான சுகங்களும் உண்டு. மற்றும் மேற்படி ரவி கடகராசியில் வாசம் செய்யும்போது அழகிய பெண் சேருதலும் உண்டாகுமென இப்பூமியிலுள்ள மானிடர்களுக்குக் கூறுவாய் எ-று. 19

நில்லுமுற் கதிரோனுக்ஷி நட்பதில் நிற்குமாயின்
நல்லபற் பொருளுமுண்டாம் நாடெல்லாம் நன்மையாகும்
அல்லலும் பிணியும்சேரு மருக்கனர் பகைநீசத்தில்
கொல்லுமே குளிரும்வெப்பும் குவலயங்குற்றமாமே.

இ-ள். மேலேசொன்ன சூரியன் கோசாரப்படி தனக்கு நட்பு ராசியிலேனும், ஆக்ஷி ராசியிலேனும் வாசம் செய்யுங்காலம் அழகிய பல பொருள்கள் வந்து சேருதலும், இப்பூமியெங்கும் தனக்கு நன்மையே செய்தலும் உண்டாகும். மேற்படி ரவி - பகை - நீசம் என்னும் ராசியில் வாசம் செய்யுங்காலம் அளவிடமுடியாத அல்லல் உண்டாதலும், பிணி உண்டாதலும், குளிர் உண்டாதல், வெப்பு நோய் உண்டாதலும், இப்பூமியில் உண்டாகும் சகலமும் தீமையாகவே இருக்குமெனக் கூறுக எ-று. 20

சந்திரன் கோசாரம்

திங்களும் பன்னிரண்டில் திகழிரண் டைந்திலெட்டில்
அங்கது நாலதாகில் அதுசெயுங் குற்றங்கேளீர்
மங்கிடு மனையாள்பிள்ளை வயிற்றுநோய் போக்குமூலம்
நங்கொடி கெற்பமங்கை யானவள் குற்றம்சொல்லே.

இ-ள். அவரவர்களுடைய நக்ஷத்திர ராசி கோசாரப்படி 2-4-5-8-12-என்னும் இடங்களில் சந்திரன் வாசம் செய்யுங்காலம் அவர் தரும் கொடியபலன்களைக் கூறுமிடத்து தனது மனைவி மைந்தர்களுக்குத் துன்பமும், வயிற்றுநோய், பேதி முதலியனவும், மூலநோய் உண்டாதலும், தனது இல்லத்தின்கண் கெர்ப்பமாயிருந்த மரித்துப் போனவள் சாபமும் உண்டாகுமெனக் கூறுக எ-று. 21

சந்திரன் ஜென்மமேழில் தசமுடன் மூன்றிலொன்பான்
வந்துபன் னொன்றுஆறில் வகையுடன் பொருந்திநின்றால்
சந்ததங் குதிரையானை தண்டிகை பதார்த்தமுண்டாம்
இந்துவி னுதலாய்கேளாய் இன்பமு மிகவுமாமே.

இ-ள். சந்திரனையொத்த அழகிய புருவத்தினையுடைய பெண்பாவாய்! மேலேசொன்ன சந்திரன் ஜென்மம் 3-6-7-9-10-முதலிய ஸ்தானங்களில் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? யானை-குதிரை-தண்டிகை முதலியன சேருதலும், அனேக பூஸ்திதி உண்டாதலும், சந்தோஷம் முதலியனவும் உண்டாகுமெனக் கூறுவாயாக எ-று. 22

மதிதனக் காக்ஷிநட்பி லுச்சத்தே நிற்குமாகில்
நிதிபெறும் பூஷணங்கள் நேரிழை விவாகமுண்டாம்
சதிவரும் சலத்தாற்கெண்டம் சந்திரன் பகைநீசத்தில்
அதிரவே ஜலவியாதி அரும்பொருள் கேடுசொல்லே.

இ-ள். மேலேசொன்ன் சந்திரன் தமக்குடைய ஆக்ஷி வீட்டி லேனும், உச்சராசியிலேனும், நட்பு க்ஷேத்திரத்திலேனும் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? செல்வம் உண் டாதல், பூஷணம் உண்டாதல், கலியாணம் உண்டாதல் முதலியன வும், தமக்குப் பகை நீசமாகிய க்ஷேத்திரங்களில் வாசம் செய்வாரே யாமானல் ஜலகண்டமும், சீதளநோயும், கைப்பொருள் சேதமும் உண்டாகுமெனக் கூறுவாய் எ-று. 23

மிக்கவே ழெட்டிலேந்தில் விளங்குமீ ராறுஜென்மம்
வக்கிர னிரண்டில்நாலில் பத்துடன் வந்துநின்றால்
சிக்கெனச் சிலுகுண்டாகும் தேகநோ யுதரப்பீடை
உக்கிர மானதீயா லுளைப்புடற் குடைச்சல்தானே.

இ-ள். மேலேசொன்ன சந்திரன் 1-5-7-8-12 முதலிய இடங் களில் வாசம் செய்யும்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? சிலு குண்டாதல், வியாதியால் வாதை உண்டாதல், வேட்கைநோய் உண் டாதல், அளவிட முடியாத் உஷ்ணம், உளைப்பு, குடைச்சல் முதலிய வற்றால் வாதை உண்டாகுமெனக் கூறுக எ-று. 24

செவ்வாய் கோசாரம்

குருதியின் பகையாற்சண்டை கொலைபொருள் கேடுசொல்லு
அரியதோர் கன்னிமார்கள் அதிடன் முனிகருப்பன்
எரியினுற் பயமதாகும் எண்ணிய கருமமாகா
குருகிய புருவத்தாளே குலதெய்வம் குற்றம்சொல்லே.

இ-ள். மேலேசொன்ன செவ்வாய் இன்னும் எவ்வித பலனைத் தருவாரெனில்? பூமி மூலமான பகை முதலியவற்றால் சண்டை உண் டாதலும், கொலை உண்டாதல், பொருள் சிலவு உண்டாதல், பல தெய்வங்களாகிய கன்னிகள்-முனி-கருப்பன் முதலிய துஷ்டதேவதா பீடையும் அக்கினியால் பயம் உண்டாதலும், நினைத்த காரிய விக்கின மும், தன் குலதெய்வத்தால் குற்றம் முதலியனவும் உண்டாகுமென வுங் கூறுக எ-று. 25

சேயவ னென்பதாறிற் சிறந்தபன் னென்றுமூன்றில்
ஆயவே ழதனில்நின்ற லாடையாபரண முண்டாம்
நேயமாம் மனையாள்சேர்த்தி நிச்சயமக்க ளுண்டாம்
தூயபால் வெண்ணெய்நெய்யும் சுகமெனச் சாற்றுவாரே.

இ-ள். சந்திரலக்கினத்திற்கு 3-6-7-9-10-11 முதலிய இடங் களில் செவ்வாய் கோசாரப்படி வாசம் செய்யுங்காலம் அவர் தரும் பலன் என்னவெனில்? அழகிய ஆடையுண்டாதல், ஆபரமுண்டாத லும், அருமைமனைவி சேருதலும், புத்திரருண்டாதல், நன்மையினை யுடைய பால்-வெண்ணை-நெய் முதலியன கிடைத்தலாகிய பலன் உண்டாகும் எனக் கூறுவாய் எ-று. 26

செய்யவ னுக்ஷிநட்பி லுச்சத்தே நிற்குமாகில்
மையுறு மணியும்முத்து மகிழ்ச்சியாய் மாதுசேர்வள்
ஐயமுஞ் சுரமுமுண்டா மழலவன் பகைநீசத்தில்
பையவே உயுத்தமாகும் பகைவரும் மனதிற்கேடே.

இ-ள். மேலேசொன்ன செவ்வாய் தனக்கு ஆக்ஷியாயுள்ள ராசியிலேனும், உச்சராசியிலேனும் இருப்பாரே யாமானல் அவர் தரும் பலன் என்னவெனில்? எவருங் கொண்டாடத்தகுந்த மணிமாலை முத்துமாலை முதலியன கிடைத்தலும், சந்தோஷத்தைத் தரத்தகுந்த பெண் சேருதலும் உண்டாகும். மற்றும் மேற்படி செவ்வாய் பகை ராசியிலும், நீசராசியிலும் வாசம் செய்யுங்காலம் சந்தேகம் சுரம் முதலியனவும், சண்டை யுண்டாதல் பகை முதலியனவும் உண்டாகும் எ-று. 27

புதன் கோசாரம்

பலன்புந்தி நாலேந்தேழு பன்னிரண்டொன்பான் சென்மம்
நலமிலே மூன்றுநான்கில் நற்பொரு ளூற்றூர்நாசம்
சலநில வழக்குசண்டை தான்பிணைச் சொல்லச்சேதம்
பலவித மத்திபங்கள் பண்டிதன் பகரும்நாளே.

இ-ள். சந்திரலக்கினத்திற்கு 1-3-4-5-7-9-12 முதலிய இடங்களில் புதன் வாசம்செய்யும் காலம் அவர் தரும் பலன் என்னவெனில்? நன்மையைத் தரத்தகுந்த தனது சுயபொருளானது நாசமாதலும், தன் பந்துக்கள் நாசமும், நிலத்தாலும் ஜலத்தாலும் சண்டை முதலியனவும், மனைவி நாசம், பற்பல விதமாகிய மத்திபபலன்களும் உண்டாகும் என புதன் கோசார காலங்களுக்குக் கூறுவாயாக எ-று.

மதிமகன் பகையினலே வன்சிறை தேகநோயால்
அதிரவே ஜலத்தாலகெண்டம் ஆடுமா டடிமைசேதம்
பதிபினி லிருந்துவாழும் பகைவரும் பெண்தெய்வத்தால்
சதிவரும் பிணியுமுண்டாம் சஞ்சல மிகுதியாமே.

இ-ள். மேலேசொன்ன புதன் தனக்குப் பகைக்ஷேத்திரங்களாயுள்ள இடங்களில் வாசம் செய்வாரே யாமானல் அவர் தரும் பலன் என்னவெனில்? சிறைவாசம் தேகநோயுண்டாதலும், மிக்க பயத்தினைத் தரத்தகுந்த ஜலத்தால் கெண்டமும், ஆடு மாடு அடிமையாள் முதலியவர்கள் நாசமாதலும், தன்னில்லத்தின்கண் குலதெய்வமாய் விளங்கி இராநின்ற பெண்தெய்வத்தால் ஆபத்தும், பிணி முதலியன உண்டாதலும், அளவிடமுடியாத சஞ்சலங்களும் உண்டாகும் எனக் கூறுவாய் எ-று. 29

புந்தியும் ஆறெட்டோடு பொருந்துபன் னென்றுபத்து
முந்திரண் டிடத்தில்நிற்கில் மாதீர்த்த மாடல்மூர்த்தி
வந்திடும் கல்விசுற்றம் வஸ்திராபரண மெல்லாம்
தந்திடு மாசர்பூஜை தவமது நன்மையாமே.

இ-ள். மேலேசொன்ன புதன் கோசாரரீதியாய் சந்திரனிருந்த ராசிக்கு 2-6-8-10-11 முதலிய க்ஷேத்திரங்களில் வாசம் செய்யுங் காலம் அவர் தரும் பலன் என்னவெனில்? மகாபெரிய தீர்த்தங்களில் சென்று ஸ்நானம் செய்தலும், குடும்பத்தில் லக்ஷிமிவிலாசமும் கல்வி யுண்டாதல் சுற்றத்தாருண்டாதல் முதலியனவும், வஸ்திரம், ஆபரணம் முதலியன சேர்க்கையும், அரசர்கள். சேர்க்கையும் தான் செய்யும் காரிய நன்மை முதலியனவும் உண்டாகும் எ-று. 30

புதனுக்ஷி யுச்சம்நட்பிற் பொருந்தியே நிற்குமாகில்
பதமுறுமாதர் சேர்த்தி பாற்பசு பூமிலாபம்
விதவித சுரங்களுண்டாம் விரகமால் பகைநீசத்தில்
அதனமாஞ் சலனம்சண்டை யென்றனர் தமிழ்வல்லோரே.

இ-ள். மேலேசொன்ன புதன் தமக்குள்ள உச்சராசியிலேனும், நட்புராசியிலேனும் வாசம் செய்யுங்காலம் அவர் தரும் பலன் என்னவெனில்? அழகிய மாதர்கள் சேர்த்தியுண்டாதலும், பால் சேர்க்கை, பசு சேர்க்கை, பூமிலாபம் முதலியனவும் உண்டாகும். இதுவன்றி மேலேசொன்ன புதன் பகைக்ஷேத்திரம் அல்லது நீசக்ஷேத்திரம் முதலிய ராசிகளிலிருக்கில் அனேகவிதமான சுரம் முதலியனவும், தாங்கமுடியாத தரித்திரம், சண்டை முதலியன வுண்டாகுமென தமிழ்சாஸ்திரமறிந்த மேலோர் கூறுவர் எ-று. 31

குரு கோசாரம்

பொன்னவன் மூன்றுநாலிற் பொருந்துபத் தாறிலெட்டில்
உன்னிய பன்னிரண்டில் ஒருசன்மந் தன்னில்நின்றால்
மன்னரால் பதியும்சேதம் மாதரால் வியாதிமந்தம்
நன்னிய தலைமயக்கம் நவிலுவாய் புண்ணுண்டாமே.

இ-ள். எவரும் போற்றத்தகுந்த குரு 1-3-4-6-8-10-12 முதலிய க்ஷேத்திரங்களில் இருப்பாரேயாமானால் அவர் தரும் பலன் என்னவெனில்? தான் இருக்கும் க்ஷேத்திரத்தை விட்டு மாறுதலும், ஸ்திரீகளால் வியாதி, மந்தபுத்தி, தலைசுற்றல், தனது சரீரத்தில் புண்ணுண்டாதல் முதலிய பலனே உண்டாகும் எனக் கூறுக எ-று.

மந்திரிபன்னென் றென்பான் வளம்பெற ஏழிலஞ்சில்
வந்திரண் டிடத்தில்நிற்கில் மன்னர்க்கு நல்லனுவன்
சுந்தர மனைவிமக்கள் சோபனம் சிவிகையுண்டாம்
தந்திரத் துடனேபூமி யாளவுந் தலைவனாமே.

இ-ள். மேலேசொன்ன குரு 2-5-7-9-11 முதலிய க்ஷேத்திரங்களில் கோசாரப்படி வாசம் செய்யுங்காலம் அவர் தரும் பலன் என்னவெனில்? அரசர்களால் மெச்சத்தகுந்த அந்தஸ்தும், அழகுபொருந்திய மனைவி மக்கள் உண்டாதலும், சுபசோபனுதிகள் உண்டாதலும், சிவிகை என்னும் பல்லக்கு உண்டாதலும், மிக்க தந்திரத்துடன் இப்பூமியையும் ஆளத்தகுந்த நிலையினையுடையவனுவான் எ-று. 33

மறையவ னுக்ஷிநட்பி லுச்சத்தே நிற்குமாகில்
குறைவிலா ராஜயோகம் கொடியிடை மாதர்சேர்த்தி
அறைபிணி மிகுதியுண்டாம் அந்தணன் பகைநீசத்தில்
வறுமையா மனையாள்சேதம் வாழ்பொருள் கேடுசொல்லே.

இ-ள். மேலேசொன்ன குரு தமக்குடைய ஆக்ஷிராசியிலேனும், நட்புராசியிலேனும், உச்சராசியிலேனும் நிற்க அக்காலம் தரும் பலன் என்னவெனில்? குறைவற்ற ராஜயோகம் உண்டாதலும், அழகு பொருந்திய பெண்கள் சேர்த்தியும் உண்டாகும். இதுவன்றி பகை ராசி அல்லது நீசராசியில் இருப்பாரேயாமாயின் அக்காலம் அளவிட முடியாத நோய் முதலியன உண்டாதலும், வறுமையுண்டாதலும், மனைவி நாசமும், தன் வாழ்வும் பொருளும் சேதம் உண்டாகும் எனவுங் கூறுவாயாக எ-று. 34

சுக்கிர கோசாரம்

வேறு

வெள்ளியங் தனிலஞ்சி லேழுபத்தில்
விளங்கியதோர் மூன்ருறிற் றீராநோவு
உள்ளெரிவு வயிற்றுநோய் பிடரிநோவு
ஓங்குசய ரோகம் நீரிழிவுமாகும்
தெள்ளியதோர் பொருள்போக்கு சலத்திற்கண்டம்
தேவியின்றன் நேத்திரத்தில் வியாதியாகும்
கள்ளமருங் குழலாளே அயனுர்க்காண
கனங்குறையுங் கணிதத்தோர் காணுங்காலே.

இ-ள். சந்திரலக்கினத்திற்கு 3-5-6-7-10-12-என்னும் இடங்களில் சுக்கிரன் கோசாரப்படி வாசம் செய்யுங்காலம் அவர் தரும் பலன் விவரங்களைக் கூறுமிடத்து வயிற்றில் ஊஷ்ணம், வயிற்று நோய், நீங்காத வியாதி, க்ஷயரோகம், நீரிழிவுரோகம், பொருட் சிலவு, சலகெண்டம் முதலியனவும், தனது மனைவிக்கு நேத்திர வியாதியும் உண்டாகும். மற்றும் ஓ அழகுபொருந்திய பெண் பாவாய்! தனக்குடைய அந்தஸ்து முதலியனவுங் குறையுமெனக் கூறுவாயாக எ-று. 35

வேறு

வெள்ளிபன் னென்றிரண்டில் விளங்கிய நாலிலெட்டில்
ஒள்ளிய ஒன்பதாகில் உகந்துமே நிற்பாராகில்
உள்ளவன் புடையனுவன் வொண்டொடி யாற்குநல்லன்
கள்ளவிழ் குழலார்தம்மை கண்டுளங் களிப்பன்மிக்க.

இ-ள். மேலேசொன்ன சுக்கிரன் 1-2-4-8-9-11-முதலிய ஸ்தானங்களில் கோசாரப்படி வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? தன் மனதிற்கு மிக்க சந்தோஷமும், பெண்களால் போற்றத் தகுந்தவனும், கள்ளத்தனத்தையுடைய கருத்த கூந்தலை

யுடைய பெண்களால் மிக்க சந்தோஷத்துடன் வாழ்வானெனக் கூறு வாயாக எ-று. 36

சுங்கனும் ஆக்ஷிநட்பி லுச்சத்தே நிற்குமாயின்
பொங்கிடும் பூமிலாபம் புகழ்ந்திடும் ராஜயோகம்
மங்கிடும் மனையாள்பிள்ளை மகன்பிள்ளை பகைநீசத்தில்
துங்கமா வாகனங்கள் தொல்லையாம் பொருளும்கேடாம்.

இ-ள். மேலேசொன்ன சுக்கிரன் ஆக்ஷி-நட்பு-உச்சம் முதலிய க்ஷேத்திரங்களில் இருப்பாரேயாமாயின் அவர் தரும்பலன் என்ன வெனில்? பூமி மூலமான லாபம் ஓங்குதலும், எவரும் புகழத்தகுந்த ராஜயோகம் உண்டாதலுமாகும். இதுவன்றி, மேற்படி சுக்கிரன் பகை நீசம் என்னும் ராசியில் வாசம் செய்வாரேயாமானல் தனது மனைவி மக்களுக்குத் துன்பமும், தன்னிடமுள்ள அழகிய வாகனங் கள் நாசமாதலும், தொல்லை உண்டாதல், பொருட்செலவு உண்டாதல் முதலிய பலாபலன் நடக்கும் எனக்கூறுக எ-று. 37

சனி கோசாரம்

காரிதான் இரண்டைந்தெட்டேழ் கண்டம்பீ ராறுசன்மம்
கூரியே கைகால்வாதம் கொடுமைதா னதிகமாகும்
சீரிய தலையிற்பாரம் சினத்த சூனியம்போ லச்சம்
பாரியு யுத்தநோவாம் வதைத்திடு முனிவர்குற்றம்.

இ-ள். சந்திரலக்கினத்திற்கு 1-2-5-7-8-முதலிய க்ஷேத்திரங் களில் சனி வாசம் செய்யும்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? தனது கால் கரங்களில் வாதநோய் உண்டாதலும், அளவிடமுடியாத கொடுமை உண்டாதலும், தனது சிரத்தில் நோய் உண்டாதலும், தீமையினையுடைய சூனியத்தைப்போன்று அச்சம் உண்டாதலும், சண்டை முதலியனவும், முனிவர்களது குற்றத்தால் வாதை உண் டாதல் முதலியனவும் உண்டாகும் எ-று. 38

பத்திலே சனியுநிற்கிற் பதிகுலைங் தருமைகாட்டும்
செத்திடும் ஆடுமாடு சிலுகுடன் மனிதர்சாவாம்
பொத்திடும் விளைவுகுன்றும் பொருளெலாம் சேதமாகும்
சுத்தியே படுத்துமந்த சுகனமாம் சனியின்வாரே.

இ-ள். மேற்சொன்ன சனி சந்திரலக்கினத்திற்கு 10-ல் கோசா ரப்படி வாசம் செய்யும்காலம் தான் தனது இல்லத்தைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று அலைந்து திரிதலும், தன்னிடமுள்ள ஆடு மாடுகள் சாகுதலும், பந்துக்கள் நாசம், சிலுகு முதலியனவும், தான் செய்யும் பயிர்த்தொழிலால் விளைவு குறைதலும், தன்னிடமுள்ள பொருள் யாவும் சேதமாதலும் சகலத்தையும் தோற்று தனியனாய் நிற்கும்படியும் செய்யுமெனக் கூறுவாய் எ-று. 39

சனியவன் மூன்றிலாறிற் றயவுபன் னொன்றிலொன்பான்
இனிவருங் கருமம்நன்றும் எடுத்தகாரி யங்கள்வெற்றி
தனிபெறு மகிழ்ச்சியாகும் தண்டிகை குதிரையுண்டாம்
கனிதரு மதுரச்செவ்வாய் கன்னியர் காமனுமே.

இ-ள். மேலேசொன்ன சனி சந்திரலக்கினத்திற்கு 3-6-9-11-என்னும் ஸ்தானங்களில் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? நன்மையான காரியங்களே உண்டாதலும், தொடுத்த காரிய வெற்றியும், நூதன விஷயங்களால் சந்தோஷமும், தண்டிகை குதிரை முதலியன சேருதலும், பழத்தினும் இனிய ருசியைத் தரத் தகுந்த சிவந்த இதழினையுடைய பெண்களைக்கொண்டு சுகித்திருப்பான் எனவுங் கூறுக எ-று. 40

காரிதான் ஆக்ஷிநட்பி லுச்சத்தே நிற்குமாயின்
சீரியல் செட்டுலாபம் சிறப்புள பூமிசேர்க்கை
மூரிய பகையதாகு முடச்சனி பகைநீசத்தில்
தூரிய கோளுமுண்டாம் சூனிய கிரகத்தாலே.

இ-ள். மேலேசொன்ன சனி கோசாரப்படி மாறிமாறி வருங் காலம் தனது ஆக்ஷி வீட்டிலேனும், உச்சராசியிலேனும், நட்புராசியி லிருப்பாரேயாமானல் அவர் தரும்பலன் என்னவெனில்? சிறப்பு பொருந்திய கையிருப்பு முதலியனவும், மேலான பூமி முதலியன சேர்க்கை உண்டாகுமென்க. மற்றும் மேலேசொன்ன சனி பகை ராசியிலேனும், நீசத்தானத்திலேனும் நிற்பாராயின் அவர் தரும் பலன் என்னவெனில்? சொல்லமுடியாத பகை உண்டாதலும், கோள் முதலியனவும் உண்டாகும் எனவுங் கூறுக எ-று. 41

இராகு கேது கோசாரம்

இராகுடன் கேதிரண்டில் நாலெட்டி லைந்துபத்தில்
சேகரம் பன்னிரண்டில் சென்மத்திற் சேர்ந்துநின்றால்
வாகுதாய் பிதுர்கள்சாவாம் மனையாட்டி பூமிநாசம்
பாகுசேர் மொழியினளே பகர்ந்தனர் தமிழ்வல்லோரே.

இ-ள். கோசாரத்திற்கு 2-4-5-8-10-12-முதலிய ஸ்தானங் களில் இராகு அல்லது கேது இவர்கள் சஞ்சாரகாலம் அவர் தரும் பலன் என்னவெனில்? தனது தாய்தந்தையர் வகையில் மரணம், மனையாள் மரணம், பூமிநாசம் முதலியனவும் உண்டாகுமென சர்க் கரையினும் இனிய தித்திப்பாகிய மொழியினையுடைய பெண்பாவாய்! இவ்வுலகினுள்ளோர்க்குக் கூறுவாய் எ-று. 42

கேதுவும் ராகுவுக்கும் கிளர்ந்தபன் னொன்றுமேழும்
தீதிலா மூன்றிலொன்பான் செழித்திடும் பெண்டீர்மக்கள்
தாதுலாந் திருவும்சேரும் தார்மணி மிகவுமுண்டாம்
பூதல மீதில்சொன்னோம் புலவர்தம் வாக்குத்தானே.

இ-ள். மேலேசொன்ன ராகு கேது இவர்கள் கோசாரப்படி 3-7-9-11-என்னும் ஸ்தானங்களில் வாசம் செய்யுங்காலம் அவர் தரும்பலன் என்னவெனில்? தனது மனைவி மக்களுக்கு சுகசந்தோஷமும், தனது இல்லத்தின்கண் லட்சுமிவிலாசமும், அழகிய மணிமாலை முதலியனவும் உண்டாகுமென இப்பூமியிலுள்ள மானிடர்களுக்கு வருகால பலன்களைச் சொல்லியுள்ளனர் எ-று. 43

ஐயறிவு ஜந்துக்களின் விவரங்கூறல்

செருக்குபெற்ற அந்தணனே அறிவின் கூறும்
செழிப்பான நான்கறிவின் கூறேவெள்ளி
பெருக்கமுள மூன்றறிவின் வற்கம்செவ்வாய்
பிரபலமா யீரறிவின் வற்கம்புந்தி
தரிக்குமொரு அறிவினர்க்கே சனியாமென்று
சாத்திரங்க ளுரைக்குமென்பர் சரியாயோது
ஒருங்குபெற இவ்வகையை வகையாய்தேர்ந்து
உற்றபலன் சொல்லிடுவா யுண்மையீதே.

இ-ள். ஐயறிவின் வற்கம் குருவென்றும் நான்கறிவின் வற்கம் சுக்கிரனென்றும், மூன்றறிவின் வற்கம் செவ்வாய், ஈறறிவின் வற்கம் புதன், ஓரறிவின் வற்கம் சனியென்றும் சாஸ்திரங்கள் கூறுவதால் இவ்வகையே ஆராய்ந்து உலகத்தோர்க்குப் பலனைக் கூறுவாயாக எ-று.

பிரிதிவின்கூறான குருவற்கம்

நாகம்-மீன்-தேவர்-நாகர்-புள் இருகாலுள் ஐந்து சப்தஸ்பரிசரூபரச கந்தமாகிய ஐயறிவுள்ள ஜந்துக்களுமாகும்.

அப்புவின்கூறான சுக்கிரவற்கம்

வண்டு-தும்பி-கொசு-ஈ முதலான நான்கறிவுள்ள ஜந்துக்களாம்.

வாயுவின்கூறான புதன்வற்கம்

சங்கு-அலகு-சிப்பி-முதலை முதலிய யீறறிவுடைய ஜந்துவாம்.

தேயுவின்கூறான குஜன்வற்கம்

செல்-எறும்பு-தேள்-மூடு முதலிய மூன்றறிவுள்ள ஜந்துக்களாம்.

ஆகாயத்தின்கூறான சனிவற்கம்

மூலாதியாய் முளைக்கப்பட்ட சதியாதிகள் தாவரங்கள் முதலான ஓரறிவுள்ளவைகளாம்.

நான்குவகை விசேஷம்

ஊர்வனவென்பது சங்கு-சிப்பி-முரண்-அலகு-பாம்பு என்பனவாம். தவழ்வனவென்பது ஓணன்-ஆமை-உடும்பு முதலிய ஜந்துக்களாம். உண்ணி-மூடு-எரும்பு-பலகால்-நாற்கால் இவை நடப்பனவாம். பக்ஷி வகைகளுக்கு பறப்பன என்பனவாம்.

ஒவ்வொரு மாதங்களிலும் அந்தந்த மாதராசியின்படி குறித்த தேதியன்று லக்கினயிருப்பைக் காட்டும் ஜாப்தா

மாதங்கள்	சித்திரை மேஷம்		வைகாசி ரிஷபம் *		ஆனி மிதுனம்		ஆடி கடகம் *		ஆவணி சிங்கம்		புரட்டாசி கன்னி		ஐப்பசி துலாம்		கார்த்திகை விருச்சிகம்		மார்கழி தனுசு		தை மகரம்		மாசி கும்பம்		பங்குனி மீனம்	
தேதி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி	நா	வி
1	4	15	4	45	5	15	5	23	5	2	5	0	5	0	5	15	5	30	5	15	4	45	4	15
2	4	6	4	36	5	4	5	13	4	52	4	50	4	50	5	4	5	18	5	4	4	39	4	6
3	3	57	4	27	4	52	5	3	4	42	4	40	4	40	4	54	5	7	4	54	4	29	3	58
4	3	49	4	18	4	41	4	53	4	32	4	30	4	30	4	43	4	56	4	43	4	20	3	49
5	3	40	4	9	4	30	4	43	4	22	4	20	4	20	4	33	4	44	4	33	4	10	3	41
6	3	32	4	0	4	20	4	22	4	12	4	10	4	10	4	22	4	33	4	22	4	1	3	32
7	3	24	3	51	4	10	4	12	4	2	4	0	4	0	4	12	4	22	4	12	3	51	3	23
8	3	15	3	42	4	0	4	2	3	52	3	50	3	50	4	1	4	10	4	1	3	42	3	15
9	3	7	3	33	3	50	3	52	3	42	3	40	3	40	3	51	3	59	3	51	3	32	3	6
10	3	0	3	24	3	40	3	41	3	34	3	30	3	30	3	40	3	47	3	40	3	23	2	54
11	2	50	3	15	3	30	3	31	3	24	3	20	3	20	3	30	3	36	3	30	3	13	2	49
12	2	41	3	0	3	20	3	21	3	14	3	10	3	10	3	19	3	25	3	19	3	4	2	40
13	2	33	2	57	3	10	3	11	3	4	3	0	3	0	3	9	3	13	3	9	2	55	2	32
14	2	24	2	48	3	0	3	1	2	54	2	50	2	50	2	58	3	2	2	58	2	45	2	24
15	2	16	2	39	2	50	2	50	2	44	2	40	2	40	2	48	2	51	2	48	2	36	2	15
16	2	7	2	30	2	40	2	40	2	34	2	30	2	30	2	38	2	39	2	38	2	26	2	7
17	1	59	2	21	2	30	2	40	2	24	2	20	2	20	2	17	2	28	2	27	2	17	1	58
18	1	50	2	12	2	20	2	30	2	14	2	10	2	10	2	15	2	16	2	15	2	7	1	48
19	1	42	2	3	2	10	2	20	2	5	2	0	2	0	2	6	2	5	2	6	1	53	1	39
20	1	33	1	54	2	0	2	10	1	55	1	50	1	50	1	55	1	54	1	55	1	48	1	31
21	1	25	1	45	1	50	1	59	1	45	1	40	1	40	1	45	1	42	1	45	1	39	1	22
22	1	16	1	36	1	40	1	49	1	35	1	30	1	30	1	34	1	31	1	34	1	29	1	14
23	1	8	1	27	1	30	1	39	1	25	1	20	1	20	1	22	1	20	1	24	1	20	1	5
24	0	59	1	18	1	20	1	29	1	15	1	10	1	10	1	10	1	8	1	13	1	10	0	57
25	0	51	1	9	1	10	1	19	1	6	1	0	1	0	1	3	0	57	1	3	0	50	0	47
26	0	42	1	0	1	0	1	8	0	56	0	50	0	50	0	52	0	45	0	52	0	40	0	40
27	0	34	0	51	0	50	0	58	0	46	0	40	0	40	0	42	0	34	0	42	0	30	0	32
28	0	25	0	42	0	40	0	48	0	36	0	30	0	30	0	31	0	23	0	31	0	20	0	28
29	0	17	0	33	0	30	0	38	0	27	0	20	0	20	0	21	0	11	0	20	0	10	0	19
30	0	8	0	24	0	20	0	25	0	18	0	10	0	10	0	10			0	10			0	4
31			0	10	0	10	0	17	0	8													0	2
32			0	9			0	7																

* வைகாசி ஆடி இந்த மாதங்களில் தேதி 32 என்பதாம்.

4

இராசியின் பலப்படலம் என்னும் தசாம்ச அட்டவணை

இராசியின் பெயர்	இராசியின் மாதம்	இராசி நா	இராசி வி	இராசி அதிபர்	இராசி உச்சர்	உச்சம் பா	உச்சம் கலை	இராசி நிறம்	இராசி ஆ-பெ	மூவிதராசி	இராசி நோக்கு	இராசி உருவம்
மேஷம்	சித்திரை	4	15	செவ்வாய்	இரவி	10	0	சிவப்பு	ஆண்	பிருஷ்டோத	கிழக்கு	வெள்ளாடு
இடபம்	வைகாசி	4	45	வெள்ளி	சந்திர	3	0	வெண்மை	பெண்	பிருஷ்டோத	தெற்கு	பசுவின்ரூபம்
மிதுனம்	ஆனி	5	15	புதன்				கருப்பு	ஆண்	சிரோதயம்	மேற்கு	ஆண்பெண்
கடகம்	ஆடி	5	30	சந்திரன்	குரு	5	0	வெள்ளை	பெண்	பிருஷ்டோத	வடக்கு	நண்டு [ணுரு
சிங்கம்	ஆவணி	5	15	இரவி				சிவப்பு	ஆண்	சிரோதயம்	தென்கிழ	சிங்கம்
கன்னி	புரட்டாசி	5	0	புதன்	புதன்	15	0	கருப்பு	பெண்	சிரோதயம்	தெற்கு	பெண்ணுரு
துலாம்	ஐப்பசி	5	0	வெள்ளி	சனி	20	0	வெள்ளை	ஆண்	சிரோதயம்	வடமேற்கு	தராசு
விருச்சிகம்	கார்த்திகை	5	15	செவ்வாய்				பசுமை	பெண்	சிரோதயம்	வடகிழக்கு	தேள்
தனுசு	மார்கழி	5	30	குரு				சிவப்பு	ஆண்	பிருஷ்டோத	தென்கிழ	குதிரைமேல்
மகரம்	தை	5	15	சனி	செவ்வா	28	0	கருப்பு	பெண்	பிருஷ்டோத	தெற்கு	சுரு [புருஷன்
கும்பம்	மாசி	4	45	சனி				பச்சை	ஆண்	சிரோதயம்	வடமேற்கு	குடமுடைய
மீனம்	பங்குனி	4	15	குரு	சுக்ரன்	27	0	பச்சை	பெண்	சிர பிருஷ்	வடகிழக்கு	மீன் [வன்

எந்தெந்த தேயங்களுக்கு எவரெவரென்பது

இனியதிருத் தணிகைதனி லிலகுந்தேவா
 எங்கெங்கும் நிறைந்திருக்கு மென்சகாயா
புனிதர்களுக் கினியசுக மளிக்குந்தூயா
 பொங்குமெந்தன் துயரமெலாந் தீர்த்தமாயா
தனித்தனியே ராசிகட்கு தேயந்தன்னை
 தவறுது உரைத்தருள வேண்டுமாக
இனியதிரு வாக்கதனை நோக்குகின்ற
 இளையவன்மேல் கருணையுட னுரைசெய்வீரே.

இ-ள். புகழ்ச்சிபெற்ற தணிகைமலைமீது எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமண்யக்கடவுளே! உலகமெங்கும் நிறைந்தருளியிருக்கும் சகாயா! உத்தமர்களுக்கு மோக்ஷத்தைத் தரும் புனிதரே! தாங்கள் இதுவரையில் உரைத்துவந்தபடி ஒவ்வொரு ராசிகளுக்குமுரிய தேயங்களை அடியேன் அறியும்வண்ணம் எடுத்துரைப்பீரென தேனினுமினிய உமது திருவாக்கை நோக்கும் சிறியவனுன என்மேல் கருணைகூர்ந்து உரைசெய்வீராக எ-று. 45

தேயங்களின் விவரமுரைத்தல்

சொல்லுகிறேன் பாடகம்கர் நாடகந்தான்
 சொகுசான சேரநாடு சோழநாடு
வல்லதொரு பாண்டியமுங் கேரளந்தான்
 வளமான கொல்லமலை யாளசிந்து
அல்லலிலா பாஞ்சாலம் யவனத்தோடு
 அழகான கோசலத்தை மேடந்தொட்டு
நல்லமீன ராசிவரை தேசஞ்சொல்வர்
 நாற்றிசையுங் கீர்த்திபெற்ற முனியேகேளே.

இ-ள். நான்கு திக்கிலும் பிரதாபத்தையுடைய அகத்தியமாமுனியே! இராசியின் தேயங்களைச் சொல்லுகிறேன் கவனிப்பாய். பாடகநாடு, கர்னுடகநாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு, கேரளநாடு, கொல்லநாடு, மலையாளநாடு, சிந்துநாடு, பாஞ்சாலநாடு, யவனநாடு, கோசலநாடு என்னும் 12-நாடுகளையும் மேடமுதலாக மீனம்வரையிலுமுள்ள 12-ராசிகளுக்கும் வரிசையாய்க் கூறுவர் எ-று.

விவரம்

மேடம்-பாடகம்	துலாம்-கொல்லம்
இடபம்-கர்னுடகம்	விருச்சிகம்-மலையாளம்
மிதுனம்-சேரநாடு	தனுசு-சிந்து
கடகம்-சோழநாடு	மகரம்-பாஞ்சாலம்
சிங்கம்-பாண்டிநாடு	கும்பம்-யவனம்
கன்னி-கேரளநாடு	மீனம்-கோசலம்

46

கிரக சந்தேக நிவர்த்தி

சூரியனால் ஒவ்வொரு பொருளையும் ஜீவர்களையும் வளர்க்கும் சக்தியும், சந்திரனால் ஜீவர்களுக்கு இரத்த விருத்தியும் மரம்-செடி-கொடி முதலியவைகளுக்கு தான் தழைத்துள்ள இலை-பூ-காய் முதலியவைகளுக்கு ஈரமும் உண்டாகிறது.

ஆனால் வளர்வதென்றாலும் ஈரம் வேண்டும். ஈரம் இருக்கின் வளரும். இதுபோலவே ஜீவர்களின் தேகம் எவ்வளவு வளர்ச்சியடைகிறதோ அவ்வளவு இரத்தமும், எவ்வளவு இரத்தமுள்ளனவோ அவ்வளவு வளர்ச்சியும் உண்டாவதாக நந்தமிழ் மொழியாலுள்ள வேதசாஸ்திரங்களும் தத்துவக்ஞானிகளும் சொல்வர்.

அளவிடமுடியாத அனேக யோசனை தூரத்திற்கு அப்பாலுள்ள சூரியன் தனது உஷ்ணம் நிறைந்த பிரகாசத்தினது உதவியால் சந்திரன் பிரகாசிக்கிறான் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் சூரியனிடம் உஷ்ணமும், அவனுதவியால் பிரகாசிக்கும் சந்திரனிடம் குளிர்ச்சியும் இருப்பதற்குக் காரணம் என்னவென்று வாசகர்கள் வினவலாம். சூரியனிடம் உஷ்ணமே கிடையாது. உஷ்ணம் இருப்பது பூமியிலேயே ஆகும். மேற்படி சூரியனிடம் எவ்வித பொருளையும் மேலே இருக்கும் சக்தியுள்ளனவாதலால் பூமியிலுள்ள உஷ்ணத்தை அவன்மேலே இழுப்பதால், பூமியில் உஷ்ணம் உண்டாகிறது. சந்திரனிடத்திலும் மற்றுமுள்ள கிரகங்களிடத்திலும் அவ்வித சக்தியில்லாமையால் அவர்களிடம் உஷ்ணமில்லையெனத் தோற்றுகிறது.

இவ்வித காரணத்தைக்கொண்டே சோதிட சாஸ்திரத்தில் தினசரிப்படி சூரியன் கொடியவன், சந்திரன் சுபன் என்றனர். சூரியனையும் கொடியவனென்று சொல்லமுடியாது, சந்திரனையும் சுபனென்று சொல்லமுடியாது. இவை அவரவர்கள் ஜெனனகால லக்ஷணத்தைக் கொண்டே சொல்லவேண்டும். வீமேஸ்வர உள்ளமுடையான் 96-ஆம் பக்கத்திலுள்ள "உதய பானுவு சூரபி மானியாம்" என்ற செய்யுளால் ஜென்மத்தில் சூரியன் நிற்கில் சூரன் அபிமானி என்று விளங்குகிறது.

ஜென்மத்தில் சூரியனிருந்தாலென்பது என்ன? அவன் ஜெனித்த காலங்களில் சூரியன் தன் முழுகிரகணத்தையும், அவனிடம் பிரகாசித்திருக்கிறான். அதனால் அவனது திரேகத்திலும் அவன் ஒளிபுகுந்து அவனை மிக்க சுருசுருப்புடையவனாகவும், தைரியமுடையவனாகவும் செய்யும் என்பதேயாகும். ஆனால் ஜென்மத்தில் சூரியனிருக்கும் போது மட்டுமே சூரியனுடைய ஒளி ஒவ்வொருவர் தேகத்திலும் வீசுகிறது என்பது அர்த்தமல்ல.

எக்காலத்திலும் சூரியனுடைய ஒளி மனிதன் தேகமீது வீசிக்கொண்டேயிருக்கும். அடுத்த பக்கத்தில் காட்டிய படத்தை கவனியுங்கள். பூமியானது இடைவிடாது சுற்றிக்கொண்டேயிருக்


சூரியன்
சந்
பூமி
நீர்

கிறது. சூரியனே ஸ்தம்பம்போல் நிலைத்திருக்கிறுன். பூமி சுற்றுந் தன்மையால் சில காலங்களில் ககோளபேதம் ஏற்படுகிறது. அதையே உத்தராயணம் தக்ஷிணுயனம் என்றுங் கூறுவர். இவ்வாறு ககோள பேதத்தாலும், மேற்படி பூமி சுற்றுந் தன்மையால் சூரியனுடைய ஒளி பூமியிற் சிலநேரம் அதிகமாயுங் குறைந்தும் வீசுகிறதை நாம் அறிகிறோம்.

பிறவிகாலங்களில் சூரியன் உதவியால் ஒருவிதப் பக்குவம் அடைந்திருக்கும் ஒருவன் தேகம், பிற்காலங்களில் சூரியன் அனேக விதங்களாய் மாறிமாறிப் பிரகாசிக்குந் தன்மையால், அவ்வொளி யானது அவன் உடலில் தாக்குவதனுல் அவனவன் தேகம் பற்பல விதங்களால் அறிவு-குணம்-தன்மை-சரீரம்-செய்கை முதலியவை களும் மாறுபடுகிறது.

உதாரணமாக ஜெனனகாலங்களில் ஜென்மத்தில் சூரியனிருக்கப் பிறந்தவனுடைய தேகம் ஏற்கெனவே சுறுசுறுப்பும், தைரியமும், உஷ்ணதேகமுமுடையதாய்ப் பக்குவம் அடைந்திருக்கும் என்றுலும், பிற்காலங்களில் பூமியின் சுழற்சியால் மேற்படி சூரியனுடைய ஒளி யானது அதிகமாகவோ அல்லது குறைந்தோ வீசும்போது அத னுடைய ஒளியானது பலவிதமாய் மாறுபட்டுப் பிரகாசிக்கும். அவ் வொளியானது மேற்படி விதங்களால் பக்குவப்பட்டிருக்கும் தேகத் தில் வீசிய மாத்திரத்தில் அவனது குணம்-செய்கை-அறிவு-தன்மை-சரீரம் முதலியவைகளும் மாறுபடுவதால் பிற்காலங்களில் ஏற்படும் செய்கையால் லாபநஷ்டங்களையும், அறிவு குணங்களால் கௌரவம் முதலியவைகளையும், சரீரத்தில் மேற்படி ஒளி வீசுவதால் சுகமா யிருத்தல் அல்லது வியாதியாயிருத்தல் முதலியவைகளையும் வருகால பலனுக அனுபவிக்கிறுன். இதனையே ஜெனனகால இராசி சக்கர மென்னும் அடவியால் அவனது தன்மையையும், பிற்காலங்களில் ஏற்படும் கிரகம் மாறுதலால் சுகதுக்கங்களையும் அனுபவிக்கிறுன் என்று சோதிட சாஸ்திர மேதாவிகளால் கூறப்பட்டிருக்கிறது.

இதனுலேயே சோதிட சாஸ்திரத்தில் பிறந்தகாலம் கட்டாயம் மணி நிமிஷத்துடன் வேண்டுமென்ற கொள்கையுள்ளன. ஆகாயத் திலேயுள்ள ரவி முதலாயுள்ள கோட்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் தானடைந்திருக்கும் பலங்குறையவோ அதிகப்படவோ இடமில்லை. நாமிருக்கும் பூமியின் சுழற்சியாலும், ஒரு கிரகத்துடன் மற்றொரு கிரகம் சேருதல் பார்த்தல் முதலியவைகளாலும், அவர் களின் பலம் குறைந்தும் அதிகப்பட்டும் நம் பூமியில் வீசுகிறது. சிற்சில காலங்களில் சில கிரகங்கள் நம் கண்ணுக்குத் தெரியாது. அதனை அஸ்தமயம் என்றுங் கூறுகிறுர்.

பிறவிகாலங்களில் சூரியன் அஷ்டமத்திலிருந்தால் வீமேஸ்வர உள்ளமுடையானில் சுகமில்லானென்று கூறியுள்ளார். 8-ல் இருந்தால்

சுகமில்லானென்று கூறியதற்குக் காரணம் என்ன? அவன் பிறந்த காலங்களில் சூரியன் அவன் வசிக்கும் பூமியின் சுழற்சியின் பேதத்தால் தன்னொளியானது எவர்கள் தேகத்தில் வீசுகிறதோ அவர்களுக்கு வியாதியைத் தரத்தக்க அந்தஸ்தில் இருக்கிறான். இவ்வித சக்தியால் ஏற்கனவே வியாதியால் பண்பட்ட அவனது தேகம் பிற்காலங்களிலும் இப்பூமியின் மாறுதலால் சூரியனுடைய ஒளியும் மாறிமாறி இவன்மீது பிரகாசிக்குந் தன்மையால் இவன் தேகத்தில் வியாதி உண்டாதலும், அதிகப்படுவதும், குறைவதுமாகக் காணுகிறது.

ஜெனனகால கிரகங்களைக்கொண்டு தெரிந்துகொள்வது அவரவர்களுடைய தன்மை-குணம்-செய்கை முதலியவற்றையே தெரிந்துவகொள்வதாகுமெனக் கூறினேன். அதுபோலவே சூரியனால் அவனவன் மனத்தை அறிந்துக்கொள்வதெனச் சொல்லியுள்ளேன். இனி சந்திரனைப்பற்றி கவனிப்போம். முதன்முதலாக சூரியன் இருக்குந் தன்மையால் மனம் என்னும் ஆத்துமலக்ஷணங்களை அறியலாம். இவற்றை நிலை கூறுவதற்கும் சந்திரனை பரிசோதிக்க வேண்டும். ஏனெனில்? மனத்தின் கூறுபாடானது அதிகப்படவும் குறையவும் இரத்த ஓட்டமே முக்கியம்.

மனத்திற்கு கர்த்தா சூரியனெனினும், மனத்திலுள்ள உத்தேசங்களை விருத்திசெய்ய இரத்தம் என்னும் சந்திரன் உதவிவேண்டும். இரத்த ஓட்டம் குறைந்தோ இரத்தம் மேற்படி சூரியன் உஷ்ணத்தால் கொதிப்பேறியோ கெடுமாயின் அவன் மனமும், பலவித மாறுதலுண்டாகும். அவ்விதத்தால் துக்கத்திற் கேதுவாகக் காரணமாகும். ஆனதால் சூரியன் சந்திரன் இவ்விருவரும் மானிடர்களுக்குக் கண்கண்ட தெய்வமாகும். உதாரணமாகப் பின்வரும் விஷயங்களைக் கவனிக்கில் உண்மை விளங்கும்.

ஜெனனகாலங்களில் சூரியன் ஆறிலிருந்ததால் தன் ஒளியில் வியாதியைத்தரும் குணத்தால் பக்குவப்பட்டிருந்த ஒருவனது தேகம் அதேகாலத்தில் பிறந்த காலத்தில் சந்திரன் ஜென்மத்தில் இருந்தானுபின் அவன் தேகமானது சீதளதேகத்தையுடையதாயும், சத்துவ குணமும், பொறுமையு முடையவனாக இருப்பான். ஏனெனில்? சந்திரன் இரத்தங்களை விருத்தி செய்யுங் குணமுடையவனென்று முன்னமே சொல்லியுள்ளேன். இரத்த விருத்தியினாலேயே மனம் தைரியமடைதலும், இரத்த சக்தியால் குணம் முதலியவைகள் பற்பலவித மாறுதல் உண்டாகுமென முன்பே கூறியுள்ளேன். ஆனதால், ஜென்மத்திலுள்ள சந்திரனால் சீதளதேகியும், சத்துவகுணத்தையுடையவனாயினும், ஆறிலிருந்த சூரியன் சக்தியால் சீதள சம்மந்தமான வியாதி உண்டாகுமென்றும், அவனுக்கு ஜென்மத்திலுள்ள சந்திரனால் அதிக ரதத விருத்தியடைவதனால் மேற்படி சீதள வியாதியால் அவனுக்கு துன்பம் அதிகப்படாது என்றும் பொதுவாய்

சீதள வியாதியையுடைய தேகியாகவே இருப்பான் என்றுகூற இட முண்டாகிறது.

இவ்விரண்டு காரணங்களால் அவனுக்கு வியாதியுள்ள காலங் களில் துன்பமும், கஷ்டம் தான் செய்யுந் தொழிலுக்கு பல விக்கி னங்கள் முதலியவை ஏற்படுவதால் அவனுக்குச் சுகம் துக்கம் முத லியவைகள் மாறிமாறி வருமென்றே தோற்றுகிறது.

மற்றொரு உதாரணம்

ஜென்மத்தில் சூரியனும் 6-ல் சந்திரனுமாக வைத்துக்கொள் வோம். ஜென்மத்திலுள்ள சூரியனால் வீரம்-பராக்கிரமம்-தைரியமும், 6-ல் இருந்த சந்திரனால் இரத்தமூலமான வியாதியினாலும் பண்பட்டு இருந்த ஒருவனுக்கு பிற்காலங்களில் பூமிசுழற்சியால் 4-ல் சூரியனும் 12-ல் சந்திரனுமாக வந்தபோது 4-ல் இருந்த சூரியனால் தனக்கு எந்த விதத்தில் சுகமுள்ளனவோ அவற்றை நாடிச்செல்லும் மனமும், 12-ல் இருந்த சந்திரனால் இரத்த ஓட்டக்குறைவு மேற்படும்.

ஏற்கனவே ஜெனனகாலங்களில் ஜென்மத்திலிருந்த சந்திரனால் ரத்த ஓட்டம் அதிகபட்டவனுக்கு பிற்காலங்களில் 12-ல் இருந்த சந் திரனால் இரத்த ஓட்டங் குறையுமாயின் அவன் பலமுங் குறையும். இதனால் எவ்விதத்தில் சுகமுள்ளனவென்று மனம் நாடியதை செய்ய முயன்றாலும், சந்திரன் சக்தியால் பலம் குறைந்தமையால் பேற்படி சுகத்தை தேடுங் காரியங்களுக்கு இடைஞ்சலே ஏற்படும். ரத்தஓட்டம் நின்றால் வியாதி ஏற்படும். வியாதி ஏற்படின் பொருள்சிலவு நேரும். பொருள் சிலவுசெய்ய தனக்கு ஏற்படும் சுகத்தை நாடிச்சென்று பொருள்வரவை யடைய ஏதுவில்லையாதலால் மனஸ்தாபம் ஏற்படும், கடன் உண்டாகும். பூரணமாய் இரத்த ஓட்டம் நின்றால் மரணத்திற் கேதுவாகும். இவற்றை ஆராய்ந்து சொல்வதே வருகாலபலன் என் னப்படும்.

ஜெனனகாலங்களிலிருந்த கிரக அடைவி

சந் கே		புத	சூரி
லக் குரு	இராசி		சுக்
சனி			
			அங் ராகு

பூமி சுழற்சியால் பிற்காலங்களில் ஏற்பட்ட கிரக அடைவி

லக்			கே
சனி	யுவ ஐப்பசி மாதத்தில்		
			சந்
ராகு அங்	குரு	சூரி	புத சுக்

முதல் சக்கரத்தில் காண்பது ஜெனனகாலங்களில் ஏற்பட்ட கிரகராசி. 2-வது சக்கரத்தில் தனது 32-ஆம் வயதில் ஏற்பட்ட கிரகராசி. இதனது வித்தியாசங்களை கவனிக்கவும்.

ஜெனனகாலத்தில் 5-ல் இருந்த சூரியனால் மந்திரம்-தெய்வம்-புத்தி-சத்தியம்-போஜனம்-தன்மை-குருமார்களை வணங்கல் முதலியவைகளில் உற்சாகமும், தைரியமும், எத்தனம் செய்தல் முதலியவற்றில் மனமுடைய ஜாதகனுக்கு தனது 32-ம் ஆண்டில் எட்டாம் ராசியில் சூரியன் வாசஞ்செய்யுங் காலங்களில் மந்திரங்கற்றல், தெய்வ வழிபாடு செய்தல் முதலியவற்றிற்கு முயன்று செல்ல மனமில்லாமை புத்தி கூர்மையாயிருந்தவனுக்கு. புத்தி குறைச்சல், சத்தியநெறியோடு தவறாதிருக்க வேண்டுமென்ற குணம் மாறி சத்தியந் தவறுதல், இனிமையான போஜனத்தையே சாப்பிட மனமுடையவனா யிருந்ததற்கு எவ்விதபோஜனமாயினும் உண்ண பிரியப்படல், குருமார்களை வணங்க வேண்டுமென்னும் மனமுடைய குணம் மாறி வணங்காதிருத்தல் முதலியவைகளாய் மாறுபடும் என்பதேயாகும்.

இவ்விதமே சந்திரனை கவனியுங்கள். இரண்டிலிருந்த சந்திரனால் தனது நேத்திரத்திற்கு நல்ல இரத்தம் ஓடி பளிங்காயிருத்தல், தனது குடும்பத்திலுள்ளவர்கள் இரத்த ஓட்டத்தால் பலத்தோடு இருத்தல், சத்துவ குணத்தோடு பொருள் சம்பாதிக்குந் திடம் முதலிய குணா குணமுடையவனாய் பண்பட்டிருந்தவன் தனது 32-ஆம் ஆண்டில் 6-ல் சந்திரன் வாசம் செய்யும்போதெல்லாம் நேத்திரத்திற்கு இரத்த மூலமான வியாதி தனது குடும்பத்தோர்க்கு இரத்த ஓட்டங் குறைவதால் வியாதி முதலியன உண்டாதல். சத்துவகுணத்தால் பொருள் தேடவேண்டுமென்ற குணம் மாறி பல விதங்களாலலைதல் முதலிய குணம் ஏற்படுவதால் இவ்வித காரணத்தை முன்னிட்டு குடும்பத்தோர் வியாதியாயிருந்தால் அதனால் விசனம் ஏற்படும். கண்களுக்கு நோய் உண்டாயின் எல்லா காரியங்களும் பங்கமாகும். இதனால் மென்மேலும் பலவித கஷ்டம் உண்டாகுமெனத் தோற்றுகிறது. இவ்வாறே குஜனை கவனியுங்கள்.

எலும்புக்குள்ளிருக்கும் மூளையின் சக்திக்குரிய செவ்வாய் இந்த ஜாதகத்திற்கு ஜெனனகாலத்திலேயே அட்டமஸ்தானத்தில் நின்றிருக்கிறான். ஆனால் தான் முழுபலத்துடன் இருக்கும் க்ஷேத்திரமாகிய மேஷம்-விருச்சிகம் இவ்விரண்டு க்ஷேத்திரங்களில் ஒன்றைப் பார்ப்பதனால் தனக்கு அதாவது தூரத்தில் இருந்தாலும் தனது சொந்த ஆக்ஷி வீட்டைப் பார்ப்பதனால் அவனது பூரண பலமுங் குறையவில்லை. இவ்வாறு எலும்பின் மூளை சக்திக்குடைய செவ்வாய் அட்டமத்தில் அதாவது அவன் பூமியில் தனது முழு கிரகணமும் வீசாத காலத்தில் பிறந்தமையால் இவனுக்கு எலும்புக்குள்ளிருக்கும் மூளையின் சக்தி குறைந்தே காணப்படும். இவன் தேகம் பிற்காலங்களிலும் மேலேசொன்னபடி தன் முழுகிரகணமும் அவன் திரேகத்தில் வீசாத காலம் அவனுக்கு முன்னிலும் அதிகமான பலயீனமும் நடக்கும் சக்தி குறைவுண்டாகும். இதனால் அவன் பிறந்த

காலத்திலிருந்த பலத்தைவிட குறைந்த பலத்துடன் இருப்பானென்பதை அறிக.

ஆனால் தனது 32-ஆம் வயதிலிருந்த 2-ஆம் சக்கரத்தின் கோட்களின்படி இரத்த ஓட்டத்திற்கு அதிகாரியான சந்திரலக்கினத்தை நோக்குவதால் அக்காலம் எலும்புக்குள்ளிருக்கும் மூளைகள் விருத்தியடைந்து பின்னும் பலமுடையவனாகவே இருப்பான். பொதுவாய் 8-ல் செவ்வாய் கிற்க பிறந்தவர் அனேகதூரம் நடக்க சக்தியற்றிருப்பாரென்பது சாஸ்திரம்.

புதனை கவனியுங்கள். ஜெனனகாலத்தில் தசையை வளர்க்கும் சக்தியுடையவனான புதன் நான்கிலிருந்து தசையை வளர்க்கும் சக்தியுடையவனாகவே யிருந்து ஜெனனகாலங்களிலேயே தசை வளர்த்துக்கொண்டே யிருக்கிறான். ஆதலால் இந்த ஜாதகன் ஏற்கனவே தசை பெருத்தவனாக திடசரீரமுடையவனாக யிருப்பான். பிற்காலங்களில் மேற்படி புதன் தனக்குரிய தசையை வளர்க்கும் சக்தி குறைந்து தசையை யிழுக்கும் சக்தியான கொடிய ராசிகளில் வாசம் செய்வானேயானால் அக்காலம் அவனது தேகம் இளைத்துக் காட்டும். அப்படி இளைப்பதற்குக் காரணம் ககோளபேதத்தால் பிற்காலங்களில் மேற்படி புதனுடைய கொடிய கிரகணம் தன்மீது வீசுவதினாலேயாகும். அப்படியின்றி ஜெனனகாலத்திலிருந்த தசை வளர்க்கும் சக்தியைவிட இன்னும் மேலான தசை வளர்க்கும் சக்தியையுடைய க்ஷேத்திரங்களில் வாசம் செய்வானேயாமானால் பிறவிகாலத்தைவிட இன்னும் திடசரீரமுடையவனாக வாழ்வன்.

குருவை கவனியுங்கள். ஜெனனகாலத்தில் லக்கினத்திலிருந்த குரு இவனுக்கு நல்ல அறிவைத்தரும் மூளை சக்தியைக் கொடுத்ததனால் இந்தஜாதகன் ஏற்கனவே நல்ல அறிவாளியாயிருந்தவன் தனது 32-ஆம் வயதில் 9-லிருந்த மேற்படி சந்திர லக்கினத்தைப் பார்ப்பதால் அக்காலத்தில் தனது அறிவின் விருத்தியால் எவ்வித காரியங்களையும் மிக்க அறிவுடன் செய்து சுகித்து வாழ்வான். இதனால் இவனுக்கு நல்ல யோகமே உண்டாகும் என்பதேயாகும்.

இவ்வாறு சுக்கிரனை கவனியுங்கள். சுக்கிரன் இந்திரிய சேட்டைக்கு கர்த்தாவென முன்பே சொல்லியுள்ளேன். இந்திரிய சேட்டைக்குக் கர்த்தாவான சுக்கிரன் ஜெனனகாலங்களில் தன் பலமிழந்த சக்தியை இவன்மீது வீசினதால் இந்த ஜாதகனுக்கு இந்திரசேட்டை குறைந்தே காணப்படும் என்று தோற்றுகிறது. தனது 32-ஆம் வயதில் இந்திரியசேட்டைக்குடைய முழுபலம் பெற்று சந்திர லக்கினத்தை பார்ப்பதால், அதாவது இரத்த விருத்திக்குடைய சந்திரனைப் பார்ப்பதால், இவனது இரத்தத்தில் இந்திரியசேட்டை உண்டாகி தான் முன்னிருந்த குறைந்த இந்திரியசேட்டை பலத்தைவிட அதிக பலமுடையவனாகக் காணப்படுவான்.

சனியை கவனியுங்கள். நரம்புகளுக்கு அதிகாரி. நரம்பின் சக்தியை விருத்தி செய்யத்தகுந்த சனி. ஜெனனகாலத்தில் அவனது முழு கிரகணத்தில் தன் முழுபலத்தையும் இவன்மீது வீசுகிறது. 56-ஆம் பக்கத்தில் காட்டிய அட்டவணையில் ராசியதிபர் என்ற அட்டவணையை கவனியுங்கள். சனி தானிருக்கும் வீடு தனக்குச் சொந்தவீடு ஆக்ஷி. ஆக்ஷியென்றால் தன் முழுபலத்தையும் பூமியில் வீசும் தன்மையில் இருக்கிறான் என்பது தாத்பரியம். அவ்வாறு தன் முழுபலத்தையும் இப்பூமியில் வீசுந் தன்மையுள்ள நேரத்தில் உதித்தவனாகையால் ஏற்கனவே இவன் நரம்புகள் தனது முழுபலத்துடன் இவனுக்கு நல்ல பலத்தைக் கொடுத்திருக்கிறது. ஆதலால் இவன் நெடுந்தூரம் நடந்து செல்லவுந் தைரியமுடையவனாகிறான். தனது 32 - ஆம்வயதிலும் மேற்படி சனி தனக்காக்ஷிவீடான கும்பத்திலிருந்து தன் முழுபலத்துடனேயே யிருக்கிறானாதலால் இக்காலத்திலும் அவனுக்கு எவ்விதகாரணத்தைக்கொண்டும் தன்பலமிழக்காது. முழுபலத்துடன் சுகித்து வாழ்ந்துவருவான்.

அனேகர் கிரகங்களால் ஜீவர்களுக்குப் பலனுண்டாவதில்லை நன்மைதீமை யுண்டாவதில்லை என்று முரண்பாடாக சொல்லுகின்றனர். நமது வீட்டின் பக்கத்தில் ஓர் குப்பையிருந்தால் அக்குப்பையின் துற்நாற்றத்தால் அவ்வீட்டிலுள்ளவர்களுக்கு வியாதியுண்டாகிறது. நமது வீட்டினெதிரில் ஓர் விருக்ஷமிருந்தால் தான் அசுத்தகாற்றை புசித்து சுத்தகாற்றை நமக்களித்து வியாதியின்றியிருக்கச்செய்யுமென்ற சாஸ்திரமிருக்கையில் அனேக யோசனை தூரத்திற்சப்பாலுள்ள கிரகங்களாயினும் அவனது ஒளியானது நம்மீது வீசுவதால் நம் தேகத்திற்கு ஏதாவது ஒரு பயனுண்டாகாதா? நம் வீட்டெதிரிலுள்ள மரங்களில் இலைகள் கீழே உதிர்ந்து அழுகிய துற்நாற்றம் நமக்கு வீசுமாகில் வியாதி வருகிறது. ஆகாயத்திலுள்ள கிரகங்கள் அடிக்கடி நாம் வசிக்கும் பூமியின் சுழற்சியால் மாறி மாறி நம் கண்ணுக்குத் தோற்றும்போது அவைகளும் சில காலங்களில் தனது முழுகிரகணத்தை பூமியில் வீசும் நாளுண்டு. பூமியானது அவைகளை மறைத்து தன் முழுகிரகணமும் பூமியில் வீசாத நாளுமுண்டு. முழுகிரகணம் வீசும்நாளில் நமது தேகம் எவ்வாறு பக்குவப்படும். ஒளி வீசாதநாளில் எவ்வாறு பக்குவப்படும். ஓர் செடிக்கு தவறாது ஜலந் தெளிக்கும்போது எவ்வாறிருக்கும். ஜலமூற்றாத காலங்களில் எவ்வாறிருக்கும். கிரகங்களின் ஒளியில் நமது தேகம் வளர்வதால் எந்த இந்திரியத்திற்குடைய கிரகமாயினும் அவனொளி நம்மீது வீசாவிடில் அந்த இந்திரியம் வளர பலப்படயிடமில்லை. அதனால் வியாதி மரணம் துன்பம் இவ்வித காரணங்களால் நஷ்டம் முதலியவை யுண்டாவது சகஜந்தானே. இவ்வாறான காரணங்களை வெள்ளைச்சொற்களால் சொல்லாமலே வேதம் வைத்தியம் தத்துவம் மந்திரம் முதலிய சாஸ்திரங்களோடு ஜோதி

சாஸ்திரம் என்றும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். ஜோதிசாஸ்திரம் என்பது (ஜோதியைக்கண்டவன்) ஆகாயத்திலேயுள்ள கிரகங்களின் சக்தியான பிரகாசத்தைத் தெரிந்தவன் என்பது அர்த்தம்.

பார்வை முதலியன்

தேவர்முதல் யாவருங்கொண் டாடுகின்ற
தேன்மொழியார் வ்ள்ளிதெய் வானைநேயா
ஏவியதோர் கோட்களுக்குப் பார்வையோடு
இனிதான பாவங்கள் நாமந்தன்னை
ஆவலுடன் கேட்குமெனக் குறைத்துளந்தன்
அகத்திலுள்ள குரைதீர்ப்பாய் அமரர்நேயா
பூவிலுள்ளோர் பலனுரைக்கப் பெரிதும்வேண்டி
போற்றுகிறேன் உன்னடியை ஏற்றினேனே.

இ-ள். தேவர்கள் முதல் யாவருங் கொண்டாடவும் தேனினு மினிய சொற்களையுடைய வள்ளி தெய்வானை யென்னு மிருபெண் களுக்கு யிசைந்த கணவனும், தேவர்களின் துயரங்களை தீர்ப்பதற் கென்றே உருவெடுத்த எனது தெய்வமே! எனது மனத்திலுள்ள சந்தேகத்தை நிவர்த்திசெய்து, இப்பூமியிலுள்ளோரின் வருகாலப் பலனையறியும் வண்ணம் கடாக்ஷிக்கும்படி உம்மை பெரிதும் வேண்டி நமஸ்கரித்து துதிக்கிறேன். அதென்னவெனில், ஒவ்வொரு கோட் களுக்கும் பார்வை எந்தெந்த க்ஷேத்திரங்களென்றும், பாவாத்பாவ க்ஷேத்திர நாமங்கள் என்னவென்று எடுத்துரைப்பீராக எ-று. 47

பார்வை க்ஷேத்திரங்களை விவரித்தல்

நிச்சயமாய் சொல்லுகிறேன் இரவிதிங்கள்
நேர்மையுள்ள புதன்பாம்புக் கேழதாகும்
அச்சனிலா சனியனுக்கோ மூன்றேழ்பத்து
அந்தணனுக் கைந்தேழு மொன்பதாகும்
மெச்சியதோர் செவ்வாய்க்கு நான்குமேழு
மேலான அட்டமும் பார்வையாகும்
இச்சையுள நான்கேழு பத்துங்கேந்த்ரம்
இனியஜன்மம் ஐந்தொன்பான் கோணமாமே.

இ-ள். அகத்தியனே கேட்பாயாக! சூரியன்-சந்திரன்-புதன்-இராகு-கேது இவர்களுக்கு ஏழாமிடம் பார்வையாகும். பயமில்லாத சனிக்கு 3-7-10-ம் பார்வையாம். குருவுக்கு 5-7-9-ம் பார்வையாம். மெச்சத்தகுந்த செவ்வாய்க்கு 4-7-8-ம் பார்வையாகும். க்ஷேத்திர விவரம் சொல்லுகிறேன் கேட்பாயாக. 1-4-7-10 இவை நான்குங் கேந்திரமாம். 1-5-9 இவை திரிகோணமாம் எ-று. 48

வெற்றிகொளும் மூன்றாறு வியங்கள் தன்னை
விசையாக ஆபோக்கி லீபமென்பார்
உற்றதொரு ஆறெட்டுப் பன்னிரண்டை
உணர்ந்தோர்கள் மறைவென்பா ருறுதியாக
பற்றியதோ ரிரண்டெட்டு பத்துமொன்றை
பணபர மென்றேசொல்வார் பகரக்கேளு
குற்றமிலா திவ்வகையாய் பலனையாய்ந்து
குறிப்பாகப் பலனுரைப்பாய் குணமிதானே.

இ-ள். வெற்றியைத் தரத்தகுந்த ஜென்மத்திற்கு 3-6-12-முதலிய க்ஷேத்திரங்களை ஆபோக்லீபமென்று சொல்லுவார். ஜென்மத்திற்கு 6-8-12-முதலிய க்ஷேத்திரங்களை மறைவு என்பர். 2-8-11-இம்மூன்று க்ஷேத்திரங்களையும் பணபரம் என்று சொல்வர். இவ்வகையாக பலாபலனை ஆராய்ந்து பலன் சொல்லுவாயாக எ-று.

விவரம்

கேந்திரம்	1-4-7-10	
திரிகோணம்	1-5-9	
பணபரம்	2-8-11	
மறைவு	6-8-12	
ஆபோக்லீபம்	3-6-11	49

ஐவகை ஆதிபத்தியங்களில் எவை மேலானதென வினவல்

மன்னியதோர் கேந்திரத்தில் மேன்மையாது
மகிழ்வான கேந்திரத்தின் மேன்மையெங்கு
துன்னியதோர் பணபரத்தி லெதுதான்முக்யம்
தோற்றியதோர் மறைவதிலே முக்யமெங்கு
மின்னியதோ ராபோக்கி லீபந்தன்னில்
மேலான க்ஷேத்திரந்தா னெவையோவென்று
பன்னியதோர் விவரமதை யெடுத்துரைத்து
பாலன்குறை நீக்கிடுவாய் பரமனுரே.

இ-ள். என்னை ஆளவந்த தெய்வமே! கேந்திரங்களில் சொல்லிய நான்கு க்ஷேத்திரங்களில் முக்கியமான க்ஷேத்திரம் எது? திரிகோணங்களில் சொல்லிய மூன்று க்ஷேத்திரங்களில் முக்கிய க்ஷேத்திரம் எது? பணபரத்தில் சொல்லிய மூன்றினுள் உயர்ந்தது எது? மறைவு என்று சொல்லிய மூன்றினுள் முக்கியமானது எது? ஆபோக்லீபத்தில் முக்கியமான க்ஷேத்திரம் எது? என்பதை என் சந்தேகந்தீர எடுத்துரைப்பீராக எ-று. 50

பலன்களை எடுத்துரைத்தல்

நாடியதோர் கேந்திரத்தில் தசமம்மேலாம்
நவிலுகின்ற கோணமதில் நவமேமேலாம்
தேடியதோர் பணபரத்தி லெட்டேமேலாம்
தெவிட்டாத ஆபோக்கி லீபந்தன்னில்
பாடியதோர் பதினொன்றே மேலதாகும்
பயமுடைய மறைவதிலே பண்பாய்கேளு
கூடியதோர் வியமேலாங் குணங்களாய்ந்து
குறைவில்லா பலனுரைப்பாய் குறிப்புகண்டே.

இ-ள். கேந்திரத்தில் மேலானது பத்தாமிடம் திரிகோணங்களில் மேலானது ஒன்பதாமிடம், பணபரத்தி லெட்டாவது க்ஷேத்திரமே மேலானதாகும். ஆபோக்லீபத்தில் 11 மேலானதாகும். மறைவு என்னும் க்ஷேத்திரத்தில் 12 மேலானதாகும். ஆதலால் இந்த ராசிகளில் நின்ற கிரகங்களின் குறிப்பு கண்டு பலனை எடுத்துரைப்பாய் எ-று.

வி-ரை. கேந்திரம் 1-4-7-10-ல் பாபர்களிருந்தால் சுபபலனும், சுபர்கள் இருந்தால் பாபபலனும் உண்டாகும். அவையாவன: 1-ல் கால்பலன், 4-ல் அரைபலன், 7-ல் முக்கால்பலன், 10-ல் முழுபலன். சுபர்களாயின் 1-ல் கால் அசுபபலன், 4-ல் அரை அசுபபலன், 7-ல் முக்கால் அசுபபலன், 10-ல் முழு அசுபபலன். திரிகோணம் 1-5-9-ல் சுபர்களுக்கு 1-ல் கால் சுபம், 5-ல் முக்கால் சுபம், 9-ல் முழு சுபம். பாவர்களுக்கு 5-ல் முக்கால் பாவபலன், 9-ல் முழு பாவபலன். பணபரம் 2-8-11-எல்லா கிரகங்களுக்குங் கொடியதாயினும், 11-ஆம் இடம் முழு கொடியதாகும். மறைவு 6-8-12. பன்னிரண்டாமிடம் எல்லா கிரகங்களுக்குங் கொடிய க்ஷேத்திரமாம். ஆபோக்லீபத்தில் ஆறுமிடமே கொடியதாகும். கேந்திரங்களில் பாவரிருக்கின் சுபர்களாம். திரிகோணங்களில் பாவரிருக்கின் அசுபர். கேந்திர திரிகோணம் பார்ப்பது ஜென்மலக்கினத்திற்கும் சந்திரலக்கினத்திற்கும் பார்க்கவேண்டும். 51

தாதுமூல ஜீவர்களைக் கேட்குதல்

சுகந்தருகும் ராசிகளில் தாதுமூலம்
சோர்வில்லா ஜீவவகை ராசியோடு
மிகுந்தவகை யெடுத்துரைத்துப் பிரசன்னங்கள்
மேலான வகைவகையா யெடுத்துக்கூற
உகந்தெனக்கு அருள்புரிவா யுறுதியான
உத்தமனே உன்னடியைப் போற்றிசெய்தேன்
பகர்ந்தவிந்த ராசிகளி லாணும்பெண்ணும்
பக்ஷமுட னனுபவிக்கும் பலனைச்சொல்லே.

இ-ள். நன்மையைத்தராநின்ற ராசிகள் பன்னிரண்டில் தாது-மூலம்-ஜீவன் என்ற இராசிகளை ஆராய்ந்து பிரசன்ன பாவம் என்னும் ஆருடம் சொல்லும் மார்க்கத்தை உரைப்பதோடு இராசிகளில் ஆண் பெண் என்ற வித்தியாசங்களையும் அடியேன் அறியுமீவண்ணம் எடுத்துரைக்கவேணுமாய் உம்து திருப்பாதகமலங்களுக்கு தெண்டனிட்டு வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன். 52

தாதுமூலஜீவன் என்ற ராசியும் ஆண்பெண் ராசியையு முரைத்தல்

சொல்லுவர்காண் மேடமொடு கடகம்கோலும்
சொகுசுடைய மகரமட்டும் சரமாமென்பர்
நல்லசிங்கம் தேளுடனே மாடுங்கும்பம்
நவிலுவர்காண் திரமெனவே நயந்துகூறு
அல்லலிலா மிதுனமுடன் தனுசுகன்னி
ஆற்றவொணு மீனம்வரை யுபயமாகும்
வல்லஒற்றை ராசியெல்லா மானதாகும்
வளமுடைய இரட்டையெலாம் பெண்ணென்றோதே.

இ-ள். மேடம் - கடகம் - துலாம் - மகரம் இந்நான்கு ராசியும் சரராசியாகும். இடபம்-சிங்கம் - விருச்சிகம்-கும்பம் இவை நான்கு ராசியும் திரராசியென்பர். மிதுனம்-கன்னி - தனுசு-மீனம் இவை நான்கு ராசியும் உபயராசி யென்பர். இனி ஆண் பெண் இராசியைக் கேட்கின் ஒற்றைராசிகளை ஆண் எனவும், இரட்டைராசிகளை பெண் எனவுங் கூறுவர் என்பதாம் எ-று.

விவரம்	மேடம்-ஆண்	துலாம்-ஆண்
	இடபம்-பெண்	விருச்சிகம்-பெண்
	மிதுனம்-ஆண்	தனுசு-ஆண்
	கடகம்-பெண்	மகரம்-பெண்
	சிங்கம்-ஆண்	கும்பம்-ஆண்
	கன்னி-பெண்	மீனம்-பெண்

தாது சரம்	மூலம் திரம்	ஜீவன் உபயம்
மேடம்	இடபம்	மிதுனம்
கடகம்	சிங்கம்	கன்னி
துலாம்	விருச்சிகம்	தனுசு
மகரம்	கும்பம்	மீனம்

53

பிரசன்ன பாவங்களை உரைத்தல்

செப்புகிறேன் பிரசன்னம் பகர்வதென்றால்
செழிப்பான ராசிகளை திரமாயாய்ந்து
தப்பாவே தாதுமூல ஜீவனென்று
தவராது சோதித்துத் தாதுவாயின்

ஒப்பரியா மானிடர் சிந்தனையாமென்பர்
உறுதியுள மூலமெனில் அசத்துவத்து
இப்புவியில் ஜீவனெனில் வாகனத்தை
யின்பமுடன் வினவுவர்கா ணின்பந்தானே.

இ-ள். அகத்தியமாமுனியே! பிரசன்னம் சொல்வதெனில்? கேட்டகாலத்துக்குரிய இராசியை நிச்சயமாயறிந்து சரம் திரம் உபயம் என்னும் ராசிகளேயே தமது மூலம் ஜீவம் என்ற இராசிகளாகக்கொண்டு தாதுவாயின் மனுஷசிந்தை யென்றும், மூலமாகில் பொன் பொருள் முதலிய அசத்து பொருளென்றும், ஜீவனுல் நாற்கால் ஜீவசிந்தை யென்றுங்கொண்டு சொல்வாயாக. 54

ஆரூட பாவவிலக்கணம்

இயம்புகிறேன் ஆரூட ராசிக்கப்பா
எண்ணறியா சனியாக்ஷி யாகியங்கு
பயந்தருகும் மதிகூடி பார்த்தானுகில்
பக்ஷமிலாக் கன்னியரால் சண்டைகேடு
நயந்தகதிர் கூடிடிலோ ரோகபாதை
நவிலவொணு கடன்துக்க மென்றுகூறு
இயம்புகுஜன் நீச்சமதாய் நோக்கினுக்கால்
இவனுக்கு அரசர்களால் வழக்கென்றேதே.

இ-ள். ஆரூடலக்கினம் எவையானுலும் சனி ஆக்ஷி பெற்று சந்திரன் கூடினும் பார்க்கினும் வினவினவனுக்கு ஓர் கன்னியால் சண்டை கேடு முதலியவற்றைக் குறித்து வினவினுனென்றும், சூரியன் கூடினுலும் பார்த்தாலும் வினவினவனுக்கிருக்கும் ரோக பாதை கடன் முதலியவற்றைக் குறித்து வினவினுனென்றும், செவ்வாய் கூடியாவது நோக்கமுற்றுவது யிருப்பானுகில் அரசர்களால் உண்டாகும் துன்பத்தைக்குறித்துக் கேட்டானென்றுங் கொள்வாயாக எ-று. 55

செப்பரியா செவ்வாயோ ஆறீருறில்
செயமில்லா திருந்தாலும் துக்கசிந்தை
ஒப்பரியா விரண்டிருக்கில் தனத்திற்காக
ஒருமூன்றி லிருந்தாக்கால் களவுமூலம்
தப்பரவே நாலேழு பத்தில்நிற்கில்
தவராத சுகமொன்றைக் குறித்தானென்பர்
இப்புவியி லேந்தொன்பான் றனிலிருந்தால்
இல்லத்தில் மணமொன்றைக் குறித்தானென்னே.

இ-ள். லக்கினுதிபதி செவ்வாயாகி லக்கினத்திற்கு 6-8-12-ல் இருந்தால் துக்கசிந்தையைக் குறித்தும், 2-ல் இருந்தால் பொருளேக் குறித்தும், 3-ல் இருந்தால் தன் கைவிட்டுப்போன பொருளேக்

குறித்தும், 4-7-10-ல் இருந்தால் தனக்கு வேண்டிய சுகத்தைக் குறித்தும், 5-9-ல் இருந்தால் தன் குடும்பத்தின் கலியாண விஷயத்தைக் குறித்துங் கேட்டாயென்று கூறுக எ-று. 56

இயம்புமந்த லக்கினத்தோன் புதனேயாகி
எண்ணறியா சந்திரனோ டிருந்துஅந்த
செயந்தருகும் லக்கினத்திற் காறுஎட்டு
செழிப்பில்லா பன்னிரண்டி லிருப்பதோடு
நயந்ததொரு சுக்கிரற்கும் மூன்றெட்டாகில்
நமனுடைய வர்கனத்தை யிழந்ததாலே
பயமிருந்து கேட்டாயென் றுரைப்பாயப்பா
பன்னிரண்டி லிருந்தாக்கால் மரணமோதே.

இ-ள். ஆரூடலக்கினாதிபதி புதனாகி மேற்படி புதன் சந்திரனுடன்கூடி ஆரூட லக்கினத்திற்கு 6-8-12-லிருந்தாவது சுக்கிரன் இருந்த ராசிக்கும் 3-8-ஆகில் வந்தவனுடைய எருமை வாகனம் ஒன்றை இழந்துவிட்ட பயத்தால் வினவினனென்று கூறுக. மேற்படி புதனும் சந்திரனுங் கூடி, ஆரூட லக்கினத்திற்கும் சுக்கிரனுக்கும் பன்னிரண்டிலிருக்கில் அந்த வாகனம் மரணமாய்விட்டதென்றுங் கூறுவாயாக எ-று. 57

லக்கினத்தோன் புதனாகி நாலேழ்பத்தில்
இருந்தாக்கால் கிரயவிக் கிரயங்கள்சொல்லு
தக்கனவே யிரண்டுடைந்து ஒன்பதாகில்
தவறாது வாணிபத்தால் லாபமுண்டு
மிக்கபுதன் பகையெனிலோ வழக்குசொல்லு
மேலான சுன்கூடி இரண்டில்நின்றால்
துக்கமிலா பால்பசுவை வாங்கவென்று
சுருக்குடனே வினவிடுவான் சுருதிகூறே.

இ-ள். ஆரூடலக்கினாதிபதி புதனாகி 4-7-10-ல் இருந்தால் வாகன மூலமான கிரய விக்கிரயத்தைக் குறித்துக் கேட்டாயென்றும், 2-5-9-ல் இருந்தால் வாணிபத்தால் லாபமுண்டாயென்று வினவினாய் லாபமும் உண்டு என்றும், மேற்படி புதன் பகை பெற்றிருக்கில் வாகனத்தால் வழக்கைக் குறித்து வினவினனென்றும், புதனுடன் சுக்கிரன்கூடி இரண்டில் நின்றால் பசு வாகனத்தைக் கிரயங்கொள்ள வினவினனென்றுங் கூறுவாயாக எ-று. 58

அச்சமிலா வெள்ளியந்த பதியோனாகி
ஆறெட்டும் பன்னிரண்டி லிருந்தபோது
நிச்சயமாய் தன்பொருளைப் பிறரேகொண்டார்
நினைவாக வருமோவென் றினிதுகேட்டார்

இச்சையுள வெள்ளியவன் நான்கில்நின்றால்
இனிதான பூஷணத்தைக் கேட்டாயென்க
அச்சமிலா மதிகூடி யாறெட்டாகில்
அவன்பொருளுக் கரும்வழக்கா மறிந்துகூறே

இ-ள். ஆரூடலக்கினாதிபதி சுக்கிரனாகி, ஆரூடலக்கினத்திற்கு 6-8-12-ல் இருக்கில் தன் பொருளைப் பிறர் கைக்கொண்டதால் வின வினாய். அவை வருமோ, வாராதோவென்று வினவினாயென்க. மேற்படி சுக்கிரன் நான்கில் இருந்தால் பூஷணங்களைக் குறித்து வினவினாயென்க. மேற்படி சுக்கிரனுடன் சந்திரன்கூடி 6-8-ல் இருந் தால் தன் சுயபொருளுக்காக வழக்கு உண்டானதினால் கேட்டா யென்றுங் கூறுக. 59

சுக்கிரனால் ஆராய்வது

நல்லவெள்ளி யேழிருக்கில் விவாகமென்க
நவிலவொணு யிரண்டிருக்கில் தனத்திற்காக
அல்லலிலா மூன்றிருக்கில் களவாமென்க
ஆற்றவொணு நவத்திருக்கில் அன்னியர்க்காய்
வல்லவொரு உதவிக்காய் கேட்டாயென்க
வளமான வியத்திருக்கில் விரயமான
நல்லபொருள் வருமோவென் றினிதாய்க்கேட்ட
நல்வசன மென்றவர்க்கு ஓதுவாயே.

இ-ள். சுக்கிரன் ஆரூடராசிக்கு ஏழாம் ராசியிலிருக்கில் விவா கத்தைக் குறித்துக் கேட்டாயென்க. இரண்டாம் ராசியிலிருக்கில் பொருளுக்காய் வினவினாயென்க. மூன்றாம் ராசியிலிருக்கில் களவு போன பொருளைக் குறித்துக் கேட்டாயென்க. ஒன்பதில் இருக்கில் பிறருக்காய் உதவி செய்யும் எத்தனமாய்க் கேட்டாயென்க. 12-ல் இருந்தால் விரயமான பொருள் வருமோ வாராதோவென்று வினவினா யென்க எ-று. 60

பார்வையால் ஆராய்தல்

போற்றுகின்ற லக்கினத்தை யிரவிநோக்கில்
புகலவொணு அரசர்வகைக் கருமமென்க
சாற்றுகின்ற சந்திரனே நோக்கினக்கால்
சலிப்பில்லா பெண்மூல விஷயமென்க
எற்றுகின்ற செவ்வாயோ கலகசிந்தை
எண்ணவொணு புதனுக்கோ வணிகசிந்தை
ஆற்றுகின்ற குருநோக்கில் அரசர்மூல
அச்சமதைக் குறித்ததென வன்பாயோதே.

இ-ள். போற்றத்தகுந்த ஆரூட லக்கினத்தை ரவி நோக்கில் மேன்மையையுடைய ராசாக்கள் மூலமான காரியத்தைக் குறித்தும், சந்திரன் நோக்கில், ஸ்திரீமூல விஷயத்தையும் செவ்வாய் நோக்கில்,

கலகமான சங்கதியைக் குறித்தும், புதன் நோக்கில் வியாபார சங்கதியைக் குறித்தும், குரு நோக்கில் ராஜாக்களால் ஏற்பட்ட அச்சத்தைக் குறித்துங் கேட்டாயென்று கூறுக எ-று. 61

புகழ்படைத்த சுக்கிரனே நோக்கினுக்கால்
புகலவொண்ணு களத்திரத்தைக் கேட்டாயென்க
அகமகிழும் லக்கினத்தோன் சத்ருவாயின்
ஆற்றவொண்ணு கலகமதால் அலைந்தாயென்று
ஜெகம்புகழக் கூறுவர்காண் தெரிவாய்நீயும்
தெவிட்டாத மித்துருவே யாகிலப்பா
அகம்கிழ்வா யன்புண்டு என்றுஓது
அதிசயமா யிப்பலனை யறைகுவாயே.

இ-ள். ஆரூடலக்கினத்தைச் சுக்கிரன் நோக்கில் தன் களத்திரத்திற்குரிய விஷயத்தைக் குறித்து கேட்டாயென்றும் கூறுக. ஆரூட லக்கினத்தை நோக்கும் கிரகங்கள் ஆரூட லக்கினதிபதிக்குச் சத்துருவாயின் சொல்லமுடியாத கலகம் முதலியவற்றால் கஷ்டப்பட்டு வினவினையென்றும், ஆரூட ராசிக்குடையோனுக்கு நோக்கும் கிரகங்கள் மித்துருவாயின் சந்தோஷத்துடன் ஜெயிப்பாயென்றும் கூறுக எ-று. 62

துதித்த வாரூடத்தை நாலோன்பார்க்க
தோன்றுமொரு சுகமதனைக் கேட்டாயென்க
மதித்திட்ட பஞ்சமத்தோன் நோக்கினுக்கால்
மகிழ்வுடைய பூமியொன்றைக் கேட்டாயென்க
விதித்திட்ட வட்டமத்தோன் நோக்கும்போது
வீணான சண்டையினல் கேட்டாயென்க
கதித்திட்ட தசமத்தோ னேக்கும்போது
கனராஜர் வகையாகக் கேட்டாயென்னே.

இ-ள். யாவரும் போற்றத்தகுந்த ஆரூட ராசியை, ஆரூட ராசிக்கு 4-ஆம் வீட்டோன் நோக்கில் ஏதேனும் ஒரு மங்களகரமான சுகத்தைக் குறித்து கேட்டாயென்க. மேற்படி ஆரூட ராசிக்கு 5-ஆம் இடத்தை நோக்கினல் ஓர் பூமியைக் குறித்து கேட்டாயென்க. அட்டமாதிபதி நோக்கினல் வீண்சண்டையுண்டான விஷயத்தைக் குறித்து கேட்டாயென்றும், 10-ஆம் இடத்தோன் நோக்கினல் மேன்மையைப்பெற்ற அரசர் முகாந்தரமான காரியத்தைக் குறித்துங் கேட்டாயென்று கூறுக எ-று. 63

விவாக சிந்தை

கண்டதொரு பதியோனும் கேந்த்ரமேறி
கனமான சுபர்நோக்க லக்கினத்தில்
கொண்டவந்த சுக்கிரனே யிருந்தாலுந்தான்
குணமான குருசேர்ந்து பார்த்தாலுந்தான்

திண்டிறல்சே ரம்மனேயோன் உச்சம்பெற்று
திரராசி தனிலிருந்தால் சொல்லக்கேளு
விண்டிடுவாய் கலியாணந் தனைக்குறித்து
வினவீகிறுய் முடியுமென விளங்கஜதே.

இ-ள். ஆரூட ராசியதிபன் 1-4-7-10-ல் இருந்து ஆரூட ராசியைச் சுபர்கள் நோக்கினலும், ஆரூடராசியில் சுக்கிரனிருந்து அவனுடன் குரு சேர்ந்தாலும் பார்த்திருந்தாலும், அல்லது ஆரூட ராசிநாதன் திரராசியில் உச்சம்பெற்று இருந்தால் அவன் கேட்ட வினு கலியாணத்தைக் குறித்ததென்றும், அவை கூடிய சீக்கிரம் முடியுமெனவுங் கூறுவாயாக எ-று. 64

கடன்வாங்க எத்தனம்

உரைசெய்வாய் லக்கினத்தோ னுறில்நிற்க
உகந்தஅந்த ஆதிபனே லக்னமேற
உரைசெய்த லக்கினத்தோ னூறேன்கூடி
உத்தமர்கள் மனையதனி லிருந்தாலுந்தான்
உரைசெய்வா யவன்பிறரை கடனேகேட்டான்
உள்ளபடி கிடைக்குமோவென் றினிதாய்கேட்ட
உரையாகும் லாபத்தோன் நோக்கினுக்கால்
உள்ளபடி கிடைக்குமென உரைசெய்வாயே.

இ-ள். லக்கினத்தோன் 6-லும், 6-ஆம் வீட்டோன் லக்கினத்தி லிருந்தாலும், 6-ஆம் வீட்டோனும் ஆரூட லக்கினதிபதியுங்கூடி சுபர்கள் வீட்டிலிருந்தாலும் அவன் கேட்ட வினு பிறரை கடன் கேட்ட பொருள் வருமோ வாராதோவென்று வினவியதாகும். மேற்படி ஆரூட ராசியை அல்லது ஆரூட ராசிநாதனை பதினோராம் வீட்டோன் நோக்குவானுகில் கிடைக்குமெனவும் கூறுவாயாக எ-று.

வழக்கைக்குறித்த சிந்தனை

தானமெனும் லக்கினத்தோன் பத்தோன்கூடி
தயவில்லா வட்டமத்தி லிருக்கும்போது
ஊனமுள சனிசேயும் நோக்கினுக்கால்
உளவாக அரசர்வகை வழக்காமென்க
ஈனமிலா லக்கினத்தோன் பத்தாம்வீட்டோன்
இனிமையுளோ ராயிருந்து கொடியோர்சேர்ந்து
மானமிகு மாறிருந்தா லரசராலே
மகிழ்வில்லை வழக்கென்று மதித்துக்கூறே.

இ-ள். ஜென்மலக்கினுதிபதியும் 10-ஆம் வீட்டோனுங்கூடி அட்டமத்திலிருந்து அவர்களைச் சனி சேய் நோக்கியிருந்தாலும் அரசர் வழக்கைக்குறித்தே கேட்டாயென்க. மேற்படி லக்கினுதி பதியும் 10-ஆம் வீட்டோனும் சுபகோட்களாயிருந்து கொடியோ

ருடன் சேர்ந்து ஆரூடராசிக்காவது 10-ஆம் வீட்டிற்காவது ஆறிலிருந்தாலும் வருத்தத்தைத் தரத்தக்க வழக்காகக் குறித்து கேட்டாயென்றுங் கூறுக எ-று. 66

சண்டையாலோடிப் போனவன்

குலவுமந்த லக்கினத்தோ னிரவிகூடி
குற்றமிலா புதன்குருவின் இல்லம்புக்கி
இலகுமந்த ராசியுளோன் விரயமேற
இவர்நின்ற யிருமூன்றும் பனிரெண்டாகில்
உலகுபுக ழுவனில்லந் தனிலிருந்து
உற்றமனக் கலக்கமதால் வெளியேசென்ற
குலவுகின்ற ஆணொருவன் றனைக்குறித்து
குணமாகக் கேட்டதெனக் குறிப்பாயோதே.

இ-ள். ஆரூடராசி நாதனுடன் சூரியன் கூடி மிதுனம்-கன்னி-இவர்கள் தனுசு-மீனம் என்னுமிராசிகளிலிருந்து மேற்படி புதன் குரு ஆரூடலக்கினத்திற்கேனும், மேற்படி ஆரூடராசிநாதனிருந்த ராசிக்கேனும் பன்னிரண்டிலிருந்தால் அவன்வீட்டிலிருந்த ஆணொருவன் தனது மனக்கலக்கத்தால் ஓடிவிட்டதைக் குறித்து கேட்டாயென்று கூறுவாய் எ-று. 67

வீட்டிலுள்ள பெண் காணமற் போனது

நல்லவந்த வாரூடத் ததிபன்றானும்
நலமான வெள்ளிமதி புதனேயாகி
வல்லவந்த ராசிதனக் கிருமூன்றேனும்
வளமான கேதுடனே விரயமேற
அல்லலிலா குடும்பமதில் கன்னிதானும்
ஆற்றவொணா சண்டையினால் வீட்டைவிட்டே
மெல்லவவள் காணாத விவரத்தாலே
மேதினியில் வினவினதென் றினிவாயோதே.

இ-ள். ஆரூடராசிநாதன் சுக்கிரன் - சந்திரன்-புதன் இம்மூவரிலொருவராயிருந்து, ஆரூடராசிநாதனுக் காறுமிடத்தோனும் கேதுவுங்கூடி 12-ஆம் வீட்டிலிருந்தால் அவன் குடும்பத்திலுள்ள கன்னியொருத்தி சண்டையால் காணமற்போன விஷயத்தைக் குறித்துக் கேட்டாயென்றுங் கூறுவாய் எ-று. 68

பொருள் களவு

ஆமிரண்டுக் கதிபனுடன் மூன்றோன்கூடி
யன்பான மூன்றாறு வியத்திருந்து
தாமூன்றுக் கதிபனவ் விலக்கினத்தை
தவராது நேர்நோக்காய் நோக்கினாலும்

தேமூன்றுப் பதியோனும் நவத்தோன்கூடி
தெளிவில்லா வட்டமமும் வியத்திருந்து
பாமூன்றே னட்டமத்தோன் சத்ருவாகில்
பணிபொருளைத் திருடியதால் கேட்டாயென்னே.

இ - ள். ஆரூடராசிக்கு இரண்டாம் வீட்டிற்குடையவனுடன் மூன்றும் வீட்டோன்கூடி இரண்டாமிராசிக்கு 3-6-12-லிருந்து மூன்றும்வீட்டோன் ஆரூடராசியை நோக்கினுலும் 3-10-க்குடையவரொன்றுகூடி ஆரூடராசிக்கு 8-12-லிருந்து மூன்றும் வீட்டோனுக்கு அட்டமாதிபதி சத்துருவாகில் அவன் வீட்டிலுள்ள பொருள் பூஷணமுதலியவை களவுபோன விஷயத்தைக் குறித்துக் கேட்டாயென்றுங் கூறுவாய் எ-று. 69

வியாபார வகையைக் குறித்த வினு

பகருமந்த லக்கினத்தோன் புந்தியாகி
பண்பான நாலேழு பத்திருந்து
சகமறியு மன்னவனுல் நோக்கமுற்றுல்
சலிப்பில்லா வியாபார வகையாமென்க
நிகரில்லா வப்பதியோன் வெள்ளியாகி
நேர்மையுள்ள மதிகுருவும் நேசமாகி
அகமகிழும் பதினென்று இரண்டிருந்தால்
அச்சமிலா வாணிபத்தைக் கேட்டாயென்னே.

இ-ள். ஆரூடராசிக்குடையோன் புதனுகி ஆரூடராசிக்கு 4-7-10-லிருந்து குருவால் பார்க்கப்பெற்றுல் வியாபார விஷயமாய்க் கேட்டாயென்றுங் கூறுக. ஆரூடராசிநாதன் சுக்கிரனுகி சந்திரன் குருவுடன் சகிதம் பெற்று ஆரூடராசிக்கு 2-11 முதலிய க்ஷேத்திரங்களி லிருந்தாலும் வியாபார விஷயத்தைக் குறித்துக் கேட்டாயென்றுங் கூறுவாயாக எ-று. 70

பூமிவாங்கும் விஷயம்

விஞ்சுகுஜன் லக்கினத்தோ னுகியப்பால்
விசையான புந்திகுரு வுடனேகூடி
செஞ்சொரி ராகுவுநோக்க விருந்தாலப்பா
செழிப்பான பூமியொன்றை குறித்தாயென்க
தஞ்சமிலா லக்கினத்தோன் செவ்வாய்கூடி
தவரில்லா கோணமதி லிருந்தாலுந்தான்
வஞ்சமிலா பூமியொன்றை வாங்கவென்று
வருந்துகிரு யவ்விஷயங் கேட்டாயென்னே.

இ-ள். ஆரூடராசிக்குடையோன் செவ்வாயாகி குரு புதனுடன் கூடி எந்த ராசியில் இருந்தாலும் இராகுவால் பார்க்கப்பெற்றால் ஓர் பூமியைக் குறித்துக் கேட்டாயென்றுங் கூறுக. ஆரூட ராசிநாதர் எவராயினும் செவ்வாயுடன் கூடி 5-9-ல் இருந்தால் குற்றமில்லா பூமி யொன்றை வாங்குவதற்காய் கஷ்டப்படுகிறாய். அவ்விஷயத்தைக் குறித்துக் கேட்டாயென்றுங் கூறுக எ-று. 71

உத்தியோக விஷயம்

தருகுமந்த லக்கினத்தோன் தசமத்தோனும்
தவறாது ஒருவனுமா யிரண்டில்நின்று
பெருகுமந்த சனிரவியால் பார்வையுற்றால்
பேசவொண்ணு அரவகைத் தொழிலாமென்க
வருகுமந்த லக்கினத்தோன் பாபியாகி
வளமைபெரு சனிரவியோ டிசைந்தாலுந்தான்
தருகுமந்தத் தொழிலதனை குறித்தாயென்று
தளராதே நிலைபெற யுரைசெய்வாயே.

இ-ள். ஆரூட ராசிக்குடையவனும் 10-ஆம் வீட்டோனும் ஒருவனாகி ஆரூடராசிக்கு இரண்டிலிருந்து சனி ரவி இவர்களால் பார்க்கப்பட்டால் அரசர் முகாந்தரமான தொழிலைக் குறித்துக் கேட்டாயென்க. ஆரூட லக்கினாதிபதி பாவர்களில் ஒருவனாகி சனி ரவி இவர்களுடன் கூடினாலும், ஒரு தொழில் முகாந்தரமான விஷய மாய்க் கேட்டாயென்றுங் கூறுவாய் எ-று. 72

பூஷணங்களைக் குறித்த வினா

மதித்திட்ட லக்கினத்தோன் நாலோன்கூடி
வளமையுள ஐந்தினிலே வரிசையாக
துதித்திட்ட சுக்கிரனோ டிருந்தஅந்த
நன்மைதரு மிரவியினால் பார்வையுற்றால்
கதித்திட்ட தன்பொருளை பிறரோகொண்டார்
கவனமுடன் வருமோவென் றினிதாய்கேட்ட
மதித்திட்ட கேள்வியென மகிழ்வாயோது
மன்னர்வகை வழக்காலே வருமென்றோதே.

இ-ள். ஆரூட லக்கினாதிபதியும் நான்காம் அதிபதியுங்கூடி ஐந்தாம் ராசியிலிருக்க அவர்களுடன் சுக்கிரன் கூடியிருக்க அவர்களை சூரியன் பார்த்தால் அவன் கையிலுள்ள பூஷணங்களைப் பிறர் கைக் கொண்டதால் அவை வருமோ வராதோவென்று வினவியதாகும். அவர்களை குரு பார்க்கின் வருமெனவுங் கூறுவாயாக எ-று. 73

வெளியூர் சென்றவரைக் குறித்த வினு

சேயினிட யிருமனையி லிராசியாகி
செழிப்பான சுக்கிரனே டினிதாய்க்கூடி
மாயுலியக் தனிலிருந்தால் வெளியேசென்ருேர்
வரவதனைக் கேட்டிடுவார் லக்கினத்தோன்
மேயுமந்த கேந்திரத்தோ ருடனேகூடி
மிகவான மூன்றுவியக் தனிலிருந்தால்
வேயுமவன் மனைவியிட வரவைக்கேட்டு
மேன்மைபெற வந்தவனென் றினிதாயோதே.

இ-ள். ஆரூடராசி மேடம் விருச்சிகம் இவ்விரண்டி லொன்ருகி சுக்கிரனுடன்கூடி 12-ல் இருந்தால் ஒருவர் வெளியூர் சென்றதைக் குறித்து வருவாரோ வாராரோவென்று வினவியதாகும். ஆரூட ராசி யதிபதி எவராயினும் 1-4-7-10-க்குடையவருடன் கூடி 3-12-ல் இருந்தால் அவன் மனைவியின் வரவைக் குறித்து கேட்கவந்த விஷய மாகும் எ-று. 74

நோயைப்பற்றிய விஷயம்

விளையுமந்த லக்கினத்தோ னூரூனுக்கு
விமர்ச்சியிலா சத்துருவா யிருந்துஅப்பால்
களையுமந்த ஏழினிலே யிருந்துநோக்கில்
காணுமந்த வியாதியினல் கேட்டதென்க
புளையுமந்த லக்கினத்தோன் ஆறில்நின்று
பொல்லாத சஷ்டமத்தோன் மதியோடுய்ய
பளையவியா தியைக்குறித்து கேட்டானென்று
பக்ஷமுட னெடுத்துரைப்பாய் பழுதிராதே.

இ-ள். ஆரூட ராசிநாதனுக்கும் ஆறும் வீட்டதிபனுக்கும் சத்துருவாகி மேற்படி ராசிக்கு 7-ல் நின்று ஆரூடராசியை நோக்கில் அவனுக்குள்ள வியாதியைக் குறித்து கேட்டானென்றும், ஆரூட ராசிநாதன் 6-லும் ஆரும் வீட்டோன் சந்திரனுடனும் கூடியிருக்கில் வெகுநாளா யிருக்கும் வியாதியைக் குறித்துக் கேட்ட விஷயமாகுமென்றுங் கூறுக எ-று. 75

குளம் கிணறு வெட்ட

செய்யவந்த ராசியது கடகம்கும்பம்
செழிப்பான குருநோக்க முற்றிருந்தால்
உய்யுமிவன் பூமியிலே கிணறுவெட்ட
உறுதியுடன் கேட்கவந்த விஷயமாகும்

ஙையவந்த ராசியுளோன் கடகம்கும்பம்
நன்மைபெற நின்றிருந்து ராசிநாதன்
செய்புமந்தக் கேந்திரத்தி லிருந்தாலுந்தான்
செழிப்பான கிணறென்றைக் குறித்ததென்னே.

இ-ள். ஆரூடராசியானது கடகம் கும்பம் இவ்விரண்டிலொன்ருகி அவ்விராசியை குரு நோக்கவுமிருந்தால் தன் பூமியில் கிணறுண்டாக்கும் விஷயத்தைக் குறித்து கேட்ட விஷயமாகும். ஆரூடராசி எவையாயினும் அவ்விராசிநாதன் கடகம் கும்பம் இவற்றிலிருந்தும் அல்லது கேந்திரங்களிலு மிருந்தால் கிணறு மூலமான விஷயங்களைக் குறித்துக் கேட்க வந்தாயென்றுங் கூறுவாயாக எ-று. 76

ஆரூட விஷயமான சந்தேக வினு

சோதிபெரு மென்குருவே சுகுணமான
சுருதியதை யெடுத்துரைத்தீர் சோர்வில்லாமல்
நீதிபெற அவைஜெயிக்கும் ஜெயிக்காதென்று
நினைவுடனே சொல்லுவகை எந்தவாறு
பாதிமதி யணிந்தவருக் கன்பதான
பத்தினியா ளுத்தமிக்குப் புத்திரனுன
ஆதிய் சுரர்கருவை யழித்தமாயா
அன்புடனே எந்தனுக்கு உரைசெய்வீரே.

இ-ள். சந்திரனைச் சடையிலணிந்த பரமேட்டியின் பத்தினியின் கர்ப்பத்திலுதித்து ஆதியில் அதஞ்செய்து கொண்டிருந்த அசுரரை வதைத்த பிரகாசம் பொருந்திய என் குருதெய்வமே! பிரசன்ன பாவத்தால் வந்தவரின் மனேபாவங்களை எளிதிலறியும் வண்ணம் உரைத்தருளினீர். அவை ஜெயிக்குமா ஜெயிக்காதாவென்றும், நன்மையா தீமையாவென்ற விஷயத்தை யறிந்துகொள்ளும் மார்க்கம் எவ்வாறறிவது அதனைக் கிருபைகூர்ந்து உரைசெய்ய வேணுமாய் திருப்பாத கமலங்களை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன் எ-று. 77

ஜெயம் அபஜெயம் அறிதல்

கேளப்பா லக்கினத்தோன் நாலோன்பத்தோன்
செழிப்பான சப்தமத்தோன் நால்வருந்தான்
ஆளப்பா பெற்றபலத் தளவுகண்டு
அவர்கள்வருங் காரியத்தின் ஜெயமும்பின்பு

மீளப்பா அபஜெயமு முரைத்தல்நன்று
மேன்மையுள நால்வரிலே பத்தாம்வீட்டோன்
வாளப்பா தசமத்தின் தசமத்தாகில்
வரிசைபெற ஜெயிக்குமென வளமாய்கூறே.

இ-ள். அகத்தியமாமுனியே! கேட்பாயாக. குறித்த காரியம் ஜெயிக்குமோ ஜெயிக்காதோவென்று கேட்கில் ஆரூட ராசிநாதன் நாலாம் வீட்டோன், ஏழாம் வீட்டோன், பத்தாம் வீட்டோன் இந் நால்வருமிருந்த பலத்தைக்கொண்டே ஜெயிக்கும் ஜெயிக்காதென நிச்சயமாய்க் கூறவேண்டும். எப்படியெனில், ஆரூடராசிக்கு பத்தாம் வீட்டோன் 10-க்கு பத்தாம் ராசியில் இருக்கில் கூடிய சீக்கிரம் ஜெயிக்குமெனக் கூறுவாய் எ-று. 78

ஓதுமந்த லக்கினத்தோன் தசமத்தோனும்
உள்ளபடி நாலேழு பத்தில்நின்று
சாதுவுள மித்துருவால் பார்வையுற்று
சலிப்பில்லா திருந்தயில்லம் சுபரேயாகில்
நீதமுடன் ஜெயிக்குமப்பா நன்மையுண்டு
நிச்சயமாய் வாழ்வுண்டு நீணிலத்தில்
போதரவே கோணமதி லிருந்தவீடு
பொழியுமந்த மித்துருவெனில் ஜெயமேகூறே.

இ-ள். ஆரூட லக்கினதிபதி 4-7-10-ஆம் வீட்டோா இவர்கள் தங்கள் தங்கள் க்ஷேத்திரங்களுக்கு 1-4-7-10-ல் நின்று தனது உறவுக் கிரகங்களால் பார்வையுற்றுமிருந்து அவர்கள் இருந்த க்ஷேத்திரமும் சுபர்களுடைய க்ஷேத்திரமாயின் அவன் குறித்த காரியம் கட்டாயம் ஜெயிக்குமென்றும், நன்மை சந்தோஷம் உண்டென்றுங் கூறுக. 5-9-என்னும் கேந்திரங்களில் இருக்கில் அவ்வீடு அவர்களுக்கு மித்துருவாயின் ஜெயிக்குமென்றுங் கூறுவாயாக எ-று. 79

ஆமப்பா லக்கினத்தோன் ஏழோன்பத்தோன்
அருமையுள நான்கிடத்தோன் நால்வருந்தான்
நாமப்பா ஆக்ஷிதனக் காறுஎட்டு
நன்மையிலா பன்னிரண்டில் நீச்சம்மூடம்
தாமப்பா பலமிழந்து யிருப்பாராகில்
தவராகா நினைத்ததுவோ ஜெயமேயில்லை
போமப்பா கைப்பொருளுங் கஷ்டமுண்டு
புகழ்ச்சியில்லை அபஜெயமே புகல்வாய்நீயே.

இ-ள். ஆரூட லக்கினதிபதியும் 4-7-10-க்குடையவர்களும் தங்கள் தங்கள் க்ஷேத்திரங்களுக்கு 3-6-8-12 இவ்விடங்களில் நீச்சம்

மூடம் முதலியவை பெற்றிருக்கின் நினைத்த காரியம் ஜெயம் உண்டாகாது. அதனால் கைப்பொருள் நஷ்டம் - கஷ்டம் - அபஜெயம் முதலியவைகளே உண்டாகுமென்று கூறுவாய் எ-று. 80

வாழ்த்துகின்ற லக்கினத்தோன் சத்ருவோடும்
வளமான ஆறெட்டு வியத்தில்வீழ்ந்து
போத்தியதோர் தசமத்தோன் பலமேபெற்றால்
பொல்லாத கலகமுண்டு பின்புதானே
ஏத்துகின்ற முயற்சியினால் ஜெயிக்குமென்பார்
இவனுக்கு அவ்வகையில் பொருளோநஷ்டம்
சாத்துகின்ற அலைச்சலுண்டு சரியாயோது
சற்றுமிவன் மனதிற்குங் கிலேசஞ்சொல்லே.

இ-ள். யாவருங் கொண்டாடத்தகுந்த ஜென்மலக்கினாதிபதி தனது சத்துருவுடன்கூடி தனது ஆக்ஷி வீட்டிற்கு 6-8-12-லிருந்து மேற்படி ஆரூட ராசிக்கு 10-ஆம் வீட்டோன் பலம்பெற்று நிற்கின் கோரிய விஷயமூலமாய் கலகம் முதலியவைகள் உண்டாகி இவன் முயற்சியினால் ஜெயிக்குமாயினும் அக்காரணத்தால் அலைச்சல் மனவிசனம் பொருள்நஷ்டம் முதலியவையும் உண்டாகுமென்று கூறுவாய் எ-று. 81

பஞ்சபலமென்பதை வினவல்

சீராருஞ் சிறப்போங்குந் திருவேஅந்த
திருமாலுக் கருமருகா திவ்யஞான
பேராரு மருணிறைந்த பொருளேஎங்கும்
பெருமைபெறத் திருவிளையாட் டதனைச்செய்து
தாராருங் கமலமலர் வேய்ந்தமார்பா
தனிவள்ளி தெய்வானை தனக்குநேயா
சீராருங் கோட்களிட ஆக்ஷிஉச்சம்
செழுமைபெறு முறவுபகை சமமுஞ்சொல்லே.

இ-ள். சிறப்புற்றோங்கிய செல்வமே! மகாவிஷ்ணுவின் ஆசை மருகனும், அமிர்தத்துக்கொப்பான ஞானமயமே! பெருமைபெற்ற கிருபாகடாக்ஷம் நிறைந்த பொருளே! இப்பூவுலகெங்கும் அனைவரும் புகழ்ச்சி செய்யும்வண்ணம் திருவிளையாடல் செய்தருளிய புண்ணியனே! கடம்பமலரை மார்பிலணிந்த ஜோதிப் பிரகாசமே! நவக்கோட்களின் பஞ்சபலங்களான நட்பு-ஆக்ஷி-உச்சம்-நீச்சம்-பகை என்கிற விவரங்களைக் கூறும்வண்ணம் பிரார்த்திக்கின்றனம் எ-று. 82

நவக்கோட்களின் பஞ்சபலம்

கிரகம்	மேடத் துக்கு	ரிஷபத் துக்கு	மிதுன த்துக்கு	கடகத் துக்கு	சிங்கத் துக்கு	கன்னி க்கு
சூரியன்	உச்சம்	பகை	சமம்	நட்பு	ஆக்ஷி	சமம்
சந்திரன்	சமம்	உச்சம்	நட்பு	ஆக்ஷி	நட்பு	நட்பு
குஜன்	ஆக்ஷி	சமம்	பகை	நீச்சம்	நட்பு	பகை
புதன்	சமம்	நட்பு	ஆக்ஷி	பகை	நட்பு	ஆக்ஷி
குரு	நட்பு	பகை	பகை	உச்சம்	நட்பு	பகை
சுக்ரன்	சமம்	ஆக்ஷி	நட்பு	பகை	பகை	நீச்சம்
சனி	நீச்சம்	நட்பு	நட்பு	பகை	பகை	நட்பு
இராகு	பகை	நீச்சம்	நட்பு	பகை	பகை	நட்பு
கேது	பகை	நீச்சம்	நட்பு	பகை	பகை	நட்பு
கிரகம்	துலாத் திற்கு	விர்ச்சிக த்திற்கு	தனுசு க்கு	மகரத் துக்கு	கும்பத் துக்கு	மீனத் துக்கு
சூரியன்	நீச்சம்	நட்பு	நட்பு	பகை	பகை	நட்பு
சந்திரன்	சமம்	நீச்சம்	சமம்	சமம்	சமம்	சமம்
குஜன்	சமம்	ஆக்ஷி	நட்பு	உச்சம்	சமம்	நட்பு
புதன்	நட்பு	சமம்	சமம்	சமம்	சமம்	நீச்சம்
குரு	பகை	நட்பு	ஆக்ஷி	நீச்சம்	சமம்	ஆக்ஷி
சுக்கிரன்	ஆக்ஷி	சமம்	சமம்	நட்பு	நட்பு	உச்சம்
சனி	உச்சம்	பகை	சமம்	ஆக்ஷி	ஆக்ஷி	சமம்
இராகு	நட்பு	உச்சம்	நட்பு	பகை	பகை	நட்பு
கேது	நட்பு	உச்சம்	நட்பு	பகை	பகை	நட்பு

இராகுகேதுக்களுக்குச் சில நூற்கள் உச்சராசியில்லையென்றுங் கூறுகின்றன.

கனுப்பலன்

வெற்றிதரு வேலணிந்த விண்ணோர்போற்றும்
விகசிதமா மயிலேறி விளங்குந்தேவா
சற்றுவெனக் கருள்சுரந்து வடியேன்கேட்கும்
சயனபலன் தனையுரைப்பாய் சமரஞ்செய்து
குற்றமுறு மசுரர்படை மாய்த்தமாயா
குவலயத்தோர் கொண்டாடி வணங்குந்தேவா
வெற்றியெனக் களிக்குமந்த தேவாமூவா
விளங்கவெனக் கருள்சுரப்பாய் போற்றினேனே.

இ-ள். தேவர்முதல் யாவரும் கொண்டாடும்படி பிரகாசத்துடன் அழகிய மயில்மீதமர்ந்து கொடுமையை விளைவிக்கின்ற அசுரர் படையை மாய்த்து உலகத்தோர் கொண்டாடி வணங்கும் வெற்றி வேலையுடைய தேவனே! என் மனக்குறையை நீக்கவந்த ஈசனே! என் மனத்தில் ஓர் சந்தேகம் என்னவெனில், சயனகாலங்களில் உண்டாகும் கனவின் விவரங்களையும் அதன் பலனையுங் கருணைகூர்ந்து உரைசெய்வீராகவும் எ-று. 83

கனவின் பலனுரைத்தல்

செம்மைபெறச் சொல்லுகிறேன் கனவின்பாகம்
செழிப்பான தேவர்களைக் கண்டாரானால்
இன்மையுண்டு நாளேழி லிவன்வர்க்கத்தால்
இயல்வத் திரங்கள் புதிதாய்கண்டால்
வெம்மைபெரு நோயுண்டு வாரமொன்றில்
வளமான குதிரைகளைக் கண்டாரானால்
நன்மையுண்டு சிலநாளில் பொருள்வந்துய்யும்
நடக்கவரு மன்னியவூ ரென்றுவோதே.

இ-ள். அகத்தியமாமுனியே! கனவின்பலனை எடுத்துரைப்பேன் கேட்பாயாக. எப்படியெனில், தேவர்களைக் கண்டால் தான்கண்ட ஒரு வாரத்துள் தன் வர்க்கத்தவரால் சந்தோஷம் உண்டாகும். புதிய வஸ்திரங்களைக் கண்டால் ஒரு வாரத்துள் நோயுண்டு. (வியாதியுண்டு) குதிரைகளைக் கண்டால் சிலநாளுக்குள் பொருள்வந்து சேர்தலும், அந்நிய ஊர் பிரயாணமும் நேருமென்று கூறுவாயாக எ-று.()

கன்னிதனை முழுக்குடத்தோ டவனுங்கண்டால்
களிப்புண்டு மாதமொன்றுள் கன்னியாலே
பின்னமிலா பொன்வணிகர் தன்னைக்கண்டால்
போகுமப்பா பூஷணங்கள் களவதாக
இன்னமொன்று பெண்பேசுவதைப் போல்கண்டால்
எழிலான பூஷணங்கள் வாங்கநேரும்
நன்னயமோ டவன்மனைவி கனவில்வந்தால்
நலமுண்டு குடும்பகுறை நீங்குமாமே.

இ-ள். முழு ஜலக்குடத்தையுடைய பெண்ணொருத்தியைக் கண்டால் ஓர் மாதத்திற்குள் சந்தோஷம் உண்டாகுமென்றுங் கூறுவாயாக. பொன் வியாபாரிகளைக் கண்டால் தன் கையிலுள்ள பூஷணங்கள் விரயம் உண்டாகும். (களவு காணும்) ஓர் பெண்ணுடன் பேசுவதைப்போல் கண்டால் பூஷணங்களைவாங்க நேரும். இறந்துபோன இவன் மனைவியைக் கண்டால் தன் மனத்திலுள்ள குறைநீங்கி நன்மை உண்டாகும். இவை மாதமொன்றுக்குள் அடையலாம் எ-று. 85

பற்றற்ற குழவிகளைக் கண்டானாகில்
பரிசுத்த மாகிடுவான் தொல்லைநீங்கி
குற்றமற்ற தெய்வமதை வணங்கினாக்கால்
குவலயத்தில் வாழ்வுண்டு குணமாயோது
சுற்றிமதி லேறிவிழக் கண்டானாகில்
சுகமதனை யிழந்திடுவான் நாளிரண்டில்
மற்றதுநீ ரோடைகளைக் கண்டானாகில்
மனமகிழப் பொன்வருகும் மகிழ்ச்சிதானே.

இ-ள். குற்றமில்லாத விருதாப்பிய ஸ்திரீகளைக் கண்டால் தன் தொல்லை துன்பம் முதலியன நீங்கி சுகித்திருப்பான். தனது குல தெய்வத்தை வணங்குவதைப்போல் கண்டால் சிலநாளில் பெருமை பெற்ற வாழ்வுண்டாகும். மதிற்சுவற்றிலேறி வீழ்வதைப்போல் கண்டால் தான் அனுபவித்திருக்கும் சுகத்தை இழந்துபோவான். நீரோடைகளைக் கண்டால் தான் சந்தோஷமடையும்படி பொன் உண்டாகும் எ-று. 86

குக்கலது கடிக்கத்திடுக் கிட்டெழுந்தால்
குவலயத்தில் வறுமையுண்டு துக்கமுண்டு
தக்கவிவன் மைந்தர்களோ சாகக்கண்டால்
சலிப்பொழியும் ருணந்தீரும் சமர்த்தாய்சென்று
பக்கமனை தனில்சென்று சண்டைசெய்தால்
பலியாது யிவன்தொடுத்த காரியங்கள்
துக்கமிலா திருப்பதைப்போல் கண்டானாகில்
துரையாவான் சிலநாளில் சுருக்காயோதே.

இ-ள். நாய் கடிக்கத் திடுக்கிட்டு எழுந்திருப்பானாகில் அவனுக்குச் சிலநாளில் வறுமை துக்கம் முதலியன உண்டாகும். தனது புத்திரர் இரந்துபோனதைப்போல் கண்டால் தனக்கிருக்கும் வெறுப்பும் கடனும் தீரும். தன் இல்லத்திற்கு அடுத்த இல்லத்தில் சென்று தைரியத்துடன் சண்டையிடுவதைப்போல் கண்டால் தான் தொடுத்த காரியங்கள் ஜெயமாகாது. சந்தோஷத்துடன் சுகித்திருப்பதைப்போல் கண்டால் சிலநாளில் நல்ல மேன்மையை யுடையவனாவான் எ-று. 87

சாற்றுகிறே னிறந்தவன்னை தன்னைக்கண்டால்
சரியான பொருளுண்டு சாற்றுவேன்கேள்
போற்றுகின்ற தந்தைதனைக் கண்டாலப்பா
புகழ்ச்சியுள காரியத்தில் ஜெயங்களுண்டு
ஏற்றுகின்ற பெண்தெய்வந் தன்னைக்கண்டால்
இவனுக்கு தீர்க்காயு ளென்றுஓது
தூற்றுமந்த வேசியரைக் கண்டானாகில்
துரையவரால் செல்வமுண்டு துரிதந்தானே.

இ-ள். இறந்துபோனத் தனது மாதாவைக் கண்டால் அரிய பொருள் வந்து சேரும். இறந்துபோன தந்தையைக்கண்டால் தான் குறித்த காரியத்தில் ஜெயமுண்டாகும். புகழத்தகுந்த பெண் தெய்வங்களைக் கண்டால் தீர்க்காயுளுண்டாகும். வேசிகளைக்கண்டால் அரசர்களால் செல்வமுண்டென்றுங் கூறுக எ-று. 88

உன்னுமந்த பாம்பதுவோ துரத்தக்கண்டால்
உதவாது பொருள்நாசம், உயிர்க்குச்சேதம்
மின்னுகின்ற பாம்பதுவே கடித்ததாகும்
மேலாகும் பொருளெல்லாம் வந்துகிட்டும்
பன்னுமந்த வாகனங்க ளிடித்ததாகில்
பண்ணியதோர் பாவமெலாம் விமோசனந்தான்
எண்ணுமந்த வாகனங்கள் துரத்தினுக்கால்
இவனுக்குக் குற்றமுண்டு இனிதாய்கூறே.

இ-ள். பயத்தையுடைய பாம்புகள் தன்னை துரத்துவதைப்போல் கண்டால் பொருள்நாசம், உயிர்ச்சேதம், தீமை முதலியவையுண்டு. பாம்பு கடிப்பதைப்போல் கண்டால் தன்குறை நீங்குதல், பொருள் வந்து சேர்தல் முதலிய பலனும், வாகனங்கள் பாய்வதைப்போல் கண்டால் அவன் செய்த பாவம் யாவும் விமோசனமான தென்றும், வாகனங்கள் துரத்துவதைப்போல் கண்டால் அவனுக்கு குற்றமேற் படுமென்றுங் கொள்க எ-று. 89

சொன்னமொழி தவராது சயனந்தன்னில்
சுருக்காக மரம்வீழக் கண்டானாகில்
இன்னவன்றன் வர்க்கமதி லிறந்துபோவார்
இவன்பிறரா லிம்சையுறக் கண்டானாகில்
பன்னுமறை மொழிப்படியே பலகாலுந்தான்
பக்ஷமிலா தலைந்திடுவான் பாங்கியோடு
உன்னு நந்தவனந்தனிலே உலாவினுக்கால்
உயிர்ச்சேதம் துன்பமுண்டு உண்மையீதே.

இ-ள். தான் நித்திரை செய்யும்போது மரம்முறிந்து விழுவதைப் போல் கண்டால் அவனது வர்க்கத்தில் மரணமுண்டாகும். தான் பிறரால் இம்சையுறுவதைப்போல் கண்டால் அவன் மனவருத்தத் துடன் அலைந்து திரிந்திருப்பான். தோழிகளோடு நந்தவனங்களில் உலாவுவதைப்போல் கண்டால் உயிர்ச்சேதம், துன்பம் முதலியவை யுண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று. 90

கனவின்பலன் முற்றிற்று.

நக்ஷத்திர திசை விவரம்

அச்சுவினி	மகம்	மூலம்	கேதுதிசை
பரணி	பூரம்	பூராடம்	சுக்கிரதிசை
கார்த்திகை	உத்ரம்	உத்ராடம்	சூரியதிசை
ரோகணி	அத்தம்	திருவோணம்	சந்திரதிசை
மிருகசிரம்	சித்திரை	அவிட்டம்	செவ்வாய்திசை
திருவாதிரை	சுவாதி	சதயம்	இராகுதிசை
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குருதிசை
பூசம்	அனுஷம்	உத்திரட்டாதி	சனிதிசை
ஆயில்யம்	கேட்டை	இரேவதி	புததிசை

(கோசாரதிசைப்பலன்)

இரவிதிசை வரு 6-க்கு

துலங்குமிரவிதிசையாண்டு தோன்றுமாறின்பலன்கேளு
இலங்குபொருளும்நாசமதாம் இவனின் தந்தைக்கிருநோயாம்
நலங்கொள்வகையில்நவிலவொண்ணு நன்மைப்பாழாம்நன்றென்ற
நிலங்கள்விளைவுகுறைவதுடன் நெறிபோமிவனுக்குரைசெய்யே.

இ-ள். பிரகாசம்பொருந்திய இரவிதிசை வரு 6-க்கும் பலன் என்னவெனில்? தன்கையிலுள்ள பொருள் நாசமாதல், இவனது தந்தைக்கு இருவிதமான நோயுண்டாதல், தான் நன்மையென்று மதித்திருந்த வகையில் அளவில்லா நன்மை பாழாதல், பூமி மூலமாய் விவசாயங்குறைதல் முதலிய பலனுண்டாகும் எ-று. 91

சந்திரதிசை வரு 10-க்கு

சாறுமதியின்திசையாண்டு தசமம்வரையில்பலன்கேளு
கோறும்பொருளும்வந்தடையுங் குறித்தகன்னிதனைக்கொள்வன்
வீறுமைந்தர்செழித்தோங்கும் வேணபூமிவந்தடையும்
கோறும்புரவிதனைக்கொண்டு குறிப்பாய்வாழ்வானெனக்கூறே.

இ-ள். சந்திரன்திசை வரு 10-க்கும் பலன் என்னவெனில்? தான் கோரிய பொருள் வந்தடைதலும், தான் குறித்த பெண்ணைக் கைக்கொள்ளுதலும், புத்திரர்கள் செழித்தோங்கி வளர்தல், பூமி முதலியவை வந்தடைதல், தான் கோரிய வாகனமான குதிரையைக் கொண்டு சுகித்து வாழ்ந்திருப்பானென்றுங் கூறுவாயாக எ-று. 92

செவ்வாய்திசை வரு 7-க்கு

பலிக்குஞ்செவ்வாதிசையாண்டு பாங்காய்எழுமட்டுங்கேள்
வலிக்குந்தலையும்வாதமுடன் வளமாய்பூமிசேதமுமாம்
ஒலிக்கும்பொன்னுஞ்சிலவாகும் உள்ளசுற்றம்பாழாகும்
சலிக்கச்செய்யும்மனைவியினுல் சரியாய்துன்பமெனச்சொல்லே.

இ-ள். செவ்வாய்திசை ௵ 7-க்கும் தலைவலி, வாதநோய் மேன்மைபெற்ற பூமி முதலியவை சேதமுண்டாதல், பிரகாசம் பொருந்திய பொன் பூஷணங்கள் சேதம், தன் சுற்றத்தவர் நாசம், சலிப்பு, மனைவியினால் பல தொந்திரவு முதலிய பலன் உண்டாகு மென்று கூறுவாய் எ-று. 93

இராகுதிசை ௵ 18-க்கு

துய்யராகுதிசைவருடம் தோற்றும்பதினெட்டாண்டிலுமே
செய்யுந்தொழிலைப்பாழாக்கும் சேயன்மனமும்புண்ணாகும்
பையவிவனின்பூமியெலாம் பகைவர்கைக்கொள்வார்களே
மெய்யில்விஷத்தால்நோயுண்டு மேலோர்பகையுமுண்டென்னே.

இ-ள். மேன்மையையுடைய இராகுதிசை ௵ 18-க்கும் தான் செய்யுந் தொழில் யாவும் பாழாதல், மனசஞ்சலத்தால் புண்ணாதல், தன் சொந்தபூமி யாவையும் பகைவர் கைக்கொள்ளுதல், தேகத்தில் விஷத்தால் பீடை, மேன்மைபெற்ற தனவந்தரின் பகை முதலியவை உண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று. 94

குருதிசை ௵ 16-க்கு

கூறுங்குருவின்திசைவருடம் குறையாதீரெட்டாண்டிலுமே
பேருங்கீர்த்தியுண்டாகும் பெருமையோங்குமரசர்களால்
வீறுசெல்வமுண்டாகும் வேந்தர்சமானமாயிருப்பன்
சாருங்குதிரையானைவரை சலியாதிதனையுரைசெய்யே.

இ-ள். குருமகாதிசை ௵ 16-க்கும் பிரக்கியாதி கீர்த்தி முதலியவை உண்டாதலும், அரசர்களால் பிரக்கியாதி உண்டாதலும், அளவில்லாத செல்வம் உண்டாதல், வேந்தர்களுக்குச் சமானமாயிருத்தல், யானை குதிரை முதலியன வந்தடைதல், அகத்தியமாமுனியே! இவ்வாறு நற்பலனை உரைசெய்வீராக எ-று. 95

சனிதிசை ௵ 19-க்கு

கண்டுமொழிவாய்சனியாண்டு கணக்காய்பத்துமொன்பதிலே
பண்டுபொருளும்நாசமுண்டு பழையமனையும்வேறாகும்
மிண்டர்கூட்டால்சிறைவாசம் மேலோர்பகையுமுண்டாகும்
அண்டியிருந்தமனையும்போம் அவதிபலவுமுண்டென்னே.

இ-ள். சனி ௵ 19-க்கும் பழைய பொருளெல்லாம் நாசமாதல், தன் பழைய மனை விரயமாதல், கொடியோர்கள் சேர்க்கையால் சிறைவாசம் செல்லுதல், மேன்மைபெற்ற உத்தமர்கள் பகையுண்டாதல், தானணுகியிருந்த மனையும் விரயமாதல், பலவிதமான துன்பம் பல உண்டாதல் முதலிய பலன் உண்டாகும் எ-று. 96

புதன் திசை வரு 17-க்கு

மெச்சுபுதனின் திசையாண்டு மேவும்பதினேழ்தனிலுங்கேள்
இச்சைகன்னிசேர்ந்திடுவாள் இனிதாம்வணிபந்தன்னாலும்
மெச்சுபணியுமிகவுண்டு மேலோர்நட்பால்வாழ்ந்திடுவன்
இச்சைப்பொருளைக்கைக்கொள்வன் இனிதாய்தேசயாத்திரையே.

இ-ள். போற்றத்தகுந்த புதமகாதிசை வரு 17-க்கும் தான் இச்சித்த கன்னி வந்து சேர்தல், செய்யும் வியாபாரத்தால் சந்தோஷம் மெச்சத்தகுந்த பணி முதலியவைகள் வந்து சேர்தல், பெரியோர் நட்பு, தான் இச்சித்த பொருளை வாங்குதல், சந்தோஷத்தால் தேச யாத்திரை முதலியவைகளைச் செய்தல் முதலிய பலனுண்டு எ-று. 97

கேதுதிசை வரு 7-க்கு

குலவுங்கேதின் திசையாண்டு கூறும்ஏழில்பலன்கேளு
இலகுஞ்செல்வமில்லாது இல்லந்தனிலேகலகமுண்டு
உலகந்தனிலேவசைசெய்வார் உணவுங்குறைவுஊர்தனிலே
பலவாய்கேடுசண்டையுண்டு பணியும்போகுமெனஓதே.

இ-ள். கேதுமகாதிசை வரு 7-க்கும் தான் எவ்விதத்தில் கஷ்டப்படினும் அவனிடம் தனம் சேராது. வீட்டில் கலகம் முதலியவை உண்டாதல், உலகத்தோர் வசைமொழி கூறுதல், (உணவு குறைவு) அன்னத்திற்கும் கஷ்டம், தனது கிராமத்தில் பற்பல சண்டை, பணிபொருள் முதலியவை யாவும் கைவிட்டுப்போதல் முதலிய பலன் உண்டாகும் எ-று. 98

சுக்கிரதிசை வரு 20-க்கு

புரக்கும்வெள்ளிதிசைதானும் பொங்கும்வருடமிருபதிலும்
இருக்கவளருந்தனங்களெலாம் இல்லந்தனிலேகலியாணம்
தருக்கியிருப்பான்வெகுபூமி தானேசேரும்வாகனங்கள்
பெருக்கும்வித்தைபிரபலமாம் பேசும்ஞானமுண்டாமே.

இ-ள். சுக்கிரன் மகாதிசை வரு 20-க்கும் தன் கையிலுள்ள பொருளைக்கொண்டே அனேக தனங்களைச் சேர்த்தல், தனது இல்லத்தில் கலியாணம் உண்டாதல், சந்தோஷத்துடன் சுகித்திருத்தல், வாகனங்கள் அமோகமாய்ச் சேர்தல், வித்தைப் பிரபலமுண்டாதல், ஞானம் உண்டாதல் முதலிய பலன் உண்டாகுமென்று அகத்தியமா முனியே! கூறுவாயாக எ-று. 99

கோசாரதிசைப்பலன் முற்றிற்று.

---

12 பாவக விவரங்கள்

1 லக்கினம்-உதயம்-கீர்த்தி-மூர்த்தி-தேகம்-நிறம்.

2 நேத்திரம்-வாக்கு-தனம்-முகம்-குடும்பம்.

3 சகோதரம்-வெற்றி-கேள்வி-காது-தைரியம்-அடிமை.

4 தாய்-வாகனம்-பூமி-பந்து-சுகம்-கல்வி-வீடு-வியாபாரம்.

5 புதல்வர் - உளம் - புத்தி - முத்தி - விஸ்தாரம் - மானம்-பிதா-மாதுலன்-பிரபத்துவம்.

6 சத்துரு-ரோகம்-விரணம்-மரணம்-சோரம்-சிறை-பிரதாபம்.

7 களத்திரம்-காமம்-மாரகம்.

8 ஆயுள்-தீர்க்கவியாதி-மரணம்-அபமிருத்தியு.

9 பிதா-தருமம்-பர்க்கியம்-குரு.

10 கருமம்-ஜீவனம்-ஆசாரம்.

11 லாபம்-மூத்தோன்.

12 விரயம்-சயனம் - மோக்ஷம் - அந்தியகாலநோய் முதலியவை களைக் குறித்ததாம்.

மாரகதிசையறிய

விருத்தம்

மாரகத்தின் றிசையறியவருநான்காந்திசைசனியேவந்துற்றாலும்
பார்தனக்குச்சுதன்செவ்வாயைந்தாகுந்திசைதானேபரிந்துற்றாலும்
பேருதித்தவாறாகுந்திசைபரசானுலும்பின்புராகு
சீருதித்தவேழாகுந்திசையானுலும்மரணந்திண்ணந்தானே.

இ-ள். மாரகதிசை என்று பொதுவாய் சொல்லும்விதம் எப்படியெனில் ஜெனனகாலம் முதல் முறையே 1-2-3-4-ஆம் திசைகள் என்று வரும் திசைகளில் 4-வது திசை சனிதிசையாக இருந்தால் அது மாரகதிசை யாகும். பூமிசுதனென்னும் குஜதிசையானது 5-வது திசையாகவரினும் அவை மாரகதிசையாகும். ஆறுவதாக குருதிசைவரினும் அதுவும் மாரகதிசையாகும். இராகு மகாதிசை 7-வது திசையாகவரினும் அவையே மாரகதிசை யென்றும் அத்திசையில் கட்டாயம் மரணமுண்டாகுமென்றும் சோதிடவல்லோர் கூறுவர் எ-று. 100

கிரகதிசையறிய

கார்த்திகைமுதலோன்பானுள்களும்பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிராகுபொன்சுன்கவின்புந்திகேதுவெள்ளி
சீர்த்தவர்க்கிம்முறையாகச்செப்பியதிசைகளாகும்
ஏர்த்தமற்றைநாண்மீறுமிவ்வாறேகொள்ளற்பால.

இ-ள். கார்த்திகைமுதல் ஒன்பதாம் நக்ஷத்திரமும் அதற்கு ஒன்பதாம் நக்ஷத்திரமும் சூரியதிசை என்றும் இவ்வாறே சந்திரன்-குஜன்-இராகு-குரு-சனி-புதன்-கேது-சுக்கிரன் என மேற்சொன்ன

படி ஒன்பதுக்கொன்பதாக மும்மூன்று நக்ஷத்திரங்களாகப் பங்கிட்டு வரிசையாகச் சொல்லிய கிரக வரிசைப்படி திசையறிந்துக்கொள்ளும் விபரம்.

ஜென்மநக்ஷத்திர திசை

கார்த்திகை	உத்திரம்	உத்திராடம்	சூரியதசை
உரோகணி	அஸ்தம்	திருவோணம்	சந்திரதசை
மிருகசிரம்	சித்திரை	அவிட்டம்	குஜதசை
திருவாதிரை	சுவாதி	சதயம்	இராகுதசை
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குருதசை
பூசம்	அனுடம்	உத்திரட்டாதி	சனிதசை
ஆயில்யம்	கேட்டை	ரேவதி	புததசை
அசுவனி	மகம்	மூலம்	கேதுதசை
பரணி	பூரம்	பூராடம்	சுக்கிரதசை

என வரிசையாய்க் கண்டுகொள்க. இத்திசைகளின் வருடத்தொகை பின்வரும் செய்யுளாலும் காண்க எ-று. 101

கிரகதிசா வருடமறிய

சூரியன்றிசைக்காண்டாறுதிங்கட்குப்பத்துசெவ்வாய்க்
காருமோரேழிராகுக்கறைபதினெட்டுப்பொன்னுக்
கேருறீரெட்டுமந்தற்கியம்பத்திதொன்பதாகும்
சீருறில்புந்திக்கோர்பானேழ்ச்சிகிகேழ்வெள்ளிக்கைந்நான்கே.

இ-ள். சூரியமகாதிசைக்கு 6-வருடமும், சந்திரமகாதிசைக்கு வருடம்-10, குஜமகாதிசைக்கு வருடம்-7, இராகுமகாதிசைக்கு வருடம்-18, குருமகாதிசைக்கு வருடம்-16, சனிமகாதிசைக்கு வருடம்-19, புதன்மகாதிசைக்கு வருடம்-17, கேதுமகாதிசைக்கு வருடம்-7, சுக்கிரமகாதிசைக்கு வருடம்-20 எனவும் சாஸ்திரங்களை யறிந்த மேதாவிகள் கூறுவர் எ-று. 102

புத்திபிரிக்கும் வகை

கோள்களின்றிசையிற்புத்திகுறித்திடில்றிசையோனுண்டை
நீள்புத்திநாதனுண்டானேர்படப்பெருக்கிக்கண்ட
வாளமர்தொகையென்றிற்குமருவுநாண்மூன்றதாகும்
வாள்கடல்கெண்டைவண்டுவனசமாம்விழியினாளே.

இ-ள். மேற்சொல்லியபடி திசையறிந்தவுடன் அவரவர்களுக்கு உண்டாகும் புத்தி வருடம் மாதம் நாள் இவைகளை அறிவது எப்படி யெனில் ஒவ்வோர் திசைக்குரிய மொத்த ஆண்டுகளை நாம் கோரிய புத்திநாதன் திசையான மொத்த வருடத்தால் பெருக்கிக் கண்டதுகை ஒன்றுக்கு 3-நாட்களாகக் கணக்கிட்டு மொத்த வருடம் மாதம் தினத்தைக் கண்டுகொள்ளவும் எ-று.

உதாரணம்:—சுக்கிர திசையில் புதன் புக்தியைக் காணுவதெனில்
சுக்கிர திசை மொத்த வருடமான 20 ஐ
புதன் திசை மொத்த வருடம் 17 ஆல் பெருக்க
340 ஆகும்
அதனை மூன்றால் பெருக்க × 3
1020 நாள் என்றறிக.

அவையாவன வருஷம்-2, மாதம்-10 ஆகும். இவ்வாறே ஒவ்வோர் திசைக்கும் கண்டுகொள்க. 103

சித்திரம் பிரிக்கும் வகை

அவரவரபகாரத்தினுண்டொன்றின்மூன்றுநாளும்
நவிலுமாதங்கால்நாளும்நாளொன்றிற்பாதிக்கன்னல்
இவைமூன்றுதொகையுங்கோட்கடிசையாண்டாண்டாற்பெருக்கிவந்த
தவலறுத்தொகையைச்சேர்க்கத்தான்வருஞ்சித்திரந்தான்.

இ-ள். ஒவ்வொருவருக்கும் வரும் புத்தியின் வருடமறிந்து வருடம் ஒன்றுக்கு தினம் மூன்றாகவும் தினம் ஒன்றுக்கு நாழிகை 15-ஆகவும், நாழிகை ஒன்றுக்கு $\frac{1}{2}$-வினாடியாக அவனுக்குரிய மொத்த வருடம் மாதம் நாள் இவைகளுக்கு கணக்கிட்டு நாம் கோரிய திசை மொத்த வருடத்தால் பெருக்கிக் கண்ட தொகைகளை முன் கூறியபடி வருடம் மாதம் நாளெனப் பிரித்து கண்டுகொள்வதே சித்திரமெனப் படும் எ-று. 104

உள்சித்திரம் பிரிக்கும்வகை

வெண்பா

புத்திதொகைநாள்கட்குப்போந்தக்கடிகரையாம்
நத்தியநாழிக்கரைவினாடியாம்—எத்திசைக்கும்
இந்தப்படிக்கேயிவர்வருடங்கொண்டெண்ணச்
சிந்தனைக்குட்சித்திரத்தைச்செப்பு.

இ-ள். உள்சித்திரம் பிரிக்கும்வகை எப்படியென்றால் மேற் சொன்ன சித்திரத்தைப் பிரித்து அவரவர்களுக்கு ஏற்படும் நாள் நாழிகைகளுக்கு நாள் ஒன்றுக்கு 60-வினாடியாகவும் அதாவது 1-கடிகையாகவும் கடிகை யொன்றுக்கு அரை நாழிகையாகக்கொண்டு அவரவர்களுக்குரிய மொத்த வருடம் மாதம் நாள்களுக்கும் இவ்வாறே கணக்கிட்டுச் சொல்வதே உள்சித்திரமென்பதாம் எ-று. 105

போதகன் வேதகன் பாசகன் காரகன் அறிய

கூறுபலனைக்கொடும்வன்பான்போதகனும்
வேறுபண்ணித்தட்டுவிப்பான்வேதகனும்—தேறுபலன்

கூட்டுவிப்பர்ன்பாசகனுங்கோலமகாதிசைக்கே
ஈட்டுபொருள்காரகனீவான்.

இ-ள். ஒவ்வொருவருக்கும் திசை புக்திவருங்காலங்களில் போதகனென்றும் வேதகனென்றும் பாசகனென்றும் காரகனென்றும் நால்வருளர். அவர்களில் ஓர் திசையில் போதகனென்பவன் அவன் பலன் யாவையும் கொடு என்பவனும், பலனைத் தரவேண்டாமென்று கெடுப்பவன் வேதகன் என்பவனும், அவன் கொடுக்கும் பலனுடன் இன்னும் அதிகமாகக் கொடு என்பவன் பாசகனும், காரகனென்பவன் அவரவர்கள் செய்யும் பலனுக்குத்தக்க பொருள்களைக் கொடுத்துக் காப்போனு மெனவறிந்து திசைபுக்தி பலனறிக. இராகு கேதுகளுக்கு மேற்சொல்லிய நால்வர்களில்லையாம் எ-று. 106

சூரியதிசைக்கு

பானுதிசைக்குமந்தன்பாசகனுஞ்சுக்கிரனே
மானேகேள்வேதகனுமன்னவனு—மீதனையாய்
காரகனுஞ்செவ்வாயுங்காசினியோர்தாமறிய
ஏரணியும்போதகனுமே. 107

சந்திரதிசைக்கு

இந்துதிசைக்குவெள்ளியேற்றதோர்பாசகனும்
விந்தைமலர்நண்பனேவேதகனும்—மந்தனே
கங்காநதிபுடைசூழ்காசினியிற்காரகனும்
அங்காரகன்போதகன். 108

செவ்வாய்திசைக்கு

மங்களனார்தந்திசைக்குமார்த்தாண்டன்பாசகனும்
திங்களரும்போதகனுஞ்சேயிழையீர்—பொங்குபுகழ்
மேயபுதன்வேதனுமித்தரணியோரறிய
ஆயசனிகாரகனேயாம். 109

புததிசைக்கு

புந்திதிசைக்குப்புரவலனேபோதகனும்
சந்திரனேபாசகனுந்தானவன்—இந்துநுதல்
மின்னனையீர்செவ்வாயும்வேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ்காரகனுமாம். 110

குருதிசைக்கு

வேந்தன்மகாதிசைக்குவெய்யவனேவேதகனும்
போந்துவருஞ்செவ்வாயேபோதகனும்—காந்திசெறி
சந்திரனேகாரகனுந்தையலேதாரணியில்
மந்தனேபாசகனுமே. 111

சுக்கிர திசைக்கு

வெள்ளிமகா திசைக்குவேந்தனேபோதகனும்
தெள்ளுபுதன்பாசகனுஞ்செங்கதிரும்—மெள்ளவரும்
காரகனே தானுகுங்காரியேவேதகனும்
வாரணியுங்கொங்கைமயிலே. 112

சனி திசைக்கு

சனியின்றிசைக்குச்சசிபோதகனும்
இனியசெவ்வாய்வேதகனென்றேத்தும்—கனிமொழியாய்
வெள்ளியேபாசகனும்வேந்தனேகாரகனும்
தெள்ளுதமிழோருரைத்தசீர். 113

சூரியனை-சந்திரனை-குஜனை-புதனை-குரு-சுக்கிரனை-சனி இததிசைக்குரிய போதகன் வேதகன் பாசகன் காரகன் விபரம்							
போதகன வேதகன பாசகன் காரகன்	சூரிய திசை	சந்திர திசை	குஜ திசை	புத திசை	குரு திசை	சுக்கிர திசை	சனி திசை
போதகன்	குஜன்	குஜன்	சந்திர	குரு	குஜன்	குரு	சந்திர
வேதகன்	சுக்ரன்	சூரிய	புதன்	குஜன்	சூரிய	சனி	குஜன்
பாசகன்	சனி	சுக்ரன்	சூரிய	சந்திர	சனி	புதன்	சுக்ரன்
காரகன்	குரு	சனி	சனி	சுக்ரன்	சந்திர	சூரிய	குரு

பொது

ஒருவர்மகா திசைக்குளூற்றபலனுண்ண
வருவர்நவக்கிரகர்மாதே—அவரவரில்
போதகனும்பாசகனும் போற்றுபொருள்காரகனும்
வேதகனுமாகிவருவார்.

இ-ள். நவக்கிரகங்களின் ஒவ்வோர் திசாநாதன் பலனையும் சாப்பிட போதகனென்றும் வேதகனென்றும் பாசகனென்றும் காரகனென்றும் பெயரோடு வருவார்கள். இதை அறிந்தே உலகோர்க்குப் பலன் சொல்ல வேண்டும் எ-று. 114

இந்தப்படிநால்வரெய்தியொருவர்திசைக்குள்
வந்துபலனுண்ணும்வகையறிந்தே—சிந்தித்
துரைத்தபலனெத்திருக்கு மொண்டொடியேகேளாய்
தரைத்தமிழோர்தாமறியத்தாம்.

இ-ள். அழகுபொருந்திய பெண்ணே! மேற்சொன்ன நால்வரும் ஒவ்வொருவர் திசைப்பலனையும் உண்ணும் விதமறிந்து சொல்லும் பலன்களானது தவராதாகையால் இவ்விதம் பலன் சொல்வதே நன்றெனவும் சோதிடவல்லோர் கூறுவர் எ-று. 115

திசைபுத்தி பலனறியும் விபரம்

திசைகளிலுள்ள புக்தி மாதங்களை பின்பக்கத்தில் காட்டியபடி ஒவ்வொரு திசைக்குரிய புக்தியின் வருடம் மாதம் தினமறிந்து இப்பூமியிற் பிறந்த ஒவ்வொருவருக்கும் பலன் சொல்லுதல் வேண்டும். இப்பலன் சொல்லுவதோடு கிரகங்களிருக்கும் நோக்கா நோக்கமறிந்தும் பலன் சொல்லவேண்டு மாகையால் அதன் விபரங்களைக் கீழ்க்கண்டவாறு அறிந்து சொல்லுதல் வேண்டும்.

சூரிய திசாபுக்தி புலன்

விருத்தம்

அருக்கனிலருக்கன்புத்தி யறியநானூற்றெட்டுக்கும்
கருக்கொடுமுற்றூர்கேடு கலகமந்தணனூற்பீடை
வருத்தமாந்தலைநோயுண்டாம் வலக்காதில்வலிப்புமின்றி
பெருக்கநீரிழிவுமேட மாதத்திற்பீடைதானே.

இ-ள். அருக்கனென்னும் உஷ்ண பிரகாசத்தையுடைய வெய்யவன் திசை வருஷம் 6-ல் அவன் சுயபுத்தியாகிய நாள் 108-க்கு பலன் விபரம் கூறுவாம். தன்னை ஈன்ற தாய்தந்தையருக்குப் பலவித துன்பமும் கோள் உண்டாதலும் மேலும் விப்ர ஜனத்தால் பலவித கஷ்டங்களுண்டாகும். மனவியாகூலமும் தலை வலியும் உண்டு. வலது செவியில் வலிகாட்டும். நீரிழிவு ரோகம் காட்டும். இப்புக்தியில் மேஷமாத பிரவேசகாலம் பலவித துன்பம் உண்டாகும் எ-று.

வி-ரை. இவை மேற்சொன்ன புக்திநாதனுக்குரிய பொதுப்பலனாகும். மேற்படி சூரியன் ஸ்வக்ஷேத்திரம் கேந்திரம் திரிகோணம் இவைகளிலிருந்தால் அரசசேவை பூமிபலிதம் முதலிய வாகனபலிதம் உண்டு.

3-11-இவ்விடங்களில் இருந்தால் தலைநோய் காய்ச்சல் பிரயாணம் ராஜகலகம். சூரியனுடன் சுபகிரகங்கள் கூடியிருக்க அற்பசுகம் உண்டு. மேற்சொன்னபடி சூரியன் 3-11-இவ்விடங்களில் சூரியன் நீச்சம்பெற்றால் பீடை மனஸ்தாபம் இவைகள் உண்டாகும். சூரியன் ஜென்ன லக்கினத்தோனைக்கூட புக்தி முதலில் சஞ்சலம் மனவியாதி மத்தியில் சுகமும் கடைசியில் இலட்சுமி கடாக்ஷமும் வாகனலாபம் க்ஷேத்திரலாபம் ஜெபம் முதலியவைகளைச் செய்வானென்றும் கூறுக. 116

இரவியிலிந்துபுத்தி யினியநூற்றெண்பதுக்கும்
அரசரான்மகிழ்ச்சிலாப மதிகவாகனமுமுண்டாம்
பரவியமணமாம்பெண்ணூற் பசையிடக்கண்ணினோயாம்
திரமெனுங்கடகத்திங்க டவினைகாணுந்தானே.

இ-ள் சூரியமகாதிசையில் சந்திரனுண்ணும் புக்திநாள்-180. இதில் அவன் தரும்பலன் விபரம். ராஜாக்களால் சந்தோஷத்தை யடைதலும் ஆதாயமுண்டாதலும் விசேஷ வாகனசேர்க்கையும்உண்டு. தன் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு கலியாணமும் சிற்சில விரோதங்களும் இடது விழிக்கு உபத்திரவமும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடிமாதத்தில் கொடிய துன்பங்கள் உண்டாகும் என்றும் கூறுவர்.

வி-ரை. மேலும் சந்திரன் தன் சுயவீட்டிலாவது, திரிகோணத்திலாவது, இரண்டாம் ராசியிலாவது சப்தமாதியுடன்கூடி இருந்தால் பாக்கியமும், செல்வமும் உடையனுகுவான். நான்காம் வீட்டோனுடன் கூடி இருந்தால் நல்ல யோகமும் உண்டு, அமரபக்கச் சந்திரனுகிலும் அவன் தீயருடன்கூடி இருந்தாலும் காச்சல் தலைநோயும் புத்திர மித்திர களத்திராதியருக்குப் பீடையும் காட்டும். 8-ல் சந்திரனிருந்தால் மனவியாதி, ரோகம், சண்டை இவைகளுண்டாகும். 9-10-ல் சந்திரன் இருந்தால் வாகனலாபமும், தான்யலாபமும், செல்வம், புத்திரலாபம், கலியாணம், சந்தோஷம் இவைகளுண்டு. ()

ஆதித்தன் தன்னிற்செவ்வாய் புத்திநூற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டை வழக்குநாவரட்சிபீடை
சாதித்தவுற்ருர்கேடு தனம்பொருட்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாயும் பூமியின்பலனுகாதே.

இ-ள். சூரிய மகாதிசையில் குஜன் புக்திக்குரிய நாட்கள் 126-ஆகும். அக்காலங்களில் சண்டை உண்டாகும், நீங்கப்படாத ஜாட்டியத்தை கொடுக்கும், ஏதேனும் ஒருவழக்கை உண்டுபண்ணும், உஷ்ணசம்பந்தமான நாவரட்சியை உண்டுபண்ணும், மேலும் துற்பலனையும் தன்னை ஈன்ற பெற்ருேருக்கு பல தீங்குகளைக் கொடுக்கும், தன் ரொக்க ஸ்திதிக்கு விரயம்வரும், எவ்வளவு தனமிருந்தாலும் தன் கைவிட்டுப்போம், தன் பூமி மூலமான பலிதங்களையும் குறைவு படுத்தும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் லக்கினுதியுடன்கூடி இருக்கமேற் சொன்ன துற்பலனைத்தரான் அதிலும் குஜன் சப்தமாதியாக இருக்க அவன் சுப்பிரமண்ய ஜெபமும், ஆபரண பூஷணங்களும் உண்டாகும். 6-8-12-ல் நீச்சம் பெற்றிருப்பானுகில் ஜலதோஷமும், அபகீர்த்தியும், கட்டடவிரயமும் உண்டாகுமென்றும், அவன் நிற்கும் தான பலன்களையறிந்து சொல்லுக என்பதாம். 118

சூரியன் றனிலேராகு சுகத்தையேசொல்லவென்ருல்
ஏருற்றநாண்முந்நூற்ருே டிருபத்துநான்கதாகும்
பாரியகடிவிஷத்தாற் படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமைந்தன்றேசாந் திரத்தினின்மேவுவானே.

இ-ள். சூரியமகாதிசையில் இராகுவின் புக்தியான மாதம்-10, தினம் 24-க்கும் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து கொடிய விஷத்தாலும், ஆகாயத்திலிருந்துவிழும் இடி முதலியவைகளாலும் துன்பம் உண்டு. அல்லது தன் உறவினருக்கு கஷ்டம் உண்டு. தன் புத்திரவர்க்கங்களுக்கு கெண்டாதிதோஷம் சம்பவிக்கும். அந்த ஜாதகனானவன் அன்னியதேசங்களுக்குச் சென்று விடுவான் என்றும் சொல்லுவர் எ-று.

வி-ரை. இராகுபகவான் சுபகிரகத்துடன் சேர்ந்தாலும், சுப கிரகங்களால் பார்த்தாலும் அல்லது உச்சம்பெற்றிருந்தாலும், திரி கோண ஸ்தானங்களிலிருந்தாலும் ராஜாக்களால் கீர்த்தியும் வஸ்திர பூஷண லாபங்களும், 6-8-12-ல் நின்றால் பந்துஜனப் பீடையும் பயித்தியமும் உண்டாகும். 11-ல் ராகுநின்று சுபகிரகங்களால் பார்த்தால் புத்திரர்களுக்கு விவாக முதலிய பலன்கள் சேருமென்றும் கூறுவர். 119

எதிருறுங்கதிரிற்பொன்னி இருநூற்றெண்பத்தெட்டும்
கதிபெறுமுற்றூர்நட்புங் கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராசசேவை மக்களுஞ்சுற்றமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லு மதிசயமிகுதியாமே.

இ-ள். பகலில் வெளிச்சமும் உஷ்ணம் முதலியவைகளைத் தரா னின்ற சூரியமகாதிசையில் குருபுக்தியின் புசிப்பு காலமான இருநூற் றெண்பது நாட்களிலும், அவன் தரும் பலனென்னவெனில் புகழ்ச்சி யும், செல்வமுமுடைய ஜனசிநேகமும், திரண்டவித்தையும், தனமும் உண்டாகும். நல்லறிவு விருத்தியும், அரசர்களைக் காணுதலும் புத்திரப்பேறும், தன் பந்துக்களும் சேருவர். தனக்கு எதிர்த்த பகையாளிகளை ஜெயிக்குந் திறமும், காணாதனதைக் காணுதலும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு 5-11-ல் பலம்பெற்ற கிரகங்களுடன் கூடி இருந்தால் விவாகமும், ராஜபேட்டியும், நவரத்தின லாபமும் உண்டாகும். 9-10-க்குடைய கிரகங்களுடன்கூடி இருக்க ராஜ்ய லாபமும், மகா சந்தோஷமும், நூதனகிரக கட்டடமும் உண் டாகும்.

குரு நீச்சம் அஸ்தமபமாக இருப்பானாகில் பல கஷ்டமும், ராஜாக் களால் தொந்தரவும், பயமும் உண்டு. 1-4-7-10-ல் இருந்தால் மேன் மையான சுகமும், தன் கஷ்டம்யாவும் நீங்கும் என்பதாம். 6-8-12-ல் இருந்தால் சோராக்கினிபயமும், அன்னியதேச சஞ்சாரமும், காது நோயும் உண்டென்று கூறுக. 120

நன்கதிர்சனிமூந்நூற்று நாற்பதோடிரண்டினுக்கு
மன்பயமக்கட்பீடை மனத்துயர்பகைவருண்டாம்

தன்பொருட்சேதமுந்தி யடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமண்ணி லெவர்களும்பகைவராமே.

இ-ள். உலகில் மேன்மையாய் விளங்கும் சூரியமகாதிசையில் சனி புக்திக்கேற்படும் நாட்களான 342-ல் அவன் தரும்பலன் என்ன வெனில், ராஜாக்களால் பயங்கரமும், தன் புத்திரவர்க்கங்களுக்கு துன்பமும், மனவியாகூலமும் உண்டாகும். தனக்குச் சத்துருக்கள் பலர் உண்டாதலும், கைப்பொருள் விரயங்களும், சரீர ஜாட்டிய மானது நீங்காதிருத்தலும், தனக்கு அந்த புக்திவரையில் நற்பல னென்பதே கிடையாதென்றும், இப்பூமியிலுள்ள அனைவரும் தனக் குச் சத்துருக்களாகவே இருப்பார் என்றும் கூறுவாய் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனான சனி நான்காம் வீட்டோ னைக்கூடி இருக்கில் சில திரவியம் வஸ்திர பூஷணலாபம் நூதன கிரகம் சுபசோபனம் தானியலாபம் ராஜபிரீதி இவைகளும் அவனைப் பாவகிரகங்களால் பார்க்க,ராஜகோபத்தால் பயம் உயிர்ச்சேதம் விலங்கு கிலேசம் சஷ்டாடகம் பெற்று வயிற்றுநோய் முதலியவைகளும்உண்டு. பாவருடன் கூடி திரிகோணங்களிலிருந்தால் மார்பில் காயம் புத்திர நாசம் தனது புத்திரரே தனக்குச் சத்துருவாகவும் இருப்பார். சனி 11-ல் இருந்தால் களத்திர புத்திர லாபமும் அரிய பூஷணங்களும் செல்வமுடையோனாகவும் இருப்பானென்றும் கூறுக. 121

நற்கதிர்தன்னிற்புந்தி நாளதுமுந்நூற்றுறும்
வற்கமும்பகையதாகும் மனத்திகில்சரீரபீடை
கற்கருவினைசமுந்திக் கடுப்புநோய்வழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனாசந் துக்கமுமிகுதியாமே.

இ-ள். நன்மையைத் தரும் சூரியன் திசையில் புதன் புக்தியின் நாட்களான 342-ல் அவன்தரும் பலன் என்னவெனில் தன் உறவின ரால் விரோதமும் மனவியாகூலமும் சரீர ஜாட்டியமும் பற்பல பொருள் சேதமும் உந்தி மூலமான நோயும், கைப்பொருள் நாசமும், புகழ்ச்சியைப் படைத்த தன் பிதாவுக்கு கெண்டமும், ஏராளமான விசனத்தையும் அனுபவிப்பானென்றுங் கூறுக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதனுடன் 2-9-11-க்குடையோன் கூடி யிருக்க அவன் திரண்ட செல்வமும் சொல்வதற்கரிய பூஷணங்களும் தான தருமமும் உண்டாகும்.

6-8-12-ல் இருந்தால் முதலில் சவுக்கிய பலனுண்டாயினும் மத்தியில் வியாதியும், அரச கோபமும், அன்னிய கிராமப் போக்கு வருத்தும் உண்டாகும். புதன் 2-7-ஆம் வீட்டோனாக இருக்கில் அவன் புக்தியில் கொடிய கண்டமுண்டு. அதுகாலம் அப்போது விஷ்ணுஜெபம் செய்ய பரிகாரமாகும். 122

ஆதித்தன்றனிலேகேது வனுகிநூற்றிருபத்தாறும்
சோதித்தநினைவுகுன்றுந் தூரதேசத்திற்போவார்
வாதித்தவிஷமுமுண்டாம் வழக்குண்டுமனைவேருகும்
பேதிக்குமுற்றார்கேடு பிணக்குண்டுபலன்செயயாதே.

இ-ள். சூரியன் திசையில் கேதுண்ணும் நாட்களாகிய 126-லும் அவன் கொடுக்கும் பலனென்னவெனில் தான் மிகுந்த ஆலோசனை செய்து கண்ட விஷயத்தை மறந்து போதலும் அன்னிய தேசங்களில் போய் சஞ்சரித்தலும், துன்பத்தைத் தரும் கொடிய விடங்களால் துன்பமும் ஏதேனும் ஒரு காரியமாக சண்டை முதலியவைகளும் தன் சுய க்ஷேத்திரத்தை விட்டு அன்னிய கிரகம் செல்லுதலும் தன் சுயபந்துக்கு கஷ்டங்களும் சஷ்டாடகங்களும் துற்பலனும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது அஷ்டமஸ்தானம் பெற்றிருக்கில் கொடிய வியாதியும் வீட்டைவிட்டுப் போதலும் பொருள் நாசமும் உண்டு.

3-10-11 இவ்விடங்களில் இருந்தால் தனலாபமும் கலியாணமும் பிதுர்பாக்கியமும் உண்டாகும். 11-ஆம் வீட்டோனுடன் கூடி இருக்க சவுக்கியமும், 3-ஆம் ராசிநாதனைக் கூடியிருக்க சகோதரநாசமும், தான் தொடுத்த காரியம் அபஜெயமும் உண்டாகும். 123

அருக்கனில்வெள்ளிமுந்நூற் றறுபதுநாளிலாபம்
திருக்கலியாணஞ்செல்வஞ் செம்பொன்னுமிகவுமுண்டு
வருத்தமாஞ்சரீரநோயு மலர்க்கண்ணில்வியாதிதோன்றும்
உருக்கியபிணியுந்தீரு முண்மையாய்க்கருமநன்றே.

இ-ள். சூரியமகாதிசையில் சுக்கிரன் புக்தியாகிய நாட்கள் 360-லும் அவன் தரும்பலன் என்னவெனில் விவாக முதலியவைகளும் தனம் முதலிய பொன்னுனய சேர்க்கையும் விசனத்தைத் தரத்தக்க தேக ஜாட்டியமும், மலர்போன்ற விழிகளுக்கு உபத்திரவமும் தனக்குக் கஷ்டத்தைத் தரும் பிணி நிவர்த்தியாதலும் நற்செயல்களும் உண்டாகுமென்று உண்மையாய்ச் சொல்லுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனான சுக்கிரன் பாவகிரகங்களுடன் சேர்ந்து நீச்சம் அல்லது 6-8-12-ஆம் இடங்களிலிருந்தாலும், அஸ்தமய கிரகங்களுடன் கூடினாலும், களத்திர பீடையும் பூமிநாசமும் வாகன நஷ்டமும் செய்தொழில் பின்னமும் கொடுக்கும். கேந்திரம் அல்லது திரிகோண ஸ்தானங்களிலிருந்தால் லாபமும், ராஜசன்மானமும், களத்திர சவுக்கியமும் உண்டாகுமென்றும் சொல்லுக. 124

சந்திரதிசையில் கிரகபுக்திபலன்

சந்திரன் தனிலேசோமன் றனக்குநாள்வருமுந்நூறும்
விந்தையாங்கன்னிசேர்வள் வீரமன்னேக்கமுண்டாம்
முந்தியகாரியங்க ளினைத்ததுமுடியுமேலும்
இந்திரன் றனைப்போன்மைந்த னினிதுட னுண்டாங்கண்டீர்.

இ-ள். சந்திரமகாதிசை வருஷம் 10-ல் தன் சுயபுக்திக்குரிய நாளான 300-ல் அவன் தரும் பலனென்னவெனில் அழகுபொருந்திய ஸ்திரீகள் வந்து சேர்தலும் வீரபராக்கிரமமான தைரிய நெஞ்சும், தான் ஆலோசித்த விஷயங்கள் கைகூடுதலும் உண்டாவதோடு அந்த ஜாதகனுக்கு இந்திரனுக்கொப்பான அழகிய மக்களும் ஜெனிப்பாரென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சந்திரபுக்தி காலங்களில் ஆலோசிக்க வேண்டியதென்னவெனில் ஜெனன காலங்களில் வளர்பிறைச் சந்திரனுக யிருந்தால் பூரணமாக மேற்சொல்லிய பலனையே தருவான். சந்திரன் 9-10-ஆம் வீட்டோனைச் சேர்ந்திருப்பானுகில் அவனுக்கு மதம்பொருந்திய யானை முதலியவைகள் சித்திக்கும். 7-ஆம் வீட்டோனுடனும் செவ்வாயுடனும் கூடியிருக்க அவன் தன் சத்துருக்களுடன் சண்டையிடுதலும் தன் படைத்துணைவரால் விரோதமும் வியாதியும் உண்டாகுமென்றும் கூறுவர். 125

நண்புறுமதியிற்செவ்வாய் நாளிருநூற்றுப்பத்தும்
பண்பிலாவழக்குச்சண்டை பயித்தியங்களவுநோயாம்
தண்பொருள்சேதங்குட்டங் தழற்பயமேடமாதம்
திண்பெருந்தளையேபூணு மேந்திழைக்கலகஞ்சேரும்.

இ-ள். மேற்சொன்ன சந்திரதிசையில் குஜன் புக்திக்குரிய நாளானது 210-ஆகும். அக்காலங்களில் நேசத்தைத்தராத சச்சரவும் சண்டையும் உண்டாகும். மனவிகாதம் உண்டாகும். தன் வீட்டில் சோரம்போகும். வியாதியைத்தரும். தன் ரொக்கஸ்திதி விரயமாகும். குஷ்டமென்னும் வியாதியைக்காட்டும், சித்திரைமாதம் வரும்போது நெருப்பால் பயங்கரம் உண்டு. அபாரமான குற்றத்தால் கட்டுண்டுமிருப்பான். ஸ்திரீ ஜனங்களால் சில கோட்கள் உண்டுபண்ணும்.

வி-ரை. குஜன் 6-8-12-முதலிய க்ஷேத்திரங்களிலிருக்கில் அவனுடன் சுபகிரகங்கள் கூடினுலும், நோக்கினுலும் மற்றும் 9-5-க்குடையோர் சேர்ந்தால் சிவிகை பல்லக்கு முதலியவைகள் சேர்தலும், விருத்தியும் உண்டென்றும் கூறுவர். 126

அம்புலிதனிலேராகு வைந்நூற்றுநாற்பதுக்குள்
செம்பொனுஞ்சேதமாகுஞ் செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம்ராச நிஷ்டூரமிகவுமாகும்
வம்பலார்குழலினுளே மதலையர்பீடையாமே.

இ-ள். அம்புலியாகிய சந்திரமகாதிசையில் இராகுவின் புக்தி நாட்கள் 540-ஆகும். அக்காலங்களில் செழுமையான பொன் பூஷண மும், நாணயமும், கைவிட்டுப்போகும். தனக்கிருக்கும் சத்துருக் களுக்கு பயந்திருக்கவும் நேரும். மேலும் சரீரவியாதியை உண்டு பண்ணும், தான் பெரிய மலைபோல் சிநேகித்திருந்தவரால் கஷ்டம் உண்டாகும். அல்லது தன் ஜேஷ்டனால் கஷ்டம் என்றும் கூறலாம். ராஜாக்களால் குற்றம் சாட்டப்படும் பழிக்கு ஆளாகுவோனும் ஆவா னென்று இனிய வண்டுகளின் 'குழலைப்பார்க்கினும் இனிய குழலை யுடையவளே! அவன் புத்திரவர்க்கங்களுக்கும் தோஷம் உண் டென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சந்திரனில் இராகுபுக்தி காலங்களில் 1-4-7-10-11-இவ் விடங்களில் இராகு இருப்பானாகில் மேற்சொன்ன கொடிய பலன்கள் மூன்றுமாதம் வரையிலும் என்று கூறுவர். அதற்குமேல் தனதான் னிய லாபமும், ராஜாக்களால் சந்தோஷமும் ஜெயமும் உண்டாகும் என்றும் இன்னும் அனேக நற்பலனும் உண்டாகுமென்றும் கூறுவர்.

நன்றிசேர்மதியிற்பொன்ன னூற்றெண்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானை மேன்பொருடாணியங்கள்
குன்றெனுமுலையாய்ச்சேருங் கொற்றவனாலேயின்பம்
கன்றுநன்காலியுண்டாங் காளையைப்பெறுவர்தாமே.

இ-ள். நற்பலனைத்தரும் திசாநாதனான சந்திரனில் குரு உண் ணும் நாட்களான 488-ல் அவன் தரும் பலனென்னவென்னில்: வெற் றியைத்தரும் குதிரை யானை வந்துசேர்தலும், அளவிறந்த செல்வ மும், தன வகைகளும், பருவத்தைப்போன்ற ஸ்தனத்தை யுடைய வளே! தானாகவே வந்து சேருமென்று சொல்வாய் ராஜரீகம் புரிபவ ரால் சந்தோஷமுண்டு நன்மையைத்தரும் நாற்கால் ஜீவனும் கன்று காலிகளும் சேரும். குருபுக்தியிலேயே ஆண்குழவியைப் பெறுவான்.

வி-ரை. குரு உச்சம் (அ) கேந்திரம் கோணம் இவைகளைப் பெற் றிருக்க இராஜாக்களால் பூஜிதனும் அனேகவிதமான லாபங்கள் உண் டாகுமென்றும் 6-8-12-இவ்விடங்களிலிருக்க களத்திர புத்திர நாச மும் அனேக துக்கமும் உண்டாகும். அவனுடன் 6-ஆம் வீட்டோன் கூடியிருக்க சண்டையும் கிலேசமும் உண்டாகுமென்றும் கூறுவர். ()

மதிதனிற்காரிபுத்தி மாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலி பற்றறுமனத்திற்றுக்கம்
விதியுறுமனையாளோடு மெய்ப்பொருட்சேதமாகும்
சதிபெறுகருத்தோனாலே கோள்வருஞ்சாற்றினேன்கேள்.

இ-ள். சந்திரதிசையில் சனியுண்ணும் புக்தி மாதம் பத்தொன் பதிலும் நாற்கால் ஜீவன்களான கன்றுகாலிகள் தன் வீட்டைவிட்டு அல்லது கைவிட்டு போதலும், மனவிரக்தியும் அல்லது வியாகூலமும்

உண்டாகும். தன் மனைவிக்கு கெண்டமும் தன் கையிலுள்ள பூஸ்திதி விரயமும் கறுத்த சரீரமுடையவனால் மோசமும் கலகமும் உண்டாகுமென்று சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொல்லிய சனி, கேந்திர கோணங்களி லிருக்கினும் 11-ஆம் வீட்டிலிருக்கினும் பலம்பெற்ற கிரகங்களுடன் சேர்ந்தாலும் உச்சம் ஆக்ஷி பெற்றிருந்தாலும் அவனுக்கு தனலாபமும் நூதன கிரக கட்டடமும் உண்டு. 129

சந்திரன்றன்னிற்புந்தி தான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போக மழகியமக்கட்பேறும்
சிந்தைசேரிராசயோகஞ் சேர்ந்திடுநினைத்ததெல்லாம்
முந்தியவித்தைலாபம் புரட்டாசிமுடிவிற்றானே.

இ-ள். சந்திரன் மகாதிசையில் புதன் உண்ணும் புக்தி மாதங்களான 17-லும் கொடுக்கவேண்டிய பலனென்னவெனில் திடீரென்று பிறரால் கோள் வருதலும், அழகுடைய புத்திரர் உண்டாதலும், தன் மனத்திற்குச் சந்தோஷத்தைத் தரத்தக்க இராஜயோகத்திற்குச் சமானமான யோகமும், தான் கோரிய காரியங்களும் பொருளும் கைகூடுதலும், மேன்மையான கல்வி விருத்தி யடைதலும், இவை யாவும் புரட்டாசி மாதத்தின் கடைசியில் உண்டு எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய புதன் 6-8-12 முதலிய க்ஷேத்திரங்களிலும் நீச்சம் அல்லது அஸ்தமயம் பெற்ற தீயகோட்களின் சேர்க்கையாலும் பீடிக்கப்பட்டால் திரேகபீடையும் களத்திர பீடையும் ஜுரபீடையும் அரசராலும் திருடராலும் துன்பமுண்டாகுமென்றும் கூறுவர். 130

நிலவினிற்கேதுவேழு மாதமுநெருப்பாற்பீடை
தொலைவிலாச்சரீரம்வீங்குஞ் சுற்றஞ்சாமிடக்கண்ணோபாம்
அலைச்சலும்பயமுமுண்டா மதிகதண்டனையுமுண்டாம்
பலசெனவெறுப்புவந்து நாசமாம்பகையுண்டாமே.

இ-ள். சந்திரமகாதிசையில் பாம்பாகிய கேதுண்ணும் புக்தி மாதங்களான 7-லும் அக்கினியால் துன்பமும், திரேக ஆதியந்தமும் வீக்கம் உண்டாகும். தன் உறவினர்கள் இறந்துபோதலும், இடது விழிக்கு பாதையும், எக்காரியத்திலும் பிரமிக்கும்படியான திகில் மனதில் உண்டாகும். சொல்லுதற்கரிய அபவாதம் கிடைக்கும். அநேக ஜனங்களால் தூஷிக்கப்படுபவனும் விரயமும் விரோதம் முதலியவைகளும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது 4-12-இவ்விடங்களில் சுபகோளுடன் கூடினாலும், நல்லோர் பார்த்தாலும், வாகனலாபமும், சுகமும், வாழ்வும் உண்டாகும் என்றும் சோதிடத்தோர் கூறுவர். 131

வட்டமாமதியில்வெள்ளி மாதங்களிருபதுக்கும்
திட்டமாய்வியாதியுண்டாம் சேர்ந்திடுவிதனங்காட்டும்
நட்டமாமர்த்தநாச நாளிலேவிரோதமுற்றார்
கட்டமாஞ்சித்துருவாலே காரியஞ்சேதமாமே.

இ-ள். பெரிய வட்டத்தைப்போன்ற வடிவமுடைய சந்திரமகா திசையில் சுக்கிரன் உண்ணும் புக்திமாதகங்களான 20-லும் தன் சரீரத்தில் சமரச ஜாட்டியம் உண்டாம். தன் கையிலுள்ள பொருளை விரயம் செய்யும். நஷ்டங்களும் அர்த்தநாசமும் உண்டாகும். திடீரென்று அயல் ஜனங்களே பகைவராவர். தன் பகைவரால் பற்பல கஷ்டங்களும் தான் தொடுத்த வேலைகள்யாவும் கைகூடா தென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. சுக்கிரன் ஜெனனகாலங்களில் இரண்டிலிருந்தால் அவன் புக்திநாதனாக வருங்காலம் புதையலும், அரசரால் சந்தோஷமும், பொன் பூஷணலாபமும் உண்டு. கொடிய க்ஷேத்திரங்களிலும் தீய கிரகங்களுடனும் சேர்ந்தால் கொடிய பலனை கொடுப்பான். 132

வெண்மதிதனிலேவெய்யோன் வேண்டியவாறுமாதம்
உண்மதிசுரமும்பித்த முருவமுங்குலைந்துவேறாய்
கண்மதியங்கந்தன்னிற் கடுவலிநோயுண்டாம்
பண்புறுகுணத்திநாளிப் பலனுண்டுபலன்செய்யாதே.

இ-ள். வெண்மைப் பிரகாசமுடைய சந்திரமகாதிசையில் சூரியன் உண்ணும் புக்தி 6-மாதங்களில் உட்கண்ட வியாதியும், ஜுரமும் பித்தம் முதலியவைகள் பீடிக்கப்படும். தன் சரீரங்குலைந்து மாறு ரூபமாகுவன். நேத்திரத்திலும், மனதிலும், தேகத்திலும், கொடிய உபத்திரவமான வியாதி உண்டாகும். சிநேகவாஞ்சையை யுடைய பெண்ணே! சூரியனுக்கு நல்ல பலனைத்தரும் சக்தி இருந்தாலும் தரமாட்டான் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சூரியன் லக்கினாதியுடன் கூடினாலும் 2-11-இவ்விடங்களிலு மிருந்தால் தன் புக்தி அந்திரகாலங்களில் நல்ல பலனைத் தருவானென்றும், ஆனாலும் பிதுர்நாச முண்டாகும், கேந்திரகோணங்களி லிருந்தால் ராஜசேவையும், சந்தோஷமும். புத்திரலாபம் முதலிய நற்பலனையே தருவாரென்றும் சோதிடத்தோர் கூறுவார். 133

செவ்வாய் திசையில் கிரகபுக்தி பலன்

நன்றிசெய்சேயின்மாத நாலுநாளிருபத்தேழும்
கன்றிடுங்காலினாய்கள் கடுத்திடுமேடமாதம்
வென்றிசேர்மன்னரச்சம் வெப்புநோய்தீசராலே
கொன்றிடுந்தேளின்மாதத் துடன்வெட்டுங்குத்துமாமே.

இ-ள். குஜமகாதிசை வருஷம் 7-ல் குஜன் சுயபுக்தியாகிய மாதம்-4, நாள் இருபத்தேழிலும் அவன் தரும் பலன் என்ன வெனில், குட்டிப்போட்ட சுணங்களுல் தன் காலில் கடிபடுதலும், வெற்றியையுடைய ராஜாக்களால் சித்திரைமாத பிரவேச காலங்களில் அச்சமும் தான் அதிக வருத்தப்படத்தக்க நோய் நீச்சரால் உண்டாதலும், கார்த்திகை மாதம் வந்தபோது பெரிய சண்டை முதலியவைகளால் அடிபடுதலும் மரணத்திற்கேதுவான தோஷமும் உண்டாகும்.

வி-ரை. மேற்சொன்ன குஜன் நீச்சம் அஸ்தமயம் அல்லது 6-8-12-இவ்விராசிகளி லிருந்தால் தீயால் பயமும், சுபனங்கிசம் பெற்றும் சுபனுடன் கூடியும் இருந்தால் நாற்கால் வாகனலாமும் சுபபலன்களாகவே நடக்கும் என்றறிக. 134

செவ்வாயில்ராகோராண்டுஞ் சேர்ந்தநால்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிஷத்தாற்றேளாற் றிங்களிலுற்றூர்நாசம்
இவ்வாறுமேகக்கட்டி யிருந்திடுந்தலம்வேறாகும்
கொவ்வைவாய்மானேகுட்டங் குரூரமாம்பீடையாமே.

இ-ள். குஜமகாதிசையில் பாம்பாகிய இராகு உண்ணும்வருடம்-1, நாள் 18-ல் அவன் தரும்பலன் என்னவெனில் கொடியவிடங்களால் துன்பப்படுதலும், தன் தாய்தந்தையர் முதலிய பந்துவர்க்கத்தாருக்கு கார்த்திகைமாதம் வந்தபோது கெண்டாதி தோஷங்கள் உண்டாவதோடு தன் சுயக்ஷேத்திரத்தை விட்டு அங்கிய க்ஷேத்திரத்திற்கு மாறுதலும், அவயவக் குறைவை உண்டுபண்ணும் குஷ்ட வியாதியும், கொடிய துன்பமும், பீடையும் உண்டாகுமென்று கோவைக் கனியையொத்த இதழ்களையுடைய பெண்ணே! சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன இராகு சுபகிரகங்களுடன் கூடினுலும், பார்வை பெற்றாலும், 3-10-11-இவ்விடங்களில் இருந்தாலும், ராஜப்பிரீதியும், பூமி மூலமான லாபமும், களத்திர புத்திர சுகமும் உண்டென்று சொல்வது சாஸ்திர சித்தம் ஆனதால் இராகு எந்த க்ஷேத்திரத்தி லிருக்கிறானென்று ஆராய்ந்து கூறுக. 135

முழங்கியசேயிற்பொன்னன் முன்னூற்றுமுப்பத்தாறும்
வழங்கிடுமர்த்தநாச மன்னராற்பகையுமுண்டு
தழங்கிடுந்திசைதொடங்கி சத்துருபலருமாவர்
அழங்கலிநாளிற்செல்வ மரசராலுறவுமாமே.

இ-ள். முழக்கத்தையுடைய குஜமகாதிசையில் குரு உண்ணும் நாட்களான 336-ல் அவன்தரும் பலனென்னவெனில் அர்த்த நாசத்தை யுண்டு பண்ணும். மேலும் இராஜாக்களால் விரோதத்தைக் கொடுக்கும். மேல் எழுதிய குஜதிசை ஆரம்பமுதல் தன்சத்துருக்கள் அனேகமாய் உண்டாவர். அந்திய காலங்களில் தனத்தைக் கொடுப்பதோடு இராஜாக்களால் சினேகம் உண்டாகுமென்றும் சொல்வாயாக. எ-று.

வி-ரை மேற்சொன்ன குரு உச்சம் ஆக்ஷி பெற்று சுபனங்கிசம் பெற்றாலும் அல்லது சுபன் வீடுகளிலிருந்தாலும் மேற்சொன்ன தீயபலனைத் தரான். இராஜசன்மானமும் பாக்கிய விருத்தியும், பாக்கியசேர்க்கை பெரியோர் உறவு, சினேகம் உண்டாகுமென்றும் கூறுவர். 136

மருவியசேயிற்காரி மாதமீராறுமொன்றும்
கருதியநாளொன்பானுங் கலகமாம்வழக்குச்சண்டை
பொருபடையர்த்தநாசம் பொருந்தியமெய்யிற்குட்டம்
மருவியநிலையுங்கெட்டு மனத்தினிற்கிலேசமாமே.

இ-ள். அங்காரக மகாதிசையில் சனி உண்ணும் காலங்களான மாதம்-13, நாள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன் என்னவெனில் கோள் உண்டாதலும் பற்பலவித விவகாரங்களும் சண்டை நேருதலும், தனக்கு உதவி செய்பவர் அல்லது உறவினர் களுக்குக் கொஞ்சம் விரயமும், தன் திரேகத்தில் குஷ்ட வியாதியும், தான் நிலைத்திருக்கும் க்ஷேத்திரத்தை விட்டுவிடுதலும் மனச்சஞ் சலங்களையும் உண்டாக்கும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி கார்யாதிபாயும் அல்லது சொக்ஷேத் திரம் திரிகோணம் உச்சம் உச்சனங்கிசம் இவ்வாறு இருப்பானாகில் மேற்சொன்ன தீயபலனைத் தரான். மகா கீர்த்தியும், புத்திர களத் திர லாபமும் உண்டு. நீச்சம் பெற்றும் 6-8-12-இவ்விடங்களிலு மிருப்பானாகில் இராஜபயமும் துடுக்கர் மூலமான ஆபத்தும் உண் டாகுமென்றும் கூறுக. 137

முந்தியசேயிற்புந்தி முன்னூறேடைம்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள் செல்வமுமிகுதியாகும்
வந்திடுநோயுந்தீரும் மருவியகன்னிமாதம்
நிந்தையாமரவுதீண்டு நீடியபலன்செய்யாதே.

இ-ள். முன்சொல்லிய குஜன் மகாதிசையில் புதன் உண்ணும் நாட்களான 357-லும் அவன் தரும்பலன் என்னவெனில் அழகு லக்ஷணம் பெருமை முதலியவைகள் வாய்ந்த ஸ்திரீயை அடைதலும், தனவிருத்தியும் தனக்குண்டாயிருக்கும் வியாதி நிவர்த்தியாதலும், திடீரென நிந்தையைத்தரும் விஷப்பாம்பானது இப்புத்தியில் புரட்டாசி மாதத்தில் கடித்தலும், தான் எவ்வளவு முயற்சி செய்யி னும் பலனைத் தராதெனவும் கூறுவர் எ-று.

வி-ரை. புத்திநாதனான புதன் நீச்சமாகவும் அஸ்தமயமாகவும் 6-8-12-என்னும் இடங்களிலுமிருந்தால் அவனுக்கு அபமிருத்தும் மனைவி புத்திரநாசம் நாற்கால் ஜீவவிரயம் முதலிய தீயபலனையும், கேந்திரம் கோணம் உச்சம் முதலிய க்ஷேத்திரப்பெறின் உத்தி யோக லாபமும் களத்திர சுகமும் சாஸ்திரக் கேள்வி முதலிய நற் பலனையும் தருமென்றும் பெரியோர் சொல்வர். 138

செய்யவன்றனிலேகேது சேர்ந்திடுமாதநான்கு
உய்யுநாளிருபத்தேழு முடன்பகைமாதராலே
மெய்யிலேவியாதிதோன்றும் விஷபயமிகுதியாகும்
தையலார்பொருட்டானிந்தை சத்துருமிகுதியாமே.

இ-ள். குஜன் மகாதிசையில் புத்திநாதனுக வரும் கேதுவுண்ணும் மாதம்-4, நாட்கள் 27-லும் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து ஸ்திரீஜெனங்களால் விரோதமும், திரேக ஜாட்டியமும், கொடிய சர்ப்பங்களாகிய விஷங்களால் அச்சமும், ஸ்திரீகள் மூலமான பழிபாவ வசனங்களுண்டாதலும், தன்னை துவேஷிக்கும் பகைவர் அநேகமாய் உண்டாவர் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனுன கேது உச்சம் கேந்திர கோணம் இவ்விராசிகளிலிருக்க தனதானிய லாபமும், நாற்கால்ஜீவ லாபமும், ராஜாக்களால் தயவும் உண்டாகும் என்று மேலோர்கூறுவர்.

நாடியசேயிற்சுங்க னற்றிங்களீரேழுக்கும்
நீடியபொருளுஞ்சேரு நேரிழைவந்துசேர்வள்
தேடியதெய்வபூசை செய்வன்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல் வாகனம்பெறுவர்தாமே.

இ-ள். குஜமகாதிசையில் புக்திநாதனுக மாறிவரும் சுக்கிரனுண்ணும் மாதங்கள் 14-ஆகும். அக்காலங்களில் நிறைந்த செல்வம் பெறுதலும் அழகுபொருந்திய ஸ்திரீகள் வந்தடைதலும், பகவஸ்துதியுண்டாதலும், பெரிய தவசி முதலிய ஞானிகள் கூடுதலும், வாட்டத்தைத்தரும் சிரங்கு முதலிய மேல்கண்ட ரணங்களை உண்டு பண்ணுதலும், நாற்கால் ஜீவன்களை வாங்குதலும் இப்பலனை அடைவான் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் 6-8-12-இவ்விடங்களில் நீசம் பெற்றிருப்பானுகில் தெற்குதிக்கு பிரயாணமும், கஷ்டம், துக்கம் முதலிய பலன்களை உண்டுபண்ணுவான் என்றும் மேலோர் கூறுவர்.

அங்கியிற்பருதிதிங்க ளுனுநாளாறுமாகும்
மங்கியகுட்டங்கண்ட வியாதியாமனத்திற்றுக்கம்
செங்கனற்பயமுண்டாகுஞ் சீர்மறையவராற்றுன்பம்
இங்கிதமனையாள்நோவு மெவர்களும்பகைவராமே.

இ-ள். குஜமகாதிசையில் பருதியாகிய சூரியனுண்ணும் மாதங்கள்-4, நாட்கள் 6-லும் அவன் தரும் பலன். உருவங்களைக் குறைவுபடுத்தும் குஷ்டவியாதியும், கழுத்து மார்பு வயிறு முதலிய கண்டரோகமும், மனவியாகூலமும், செழுமை நிறமுள்ள நெருப்பால் அச்சமுண்டாதலும், சிறப்புபெற்ற விப்பிரரால் கஷ்டமும், இனிமையைத் தரும் பெண்சாதிக்கு ரோகமும், யாவரும் விரோதமுள்ளவர்களாகவே இருப்பார் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனை சூரியன் 6-8-12-இவ்விடங்களில் தீயகோட்களுடன் கூடி இருந்தால் பந்துஜனக் கலகம், புக்தி முதலில் கஷ்டமும், மத்தியில் அதிக கொடுமையும், அந்தியில் பரதேச சஞ்சாரமும் செய்வான். 3-10-11-இவ்விடங்களிலிருந்தால் தன தானியலாப முதலிய நற்பலனையே தருவார் என்றும் கூறுவர். ()

நலமுறுசேயிலிந்து நாடியதிங்களேழும்
பலமுறும்பூமிலாபம் பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்து மின்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்பு தளர்ச்சிவந்தெய்துந்தானே.

இ-ள். நற்பலனையே தரும் குஜமகாதிசையில் சந்திரனுண்ணும் காலமான மாதங்கள் 7-லும் பூமி மூலமான லாபத்தால் மேன்மை பெறுதலும், வாகன முதலிய விருத்தியுண்டாதலும், பிரகாசத்தை யுடைய முத்து பொன் முதலியவைகளால் சந்தோஷமும் ஆடை விருத்தியும் பிற்காலங்களில் தன், க்ஷேத்திரத்தை விட்டு அந்நிய க்ஷேத்திரம் போதலும் தரித்திரமும் உண்டாகுமென்றும் சொல்லுக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனை சந்திரன் உச்சம் லாபம் சுபர்வீடு திரிகோணம் இவ்விடங்களி லிருப்பாராகில் புண்ணியதீர்த்த ஸ்நானம் தேவாலய தரிசனம் இவைகளை உண்டுபண்ணும். 6-8-12-ல் பாவகிரகங்களுடன் கூடியிருந்தால் இராஜகோபம் முதலிய பலனைத் தரும். 142

இராகு திசாபுக்தி பலன்

இராகுவிலிராகுமாத நாலெட்டுநாளீராறும்
வாகுருவேந்தனுச மனத்துயர்விஷத்தால்பீடை
ஏகமாமனையாடுன்ப மிருந்திடுந்தலபேதங்கள்
காகநேர்நிறத்தனாலே கலகமுங்கோளுண்டாமே.

இ-ள். இராகு மகாதிசையில் தன் சுபபுக்தியான வருடம்-2, மாதம்-8, நாள்-12 ஆகும். அக்காலம் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து (தன் பெற்றோரென்னும்) இராஜனுக்கு கெண்டமும், சஞ்சலமும், விஷங்களால் துன்பமும், தன் சுகத்திற்கு ஈடு பட்ட பெண்சாதிக்கு கஷ்டமும், தன் வீட்டைவிட்டு அந்நிய வீட்டிற்கு ஏகுதலும், காகத்திற்கொப்பான கருப்புநிறமுடையவனால் சண்டை முதலியவைகளை உண்டுபண்ணுமென்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன இராகுபகவான் உச்சனாகவும் சொக்ஷேத்திரமாகவுமிருந்தால் மேற்சொன்ன துற்பலனைத் தராது. மேலான யோகபலனைத் தருவானென்று கூறியிருப்பதால் அவனிருக்கும் இடமறிந்து அதற்கேற்றவாறு பலன் சொல்லுக. 143

பாரியவிராகின்மன்னன் பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாரியேயிருபத்தெட்டு நாளுமூவெட்டினின்பம்
ஆரியாலேசெல்வ மாசரான்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடும் காரிழைமணமுண்டாமே.

இ-ள். பெருமைபெற்ற இராகுவின் திசையில் புக்திநாதனுக மாறிவரும் குரு உண்ணும் மாதங்கள் 28 நாட்கள் 24-ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து சந்தோஷம் பிராமணரால் தனமுண்டாதலும், ராஜாக்களால் சந்தோஷமும், தான் தொடுத்த வேலைகள்யாவும் ஜெயமடைதலும், பெண்களைக் கலியாணம் செய்துகொள்ளுதலும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனை குரு 6-8-12-ல் இருந்தாலும் அவ்வீட்டோன் பார்வைபெற்றாலும் நற்பலனைத் தரமாட்டான். கிரகநாசமும் நோய் முதலிய துன்பங்களையே தருவானென்றும் கூறுக. 144

வடிவுளவிராகிற்காரி மாதமுப்பத்துநான்கும்
டடிமிசைநாளாறுக்கும் பகைமனத்திடர்வியாதி
முடியிலாவழக்குச்சண்டை மூண்டிடும்வாதபித்தம்
இடியுறுசெங்கைசோதி சதயமுமிகுதிநோயே.

இ-ள். கறுத்த நிறத்தையுடைய இராகுவின் திசையில் சனி யுண்ணும் புக்தி மாதம்-34, நாள் 6 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து சத்ருத்துவமும் தைரியகுறைவும் ரோகமும் நீங்கப்படமாட்டாத விவகாரங்களும் சண்டையும் தன் திரேகத்தில் பித்தம் என்னும் வியாதியும், ரோகத்தையும் தரும். நக்ஷத்திரங்களை சோதிக்குமிடத்து சதயம் சுவாதி திருவாதிரை என்னும் 3 நக்ஷத்திரங்களில் வியாதியுண்டாகும் எனவும் அழகு வாய்ந்த பெண்ணே! சொல்வாயாக எ-று.

வி-ரை புக்திநாதனை சனி லாபம் உச்சம் சுபகிரகங்களின் அம்சம் முதலியவைகளில் இருப்பாராகில் ஆபரண பூஷண லாபம், விஷ்ணு பக்தி, பட்டாபிஷேகம், இராஜயோகத்திற்குச் சமமான யோகமும் அனுபவிப்பான், பாவிகளுடன் கூடி 6-8-12-ல் இருப்பாகில் மேற்சொன்ன பலன்களைத் தவிர்த்து துன்பபலனையே தருவான். 145

வந்திடுமிராகிற்புந்தி மாதமுப்பதின்மேனாட்கள்
முந்தியமூவாறுக்கு முயற்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தையிற்றெய்வபக்தி சிலபொருள்வந்துசேரும்
விந்தையாமழலைசேரு மேலுறுபகையுண்டாமே.

இ-ள். மேற்சொன்ன இராகுமகாதிசையில் புக்திநாதனுக மாறிவரும் புதனுண்ணும் மாதக்களான முப்பதும், நாட்கள் பதினெட்டி

னும், அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து எக்காரியங்களை யாவது ஆரம்பித்தலும், அதன் மூலமாக நற்பலனும், தன் மனதில் கடவுளை தியானித்தலும், பற்பல தனங்களை யடைதலும், அழகு டைய புத்திரர் உண்டாதலும், கொடிய சத்ருத்துவமும் உண்டா கும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனான புதன் 2-11-இவ்விடங் களில் இருந்தாலும், அவ்வீட்டோன் பார்த்தாலும், மேற்சொன்ன பலனினும், இன்னும் அதிகமான சவுக்கியமும் இஷ்ட போஜனமும், புஷ்ப அலங்காரமும் உண்டாகும். 6-8-12-இவ்விடங்களில் இருப்பா ரானல் களத்திர ரோகமும், சூரியனால் பார்க்கப்பட்டால் தனவிரய மும், கஷ்டம் முதலிய துற்பலனும் அடைவானென்று கூறுக. 146

மருவியராகிற்கேது மாதமீராறமிக்க
கருவியநாண்மூவாறு கடிவிஷத்தாலேஜயம்
தருமகவுக்குப்பீடை சரீரமேவீங்குநோயாம்
அரிவையர்தமக்குத்துன்ப மரசாலச்சமாமே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் கேதுவி னும் மாதம்-12, நாட்கள் 18-ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து விஷஜெந்துவின் கடியால் துன்பமும், தன் புத்திரவர்க்கங்களுக்கு இடையூறும், தன் உடல் ஸ்தூலிக்கத் தக்க வீக்கத்தால் உபத்ரவமும், தன் மனைவிக்குக் கஷ்டமும், ராஜாக் களினால் பயங்கரமும் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய கேது சுகாதிபதியுடன் கூடி இருந்தால் முத்துப்பல்லக்கு சேர்தலும், சுபருடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் அரசனுக்குச் சமானமானவனென்றும் கூறுவர். ()

மன்னியவிராகில்வெள்ளி மாதமோமுப்பத்தாறும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும் பூஷணமிகுதியுண்டாம்
அன்னியமங்கைசேர்வ ளரசரால்மகிழ்ச்சியுண்டு
பின்னும்வஞ்சனையாற்றுன்பம் பீடைவந்தகன்றபோமே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் சுக்கிர னுண்ணும் மாதங்கள்-36. அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து பொன் நாணயங்கள் முதலிய பற்பல செல்வவிருத் தியும், நகைகள் அநேகமாய்ச் சேர்தலும், அழகிய பெண்கள் வந் தடைதலும், ராஜரீகம் புரிபவரால் சந்தோஷமும், தன்னைப் பிறர் மோசம் செய்வரென்றும், கூறுக. ஆனால் பலவித கஷ்டங்களும், நஷ் டங்களும் உண்டாகி நிவர்த்தியாகும் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. புக்திநாதனாகிய சுக்கிரன் சுபனாக இருக்கினும் அவன் நின்ற க்ஷேத்திரத்திற்குத் தக்கபடியே பலனை அளிப்பானாகையால் அவன் தன் சொக்ஷேத்திரத்திலும் உச்சனாகவும் சுபகிரகங்களுடன்

கூடியுமிருந்தால் நற்பலனைத் தருவானேயொழிய கொடிய க்ஷேத்திரங்களிலும் தீயகிரகங்களுடனும் கூடி இருப்பானாகில் அவன் நற்பலனைத் தரான். 148

ராகுவிலிரவிமாதம் பத்துடன்நாள்மூவெட்டும்
வாகுறுகுலத்தார்சண்டை மன்னராற்றஞ்சமாகும்
சேகுறுமனையாள்பிள்ளை பிறுதுருசினுகதாகும்
ஆகமூவிதத்தாலேய மிருப்பிடமகலுந்தானே.

இ-ள். இராகு மகாதிசையில் புத்திநாதனாக வரும் சூரியனுண்ணும் மாதங்களான 10, நாட்கள்-24-ல் அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து அரசர்களால் ஜீவனமுண்டாதலும், தன் சுயஜென விகாதமும், தனக்கு உதவியாளாகிய மனைவி புத்திரர் சகோதரர் இவர்களால் மன வியாகூலமும் கஷ்டமும் உண்டாகும். மேற்சொன்ன 3 விதத்தாராலேயே தன் வீட்டைவிட்டு அன்னிய வீடு போகவும் செய்யும் எ-று.

வி-ரை. இராகு திசையில் புத்திநாதனாகவரும் சூரியன் உச்ச சொக்ஷேத்திரம் பெற்றிருந்தால் இராஜாக்களால் அபிமானம் உண்டாகும். அன்றியும் மேற்குதிசையில் சுபகாரியார்த்தமாய் பிரயாணம் செய்யவும் நேரும் என்றும் கூறுவர். 149

உதித்திடுமிராகிலிந்து உயர்திங்களீரோன்பானும்
மதித்திடும்பந்துநாச மனைவியார்பொருளுஞ்சேதம்
கதித்திடும்மத்தமோணத் திசையினிற்கால்கணேவு
விதித்திடும்தலம்விட்டேகும் விஷத்தினுற்றுன்பமாமே.

இ-ள். இராகு மகாதிசையில் புந்திநாதனாகவரும் சந்திரனுண்ணும் மாதங்களான பதினெட்டிலும் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தனக்கு உதவியாக இருக்கும் உறவினருக்கு தோஷங்களும், தனச்சேதம் தன் மனைவியாலுண்டாதலும், அஸ்தம் திருவோணத்திற்குரிய வடக்கு மேற்கு திசையில் பிரயாணம் செய்து தன்பாதம் நோகுதலும், தன் பூர்வோத்திரமாயிருந்த இல்லத்தை விட்டுப் போதலும், விஷவகையால் கஷ்டங்களும் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. புக்திநாதனான சந்திரன் ஜெனனகாலங்களில் திசாநாதனுடனும் 5-ஆம் வீட்டோனுடனும் கூடி அவ்விருவரும் பாவகிரகங்களாகவே இருக்கில் மேற்சொல்லியதைவிட மேலான துற்பலனையே தரும், உச்சசொக்ஷேத்திரம் பெற்றாலும், 3-10-இவ்விடங்களில் இருந்தாலும், மேற்சொன்ன துற்பலன்யாவும் நீங்கி நற்பலனே விளையும். 150

இன்புறுமிராகிற்செவ்வாய் மாதமீராறுமிக்க
வன்புறுநாண்மூவாறு மக்கினிபயங்கிலேசம்

மன்பகைவிஷத்தாற்பீடை மருவுசண்டாளரின்பம்
துன்பமாங்களவுசண்டை துயர்மனைகிலேசந்தானே

இ-ள். இன்பத்தைத்தரும் ராகுமகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் குஜனுண்ணும் மாதம்-12, நாட்கள்-18, அக்காலம் அவன் தரும் பலனகளாவன, நெருப்பால் துன்பமும், மன வியாகூலமும், ராஜாக்களால் விரோதமும், விஷங்களால் துன்பமும் தன்னை எதிர்த்த கொடியவர்களுக்குச் சந்தோஷமும், பலவித துன்பங்களும், தன் வீட்டில் திருடுபோதலும், வாக்குவாதமும், தன் இல்லத்திலேயே துயரங்களும், சந்தேகங்களும் உண்டாகும் எ-று.

வி-ரை. ஜெனனகாலங்களில் அங்காரகன் உச்சனாகவும், சொக்ஷேத்திரனாகவும், சுபகிரகங்களால் நோக்கம்பெற்றும் இருந்தால் அவன் புக்தியில் சவுக்கியங்களும், பூமிலாபமும் நாற்கால்ஜீவலாபமும், ராஜபேட்டியும், தேவபிரசாத முதலிய நற்பலனையும் தருவாரென்றும் கூறுவர். 151

குருதிசையில் கிரகபுக்தி பலன்

மருவியபொன்னின்மன்னன் மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்கு முயர்பிரதாபமிக்க
பொருளுடன்தானியங்கள் பூஷணம்பூமிலாபம்
அரிவையர்சேர்த்தியின்ப மாசரான்மகிழ்ச்சியாமே.

இ-ள். குருமகாதிசையில் தன் சுயபுக்தியான வருடம்-2, மாதம்-1, நாட்கள்-18 அக்காலம் அவன் அடையவேண்டிய பலனென்னவெனில், கௌரவம் உண்டாதலும், தனச்சேர்க்கையும், தானிய பலிதமும், ஆபரணவிருத்தியும், மண் மனை லாபமும் உண்டாவதோடு ஸ்திரீ சேர்க்கையால் சந்தோஷங்களும் நற்பலனையும் விளைவிப்பான் எ-று.

வி-ரை. ஜெனனகாலங்களில் குரு உச்சம் ஆக்ஷி கேந்திர கோணம் இவற்றிலிருந்தால் மேற்சொல்லிய பலனைவிட மேன்மையான பலனே விளையும். நீச்சராசி அல்லது 6-8-12-இவற்றிலிருந்தால் தாயாதி விரோதமும், தானிய நாசமும், அன்னியதேசம் செல்லுதலும், அபமிருத்து தோஷம் முதலிய பலனே விளைவிக்கும் என்றும் கூறுவர். 152

பொருந்தியகுருவிற்காரி புகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறும் வாகனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
இருந்திடம்வெற்றியில்லை யிடர்வந்துநீங்குந்தானே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் சனியுண்ணும் வருடம்-2, மாதம்-6, நாள்-12 அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து நாற்கால் ஜீவசேர்க்கையும் தனச்சேர்க்கையும்

உண்டாவதோடு கால் கரங்கள் முதலிய பூட்டுகளில் முடக்கும் வாதமும் உண்டு. தன் பெண்சாதிக்கும் பற்பல கஷ்டங்களும், தன் சுயக்ஷேத்திரத்தில் வெற்றி முதலிய சுககுறைவென்றும் பலவித கொடிய பலனுண்டாகி பரிகாரமாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் 11-5-9-இவ் விராசியில் பலம்பெற்ற கிரகங்களுடன் கூடி இருப்பானாகில் அவன் முன்சொன்ன கொடியபலனைத் தராது நற்பலனைத் தருவான். நீச்சம் பெற்றும் 6-8-12-இவ் விராசியிலும் சம்பந்தப் படுவானாகில் அதிக கஷ்டமும், களத்திர புத்திர நாசமும் உண்டாகுமென்றும் கூறுவர். 153

மருவியகுருவிற்புந்தி மாதமோவிருபத்தேழும்
அருகுறுநாளோராறு மாடலும்பாடல்ஞானம்
வருவதுபூசையாலும் வளமுளமாதர்மைந்தர்
பெருகிடுஞ்செல்வமன்னர் பெருமையும்புகழுண்டாமே.

இ-ள். பெருமையும் பிரக்யாதியையுமுடைய குருதிசையில் புக்திநாதனாக மாறிவரும் புதனுண்ணும் வருடம்-2, மாதம்-3, நாள்-6 அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்களால் கொண்டாடுதலும், சங்கீதங்களைக் கற்றுக்கொள்ளுதலும், தத்துவப் பயிற்சி செய்தலும், தேவாலயங்களுக்கு அபிஷேகித்தலும், வளமை பொருந்திய களத்திர புத்திர விருத்தியும், தனவிருத்தியும், மன்னரால் பெருமையும், சந்தோஷமும் உண்டாகுமெனவும் கூறுவார் எ-று.

வி-ரை. புதன்நின்ற இராசிக்குடையோன் நீச்சம் பெற்றாலும், அஸ்தமயம் பெற்றிருந்தாலும், பாவகிரகங்களுடன் கூடியிருந்தாலும், திரேகபீடையும், புத்திரபீடையும், களத்திர புத்திர நாசமும் உண்டாகும். புதன் கேந்திரத்திலும் கோணங்களிலும் ஆக்ஷி உச்சம் பெற்றும் சுபரால் பார்க்கப்பட்டுமிருந்தால் பால் அன்னம் புசித்தலும், நினைத்த காரியசித்தியும் களத்திர புத்திர சந்தோஷமும் உண்டாகுமென்றும் கூறுவர். 154

பாவியகுருவிற்கேது பதினொருமதிநாளாறும்
திரமுளமாதர்க்கேடு திரிச்சலாந்தேசமெங்கும்
உரமுளஉற்றார்மற்றை யுறவினர்பகையதாகும்
நிரவியமனையாடன்று னிலைவிட்டுப்போவதாமே.

இ-ள். உலகெங்கும் போற்றும் குருமகாதிசையில் கொடியோனை கேதுண்ணும் மாதங்கள்-11, நாட்கள் 6-லும் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து தனக்குச் சுகத்தைத்தரும் பெண்களுக்கு கெண்டாதி தோஷங்களும், அன்னிய தேசங்களில் சஞ்சாரம் செய்தலும், தன் பந்து ஜெனமும் அன்னிய ஜெனமும் விரோதமாத

னும், தாய் தந்தை விரோதமும், தன் களத்திரத்தால் தான் தனது சுயக்ஷேத்திரத்தைவிட்டு அன்னியதேசம் போகவும் நேரும் எ-று.

வி-ரை. ஜெனனகாலங்களில் கேது சுபகிரகங்களுடன் கூடில் அவன் புத்தியில் அற்பபலனை விளைவிப்பான் இரவியுடன்கூடி 6-8-12-ல் இருந்தால் களத்திரநாசம் பயம் முதலிய தீயபலனை விளையும் என்று சொல்லுக. 155

மருவியகுருவில்வெள்ளி மாதமுப்பத்திரண்டு
நிரைபரிகட்டுவர்க்கம் நிலைமையாம்பொருளுஞ்சேரும்
புரையுளகன்னிமாதம் பூமியும்போகமுண்டாம்
குரைகடற்சுற்றத்தோடு குணமுடன்வாழ்வர்தாமே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனாக வரும் சுக்கிரனுண்ணும் வருடங்கள்-2, மாதம்-8 அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து பலத்தைப் படைத்த யானை குதிரை முதலிய வாகனங்களையடைதலும், தனநிக்ஷேபமும், அந்த திசையில் புரட்டாசிமாதகாலங்களில் பூமி வாங்குதலும், சிற்றின்பத்தை அனுபவித்தலும், இக்கடல்சூழ்ந்த உலகின்கண் அவன் பந்து ஜெனங்களோடு சந்தோஷமாய் வாழ்ந்திருப்பான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் ஆக்ஷி உச்சம் திரிகோணமுள்ள ராசியிலிருப்பானாகில் அவன் புக்தியில் யானை குதிரை லாபமும் நாற்கால் விருத்தியும், கலியாணம் செய்துகொள்ளுதலும் நடக்கும். 6-8-12-ல் இருந்தால் பந்துஜென கலகமும் களத்ர பீடையும் ராஜநிஷ்டூரமும் உண்டு. 156

உலகுறுகுருவிற்பானு வொன்பதுநாண்மூவாறும்
நலமுறுமர்த்தலாபம் நாடியகருமங்கூடும்
பிலக்குறைநெருப்பிற்காற்றிற் பிணிபலர்பகையும்பீடை
சலகமாமகத்திற்பின்பு காரியநன்மையாகும்.

இ-ள். உலகத்தோர் யாவரும் கொண்டாடத்தக்க குருமகாதிசையில் ஆயிரங்கண்ணோனென சூரியனுண்ணும் மாதங்கள்-9, நாட்கள்-18 அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து நன்மையும் அர்த்தலாபமும், தான் தொடுத்தவேலை ஜெயம் அடைதலும், அக்கினியாலும் காற்றினாலும் பல கஷ்டமும், தன் வீட்டிலுள்ள பலருக்கு வியாதியும், சத்ருத்துவ கஷ்டமும், தன் இல்லத்தில் அநேக கோள் உண்டாதலும், அந்திய காலங்களில் தான் தொடுத்தகாரியம் கைகூடுதலும் உண்டாம் எ-று.

வி-ரை. சூரியன் கேந்திரகோணம் பெற்றிருந்தாலும் அஷ்டமாதிபதி பார்ப்பானாகில் முதலில் ஜுரம் சிரநோய் தன் வீட்டு லக்ஷிமிகரம் குறைவு பாவம்செய்ய எண்ணம் கட்டுதிட்டம் தெய்வஸ்துதியுண்டு. 157

நின்றதோர்குருவிலிந்து நேர்பதினறுமாதம்
வென்றிநற்சிவிகைமுத்து வெண்குடைபணியுமுண்டாம்
அன்றுநன்மனையான்மைந்த ரறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுநற்கருமமெல்லாந் தெய்வத்தாலெய்துந்தானே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனக வரும் சந்திரன் புசிக்கும் திங்கள்-16 அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து வெற்றியும், சிவிகைமுத்து லாபமும், வெண்சாமரம் குடை முதலியவைகளும், பூஷணங்கள் விருத்தியாதலும், களத்திர புத்திர சந்தோஷமும், உத்தமர் நேசமும், தனச்சேர்க்கையும், தேவானுபலத்தால் அவனுக்கு எல்லா நன்மையும் உண்டு எ-று.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் 6-8-12-இவ்விடங்களில் இருந்தால் தனநாசம், கௌரவக்குறைவு, இராஜாக்களால் கோபம், பீனிச ரோகம் உண்டாகும். 9-5-இவ்விடங்களில் இருந்தால் நற்பலனையுண்டு. 158

பாங்குளபொன்னிற்செவ்வாய் பதினென்றுமதிநாளாறு
தீங்குறுவினைகளுண்டாந் திருடராற்றழலாற்றுன்பம்
ஆங்குறுமுற்றுற்சேத மல்லதுபிணியுமுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகும் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனக வரும் குஜன் உண்ணும் மாதம்-11, நாள்-6 அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து கொடுமையை விளைக்கும் துன்பங்களும், தன் தாய் தந்தையர் முதலிய உறவினர்களுக்கு கெண்டாதிதோஷமும் இல்லையேல் கெண்டத்திற்குச் சமமான ரோகமும், தன் வீட்டைவிட்டுப் போகுதலும், தான் தொடுத்த வேலை அபஜெயமும் உண்டாகுமென்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் ஜெனனகாலங்களில் ஆக்ஷி உச்சமாயும் கேந்திரம் திரிகோணங்களிலும் இருந்தால் சொற்ப லாபமும், முற்பாதியில் தனநாசமும், பிற்பாதியில் தனதானிய லாபங்களும், தன் வீட்டில் கலியாண சம்ப்ரமங்களும் உண்டாகும். 159

மாதங்கக்குருவில்ராகு மாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாண்மூவெட்டு முடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
சூதுகண்மிகவுண்டாகுந் தொடர்ந்திடுஞ்செல்வம்போமே.

இ-ள். மகுத்துவம் பொருந்தியவரெனப் பெயர் விளங்கும் குருமகாதிசையில் இராகு உண்ணும் வருடம்-2, மாதம்-4, நாள்-24 இக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து கொல்லத்தக்க சத்துருத்துவமும், கொஞ்சம் விவகாரங்கள் உண்டாதலும், தன் கைப்பொருள் நாசமும், சத்துருத்துவமும், களத்திரத்திற்குப்

பற்பல கஷ்டமும், அனேகர் வஞ்சிப்பதும், தன் பொக்கிஷத்தி லுள்ள தனம் யாவும் விரயமாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய இராகு சுபனுடனும் அசுபனுடனும்கூடி கேந்திரகோணங்களிலிருந்தால் தாயாதி ஜென விரோதமும், அந்தியில் கஷ்டமும், மத்தியில் வெகு சவுக்கியமும், பற்பல நன்மையும் உண்டாகும். 160

சனிதிசையில் கிரகபுத்தி பலன்

காரியிற்காரிமாதங் கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளு மெய்யினில்வியாதிதோன்றும்
சீரியவடிமைமைந்தர் செல்வமுங்குறையும்பின்னும்
கூறியவுறவுதன்னாற் கொடும்பகைதாமுண்டாமே.

இ-ள். சனிமகாதிசையில் சுயபுக்தியான வருடம்-3, நாள்-3 ஆகும். அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து திரேகத் தில் வியாதி யுண்டாதலும், தன் ஆளடியார் குறைதலும், புத்திரன் நாசமாதலும், தனம் விரயமாதலும் உண்டு. தனக்குப் பகைவர் களும், தன் சுயபந்துக்களே தனக்குச் சத்துருவாகவும் இருப்பா ரென்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி புக்திக்குரிய பலனை ஒவ்வொரு வருக்கும் தன் இராசி கிரகப்படி இருக்கும் தாராதரமறிந்து கூறுதல் வேண்டும். எப்படியெனில் தன் சுயவீட்டிலும் 4-7-10-ஆம் ஸ்தானங் களிலும் சுபகிரகங்களின் அங்கிசையிலும் இருக்க நல்ல கீர்த்தியும், குதிரை, யானை முதலிய வாகனங்களும் இராஜாக்களால் பற்பல அநுகூலங்களும் உண்டு. 161

பங்கினிற்புந்திமாத நாலெட்டுநாளொன்பானும்
இங்கிதகல்விஞான மெழிலுடைப்பொருளுஞ்செல்வம்
மங்கையர்மருவிகூடு மைந்தருஞ்சுற்றமுண்டாம்
பொங்கமாய்மன்னராலே புகழ்ந்துவாழ்ந்திருப்பர்தாமே.

இ-ள். சனிமகாதிசையில் புசிக்க வரும் புக்திநாதனென்னும் புதன் உண்ணும் வருடம்-2, மாதம்-8, நாள்-9 ஆகும். அக்காலங் களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தாழ்வடையாத வித்தை அப்பியாசமும், பூர்வக்கியானமும், மேன்மையான பற்பல திரவியமும், தனங்களும், தன் வீட்டில் பெண்ணால் கலியாணம் கூடுதலும், புத்திரப்பேறுண்டாதலும், உறவினர்கூட்டுறவு உண்டாத லும், மன்னர்களால் சந்தோஷமும், சவுக்கியமும் உண்டாகுமெனவும் மேலோர் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய புதன் மிதுனம் கன்னி 11-9-இவ்விடங்களிலிருந்தால் மேற்சொல்லிய பலனுடன் இன்னும்

அனேக நற்பலனே விளையும் 6-8-12-இவ்விடங்களில் பாவகோட்க ளுடன் கூடில் நற்பலனைத் தரான். 162

படிமிசைசனியிற்கேது பதின்மூன்றுமதினாளெகன்பான்
கடியதோர்வலக்கால்வாதங் காணுமேபித்தரோகம்
மிடிவருமைந்தனாலே விஷபயமர்த்தநாசம்
கொடியிடையவராற்றுன்பங் கோளினாற்கலகமாமே.

இ-ள். சனிமகாதிசையில் கேது உண்ணும் வருஷம்-1, மாதம்-1, நாள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சொல்லு மிடத்து முக்கிய உறுப்பான வலது காலில் வாதம் உண்டாதலும், மேகசம்பந்தமான பித்தம் அதிகமாகுதலும் தன் புத்திரனால் கொடிய துன்பம் உணடாதலும், விஷஜெந்துக்களால் ஆபத்தும், அர்த்த நாசமும் பெண்களால் பல கஷ்டங்களும், பிறரால் உண்டாகும் கலக வார்த்தையால் சண்டையும் உண்டாகுமெனவும் கூறுவார் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது எந்த லக்கினமாக யிருந்தாலும் அந்த லக்கினாதிபுடன் கூடியிருந்தால் அவன் புக்தி ஆதியில் சவுக்கி யமும், கெங்காதீர்த்த ஸ்நானமும் கிடைக்கும். 5-9-6-8-12-இவ் விடங்களில் இருந்தால் அபமிருத்து உண்டு. இதற்கு சனி விரதம் 48-நாள் இருக்கில் பரிகாரமாம். 163

முனிவுறுசனியில்வெள்ளி மாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிநல்லார்த மின்பமும்வெற்றியுண்டாம்
வனிதையர்சேர்வர்லாப மக்களுஞ்சுற்றமுண்டாம்
தனியொருபகையுமுண்டாந் தன்னையும்வெல்லலாமே.

இ-ள். கோபத்தையுடைய சனிமகாதிசையில் சுக்கிரனுண்ணும் வருடம்-3, மாதம்-2 இக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்கு மிடத்து நல்ல மேலான ஆபரணங்களை அணிதலும், உத்தமர்களால் சந்தோஷமும், ஜெயமும் ஸ்திரீகள் கூடுதலும், ஆதாயமும் புத்திரப் பேறும் உறவினர் உண்டாதலும், நூதனமாக சத்ருத்துவம் உண்டா தலும், மரணம் முதலிய காரியங்களைச் செய்யவும், அதிகாரம் வாய்ந் தவனென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. ஜெனனகாலங்களில் சுக்கிரன் 2-7-க் குடையவனாக இருக்க களத்திர சந்தேகமும், குன்மவலியும் உண்டாகும். 6-8-12-ல் மூடம் பெற்றிருந்தால் நாசம் மனவியாதி மனைவிரயம் முதலியவை கள் உண்டு. 164

பாவியசனியிற்பானு பதினொன்றுநாளீறாறும்
உரமுளரத்தமேக முதரத்திற்சூலைகண்ணோய்
திரமுளமனையாண்மக்கள் சிறுத்திடுநோயினாலே
கரமதுவெரிவாங்காலும் கடுவலிவாதமாமே.

இ-ள். மேன்மையைப் படைத்த சனி மகாதிசையில் சூரியனுண்ணும் மாதம்-11, நாட்கள்-12 இக்காலங்களில் எவ்விதத்திலும் நீங்காத மேகசம்பந்த உதிரப்பெருக்கும், தொந்தி முதலிய இடங்களில் சூலை என்னும் உஷ்ணமும், நேத்திர ரோகமும், தனக்குச் சொந்தமான பெண்டிரும் புத்திரரும், சரீரம் மெலிந்து வியாதியால் அவஸ்தைப்படுதலும், அஸ்தங்களில் உஷ்ணமும், காலில் கொடிய நோயும் வாதமும் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. சூரியன் ஜெனனகாலங்களில் சுபகிரகங்களுடன் கூடியும் பார்க்கப்பட்டும் இருந்தால் மேற்சொல்லிய கொடியபலனைத் தராது நற்பலனையே தருவான். 165

மதமுறுசனியிலிந்து மாதம்பத்தொன்பதுக்கும்
விதமதாங்கலகம்பீடை வீட்டினில்வழக்குசண்டை
பதனமாம்பணிபூணாம் பல்வளம்பொருளுஞ்சேதம்
அதனமாந்தலங்கள்விட்டே யவதியான்மீள்வர்தாமே.

இ-ள். பலம்படைத்த சனி மகாதிசையில் சந்திரனுண்ணும் வருடம்-1, மாதம்-7 அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பற்பல விதங்களாலும் கோள் உண்டாதலும், தரித்திரமும் தன் இல்லத்திலேயே சச்சரவு ஏற்படுதலும், விவகாரங்களும் தன் ஜீவியத்திற்கென்று வைத்திருக்கும் பூஷணங்களென்னும் தான் அணியும் அணியணிகளும், இன்னும் பல தனம் பொருள் இவைகள் தன் கைவிட்டுப்போதலும், கொடிய கஷ்டங்களால் அவஸ்தைப்பட்டு தன் சுயஸ்தலத்தைவிட்டு அன்னிய ஸ்தலத்திற்குப் போவான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. கடகத்திற்கு ஆக்ஷிநாதனான சந்திரன் பாவகோட்களுடன்கூடி இருக்கில் களத்திரநாச முண்டாதலும், அல்லது மாதுரு நாச முண்டாதலும், பீடை முதலிய துற்பலனும் 6-8-12-ல் இவ்விடங்களில் பலம்பெற்று இருப்பானாகில் உத்தம போஜனமும் சவுக்கியமும் உண்டாகும். 166

பலனிலாச்சனியிற்செவ்வாய் பதின்மூன்றுநாளொன்பானும்
குலங்களிலீனமிக்க கொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடுந்தேசமெங்கு மனைவரும்விரோதமாவார்
தலங்களிற்பொன்னுற்சோரந் தலம்விட்டுப்பிரியுந்தானே.

இ-ள். நற்பலனைத் தரப்படமாட்டாத சனிமகாதிசையில் குஜனுண்ணும் வருடம்-1, மாதம்-1, நாட்கள்-9 அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தன் குலாசாரக் குற்றம் உண்டாதலும், கொடுமையான சத்ருத்துவமும் நிந்தை உண்டாதலும், அன்னிய தேசங்களிற் சென்று உலாவுதலும், எல்லா ஜனங்களும் தனக்குச் சத்ருத்துவமாகவே இருத்தலும், தன் வீட்டில் பொன்

முதலிய நாணயங்கள் களவுபோதலும், தன் க்ஷேத்திரத்தைவிட்டு அன்னிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லுதலும், துற்பலனுமே விளையும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் லக்னதியுடன் கூடி 3-6-11-இவ் விடங்களில் உச்சம்பெற்றாலும் சந்தோஷம், வஸ்திரலாபம், ராஜ உத்தியோகம், தனலாபம், பாக்கியம் இவைகள் உண்டாதலுமாம். லக்னதிபதியே குஜனுகில் நூதன மண் மனை சேர்க்கையும் 8-7-ஆம் ராசிக்குடையோனுகில் சத்துருபயமும் உண்டாகும். 167

முன்னமேசனியில்ராகு முப்பத்துநான்குமாதம்
மின்னுநாளாறிற்சேதம் விஷமதுதூரத்தித்தீண்டும்
இன்னமுஞ்சரீரமெங்கு மேருதவியாதியுண்டாம்
அன்னியர்பகையதாகு மல்லலுமிகுதியாமே.

இ-ள். முன் சொல்லிய சனிமகாதிசையில் புக்திநாதனுகவரும் ராகு உண்ணும் வருடம்-2, மாதம்-10, நாட்கள்-6 அக்காலம் அவன் தரும்பலனை சோதிக்குமிடத்து செம்புநாணயங்களும்பாத்திரங்களும் விரயமாதலும்,விஷத்தையுடையஅரவம்தூரத்திக்கடித்தலும்,இன்னும் அளவிடமுடியாத நோய் சரீரத்திலுண்டாதலும், பந்துவல்லாதார் விரோதமாகுதலும், விசேஷ அலைச்சல் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன ராகு லக்கினத்திலிருந்தாலும், லக்கினதி யுடன் கூடினுலும் மத்தியிலும் கடைசியிலும் கஷ்டமும் தனநாசமும் 3-6-10-11-இவ்விடங்களிலும் ரிஷபம்-கடகம்-மகரம் இவ்விராசிகளி லும் இருப்பானுகில் ராஜாக்களால் சன்மானமும் வஸ்திரபூஷணமும் உண்டாகும். 168

முன்புறுசனியின்மன்னன் முப்பதுநாளீராறும்
அன்புறுமடியார்சேர்வ ராடையாபரணங்கைமேல்
இன்பமாமரசராலே யெண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்ற மிகுதியாம்பலனுண்டாமே.

இ-ள். முன் சொல்லிய சனிமகாதிசையில் குருவுண்ணும் கால மான வருடம்-2, மாதம்-6, நாட்கள்-12 அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்கள் உண்டாகுதலும், சில வேலையாட்கள் வைத்து வேலை வாங்குதலும், வஸ்திரங்கள் உண்டாதலும், பூஷணங்கள் விருத்தியடைதலும், ராஜாக்களால் சந்தோஷம் உண்டாதலும், தான் தொடுத்தகாரியம் ஜெயமடைதலும், களத்திரமும் சுற்றத்தாரும் வந்து சேர்தலும் இன்னும் அநேக பலன் களையும் உண்டாக்குமென்றும் கூறுவர். எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு ஜெனனலக்கினத்திற்கு இரண்டு ஏழுக்குடையோனுகி இருந்தால் அந்த ஜாதகனுக்கு அபமிருத்து

தோஷம் உண்டாகும் என்றும் அதற்கு துர்க்காதேவி பூஜைசெய்யின் நிவர்த்தியாகுமென்றும் கூறுவர். 169

புததிசையில் கிரகபுத்தி பலன்

வலம்புரிதனிற்புந்தி மாதமோரிருபத்தெட்டும்
துலங்குநாண்மூவொன்பானுஞ் சுற்றமுந்துணையுமுண்டாம்
பலந்தருமர்த்தலாபம் ப்ாக்கியமிகவுமுண்டு
நலம்பெறுஞானங்கல்வி நாடிபுகருமமாமே.

இ-ள். யாவரும் வலம்வந்து தொழுது வணங்கும் மகாவிஷ்ணு வென்னும் புதன் மகாதிசையில் தன் சுயபுத்திக்குரிய வருடம்-2, மாதம்-4, நாட்கள்27-ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலன் என்னவெனில், தன் சுற்றத்தார் சேர்தலும், தனக்கு உதவிபுரிவோர் அநேகர் சேர்தலும், நற்பலன் உண்டாதலும், குறைந்த ஆதாயம் உண்டாதலும், அனேகமான தனசம்பத்துஉண்டாதலும், நன்மையை விளக்கும் ஞானமார்க்கங்களும், வித்தை அப்பியாச விருத்தியுண் டாதலும், தான் தொடுத்தகாரியம் ஜெயம் அடைதல் முதலிய நற் பலனும் விளையும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதன் சஷடமம் அஷ்டமம் மோக்ஷம் இவ்விடங்களில் இருக்கினும் பாவகோட்களுடனும், சகிதம்பெறினும் தன் குலத்தோர் நாசமும், குன்ம வியாதியும், விலங்கு ராஜ விரோத மும், தனநாசமும் ஆகும் உச்சம் ஆக்ஷி கேந்திரம் கோணம் இவற்றிலிருந்தால் மேன்மையான நற்பலனே விளையும். 170

பரிந்திடும்புதனிற்கேது பதினொருமாதம்பின்னும்
வருந்துநாண்மூவொன்பானு மாதலந்தனைவிட்டேகும்
பொருந்திடும்வியாதிபீடை பொருட்சேதமுற்றார்கேடு
மருந்திடுகுணத்தாற்றுன்ப மனமதுகிலேசந்தானே.

இ-ள். யாவரும் பரிந்து கொண்டாடத்தக்க புதமகாதிசையில் கேதுண்ணும் மாதங்கள்-11, நாள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பெருமைபெற்ற தன் சுயக்ஷேத் திரத்தைவிட்டு, அந்நிய க்ஷேத்திரம் போய் சேர்தலும், எந்நாளும் நீங்காத வியாதியும், தரித்திரமும், தனவிரயங்களும், தன் தாய் தந்தையர் உறவினர் முதலியோருக்கு அரிட்டமும், துன்பமும், விஷத்தைப் புசித்தவர்போன்று கஷ்டப்படுதலும் மனச் சஞ்சலமும் உண்டாகுமெனவும் கூறுவாயாக.

வி-ரை. கேது ஜெனனகாலங்களில் சுபகிரகங்களோடாவது அல்லது லக்கினதியுடனுவது கூடி சுபகிரகங்களால் பார்க்கப்பட்டால் அற்ப சவுக்கியமும், சொற்ப லாபமும், நாற்கால் ஜீவ லாபமும், மேற்குதிசைப் பிரயாணமும், இராஜாக்கள்பேட்டியும் உண்டு. சர ராசிகளில் இருந்தால் இன்னும் மேலான சவுக்கியமும் விளையும். 171

வாசமாம்புதனில்வெள்ளி மாதமுப்பதுமோன்கு
நேசமாமக்கட்பேறு நேரிழையுடனேயின்பம்
பாசமாஞ்சுற்றம்வித்தை பலவணிமற்றுமுண்டாம்
தேசமேபோனூர்மீள்வர் சேயிழைமணமுமாமே.

இ-ள். புதன்மகர்திசையில் வெள்ளியாகிய சுக்கிரன் வாசம் செய்யும் காலமான வருஷம்-2, மாதம்-10 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்கள் என்னவெனில் சிநேகிதம், புத்திர உற்பவம், தன் களத்திரத்துடன் சந்தோஷத்தோ டிருத்தலும், உறவினர்கள் மீது மிகுந்த ஆசையும், வித்தையில் முயற்சியும், அநேக பூஷணங்களும், இன்னும் பல செல்வங்களும் உண்டாகும் தூரத்திலுள்ள தேசப்பிரயாணம் செய்திருந்தவர் வீடுவந்து சேர்தலும், தன் வீட்டில் பெண்ணால் கலியாணங்களும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் ஜெனன காலங்களில் கன்னி- விருச்சிகம் - சிங்கம் - மேடம்-தனுசு இவ்விடங்களிலிருந்தால் அவன் புத்தியில் தலைவலி, காய்ச்சல், களத்திரதுவேஷம், வடக்குதிசைப் போக எத்தனம், நாற்கால் ஜீவநாசம், பாவக்கோட்களுடன் கூடியிருந்தால் அற்ப சவுக்கிய முண்டாகுமென்றும் கூறுவர். 172

நேருற்றபுதனிற்பானு நீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ் செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனையாள்பீடை பகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளே மன்னராற்றுன்பமாமே.

இ-ள். நற்பலனை விளக்கும் புதமகாதிசையில் புத்திநாதனாக வரும் சூரியன் உண்ணும்மாதம்-10, நாள் 6-ஆகும். அக்காலம் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து நெருப்பினால், ஆபத்தும், மனதில் சந்தேகங்களும், தன் உயிர்க்கிணையாகியகளத்திரத்திற்குப் பலகஷ்டங்களும்,வியாதியும் விரோதம் உண்டாதலும்,கொடியபலன்கள் உண்டாவதோடு அழகு பொருந்திய பெண்ணே! இராஜாக்கள் மூலமான கஷ்டங்களும் உண்டாகுமென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சூரியன் ஜெனன காலங்களில் லக்கினாதிபதியால் பார்வையுற்று இருப்பானாகில் சவுக்கியமும், தனலாபமும், மத்தியிலும் அந்தியிலும் நற்பலனை விளையும். சனி-குஜன்-இராகு இவர்களுடன் சேரினும் பார்க்கினும் மனவியாதியும், தேகபீடையும், சுயஜென விரோதங்களும் உண்டாவதோடு அநேக துற்பலனும் விளையுமென்றும் கூறுவர். 173

வாரணப்புதனிற்சோமன் மாதமேபதினேழுக்கும்
பூரணமானசோகை கண்டபின்புறங்கால்வீங்கும்
காரணக்கலகம்பெண்ணாற் கனபீடைசிலுகுமுண்டு
தாரணிதன்னின்மாந்தர் தமக்கெல்லாம்பகையதாமே.

இ-ள். யானைக்கோப்பாகிய புதமகாதிசையில் புக்தினாதனாக வரும் சந்திரன் உண்ணும் வருஷம்-1, மாதம்-5 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சொல்லுமிடத்து தன புத்தி சபலப் படத்தக்க ஆயாசம் உண்டாவதுடன் காலின் பின்பக்கம் வீக்கத்தைக் கொடுக்கும். ஸ்திரீகள் மூலமான கோள் உண்டாகும். கொடிய தரித்திரமும் ஓர் நாளுக்கோர் விதமான பலனைக் காட்டும். இப்பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் விரோதமுடையவனாகவே இருப்பானென்றுங் கூறுவர் எ-று.

வி-ரை. சந்திரன் புதன் சுக்கிரன் பூர்வைபெற்று கேந்திர திரிகோணங்களிலிருப்பானாகில் தென்திசைப் பிரயாணமும், கலியாண சம்பிரமங்களும், நீச்சம் சத்துரு க்ஷேத்திரம் பெற்றிருப்பானாகில் தனநாசம், கட்டடவிரயம், மனஸ்தாபம், காரிய விக்கினம், பந்துஜன துவேஷம், இராஜாக்களால் துவேஷம் அபஜெயம் முதலிய துற்பலனே விளையுமென்றும் கூறுவர். 174

பன்னியபுதனிற்செவ்வாய் பதினொன்றுநாள்மூவொன்பான்
தன்னிலேபித்தரோகங் காமாலைதலைநோக்காடு
அன்னியர்பகைவிரோத மாயுதத்தாலேபீடை
முன்னொருபகையுமுண்டு முடியவேகலகந்தானே.

இ-ள். நற்கோட்களி லொருவரான புதமகாதிசையில் புக்திநாதனாக வரும் குஜனுண்ணும் காலமான மாதம்-11, நாள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பித்த வியாதியும், சிரபாதை முதலிய காமாலை யுண்டாதலும், தன் பந்து வல்லாத ஜனங்களால் சத்ருத்துவமும், கருவிகளால் கஷ்டங்களும், இப்புத்திக்கு முன்னாலேயே தனக்குச் சத்துருக்கள் உண்டாவரென்றும், அந்தியவரையில் உண்டாகிக்கொண்டே இருக்குமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குஜன் லக்கினாதிபதியாயும் கேந்திரம் திரிகோணம் இவ்விராசிகளிலும் ஆக்ஷியாக இருந்தாலும் தன் களத்திரத்தால் சந்தோஷமும் ராஜ்யலாபங்களும் செய்தொழில் மூலமான லாபமும் உண்டு. 175

நற்புதன்றனிலேராகு முப்பதுநாள்மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டேகும் நீசரால்விஷத்தாலேயம்
மற்பொருபூசலுண்டா மனத்திடரர்த்தஹானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ் சூட்சமாமன்னனந்தானே.

இ-ள். நற்பலனைத்தரும் புதமகாதிசையில் ராகு உண்ணும் வருடம்-2, மாதம்-6, நாட்கள்-18 அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து இல்லத்தைவிட்டுப் போகுதலும், துடுக்கர் முதலிய நீச்சமனுஷரால் கஷ்டங்களும், விஷஜெந்துவால் பயங்கர

மும், எந்நாளும் நீங்காத சத்ருத்துவ முதலிய விவாதங்களும், தைரிய குறைவும், கெண்டங்களும், சொர்ப்பனம் அதிகமாய்க் காண்குதலும், சிரபாதையும் பித்தத்தினுல் ஆகாரக்குறைவு முதலிய பலனை விளக்கும் எ-று. 176

புந்தியிற்பொன்னன்மாதம் புகழ்பெறவிருபத்தேழும்
வந்தநாளாறுமின்ப மன்னரான்மகிழ்ச்சியாகும்
சிந்தையிற்கிலேசமில்லை சிறுவருஞ்சுற்றமுண்டாம்
பைந்தொடிமணமதாகும் பாக்கியமிகவுண்டாமே.

இ-ள். புதமகாதிசையில் தனுர்மீனத்துக்கு ஆக்ஷிநாதனான குரு உண்ணும் வருடம்-2, மாதம்-3, நாட்கள்-6 அக்காலம் அவன் தரும்பலன்கள் என்னவெனில், சந்தோஷங்களும், மன்னரால் மகிழ்ச்சியும் மனச்சந்தோஷமும், குழந்தைகளுண்டாதலும், உற வினர்களுண்டாதலும், பெண்களைக் கலியாணம் செய்வதும் அனேக பொருள்கள் வந்து சேருமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு உச்சம் ஆக்ஷியாக இருப்பானே யானுல் சவுக்கியம், கலியாணம், பால் அன்னம் புசித்தல் முதலிய நற்பலனும் நீச்சம் பகையாலும் 6-8-12லும் இருப்பானேயானுல் சண்டை பிதுரு துவேஷம் ராஜகோபமும் உண்டு. 177

நன்றிசேர்புதனிற்காரி நாலெட்டுமதினாளொன்பான்
இன்றிடுநன்மைநாளு மெதிர்த்திடும்பகையுமுண்டாம்
சென்றிடும்வலக்கால்நோயாந் திசையுத்திராடந்துன்பம்
மன்றிடுமுற்றூர்கேடு மனமதிற்கிலேசமாமே.

இ-ள். நற்பலனையே தரும் புதமகாதிசையில் சனியுண்ணும் வருஷம்-2, மாதம்-8, நாள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சொல்லுமிடத்து தன்னை எதிர்க்கும் சத்துருக்கள் பலர் உண்டாவதோடு வலதுகாலில் பாதையுண்டாதலும், உத்திராடத் திசையென்னும் மேற்கு திக்கில் கஷ்டங்களும் தன்னைப் பெற்றோர் முதலிய உறவினர்களுக்குத் துன்பமும், சந்தேகமுடைய மனத்தனு மாக இருப்பானென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் ஆக்ஷி உச்ச மாகவும், 3-10-6-இவ்விடங்களிலு மிருக்கில் முன்சொன்ன துற் பலனைத் தராது. இராஜ்ய லாபம் சுகம் இவைகளுண்டாகுமென்றும் கூறுவர். 178

கேதுதிசையில் கிரகபுத்திபலன்

ஈண்டியகேதிற்கேது நாலுநாளிருபத்தேழும்
வேண்டியமனையாண்மக்கட் சகோதரவெறுப்புண்டாகும்
பூண்டிடும்விலங்குகாலில் புரட்டாசியுள்ளதோறும்
ஆண்டதுவருஷத்தார்க்குத் திசையதுவவதிதானே.

இ-ள். கேதுமகாதிசையில் தன்சுயபுக்தியான மாதங்கள்-4, நாள்-27 அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தன் இஷ்டகளத்திரத்தின்மீதும், உடன்பிறந்தார் மீதும், புத்திரர்களின் மீதும், விரக்திபை உண்டாக்கும். ராஜாக்களால் கரங்களில் விலங்கிடுதலும், புரட்டாசி மாதங்களுக்குள்ளேயே ஜெனிக்கும் மைந்தர்களுக்கு அந்த திசையில் கொடிய பலனும் பற்பல துன்பங்களும் உண்டாகும் என்றும் கூறுவாயாக.

வி-ரை. மேற்சொன்ன கேது ஒன்பதுக் குடையோனுடன் கூடினாலும் லக்னாதிபதியுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் சுபகிரகங்களின் பார்வையும் பெற்றால் நதி தீர்த்தம், விவசாயலாபம், தானதருமம், லாபம் முதலிய நற்பலனை விளையுமென்றும் கூறுக. 179

பூரியகேதில்வெள்ளி புத்தியீரேழுமாதம்
பாரியமக்கட்பேறு பலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடும் கடைசியிற்பீடையுண்டு
வீரியமனையாள்நோயா மீளவுமகன்றுபோமே.

இ-ள். கேதுமகாதிசையில் புக்தி நாதனாக வரும் சுக்கிரனுண்ணும் வருடம்-1, மாதம்-2, ஆகும். அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தன் களத்திர விருத்தியும், புத்திர உற்பவமும், பால்பாக்கிய விருத்தியும் தரும், வாகன முதலிய பசுங்கன்று விருத்தியும், தான் தொடுத்த வேலைகள் யாதொரு விக்கினமின்றி கைக்கூடுதலும், இப்புத்தியின் அந்தியில் பல கஷ்டங்களும், அன்புடைய களத்திரத்திற்கு கொடிய ரோகங்களும் உண்டாகி மறுபடியும் நிவர்த்தியாகும்.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் பாக்கியாதி என்னும் 9-ஆம் வீட்டோனுடன் கூடி இருப்பாரானால் சம்பத்தும் நீச்சம் அஸ்தமயம் பெற்றிருந்தால் பல ராஜவிரோதமும், தானியநாசமும், சர்ப்பம் முதலியவைகளால் பயமும், இடி வீழ்தலும் உண்டாகும் என்பதாம்.

அந்தமாங்கேதிற்பானும் நாற்றிங்களாறுநாளும்
சிந்திடும் பூமிவிட்டுத் தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ் சுரந்தலைநோயுண்டாகும்
மந்தரமுலையினாளே மனமதிற்கிலேசந்தானே.

இ-ள். அழகு பொருந்திய கேது மகாதிசையில் புத்திநாதனால் வரும் சூரியனுண்ணும் மாதம்-4, நாள்-6 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்கள் என்னவெனில், தன் கையிலுள்ளவைகள் யாவும் இழந்து தன் சுயக்ஷேத்திரத்தைப் பிரிந்து அன்னிய தேசங்களுக்குப் போய் மறுபடியும் தன் சுயக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்தலும், அழகுடைய தன் சரீரம் முழுவதிலும் வியாதி என்னும் ஜுரம், சிரபாதை முதலியவைகளால் பீடிக்கப்படும் எனவும் அழகு வாய்ந்த பெண்ணே! இப்பலன் உண்டாகும் என்றும் கூறுக எ-று.

வி-ரை. புக்திநாதனுகிய சூரியன் ஜெனனகாலங்களில் உச்சம் அல்லது ஆக்ஷியாயும், சுபர்களுடன் கூடினுலும் அல்லது பார்த்தாலும் அவனுக்கு ராஜசன்மானங்களும் நூதனகிரக கட்டடம் உண்டாகுமென்றும் 6-8-12-கேந்திரதிரிகோணம் இவைகளிலிருந்தாலும் நீச்சம் பெற்றாலும் தலைநோய் ஜுரம் களத்திர புத்திர பீடை மாதுருநாசம் மனவியாகூலம் இவைகள் உண்டாகும் என்றும் சொல்லுக. 181

சாதககேதிலிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குசண்டை மைந்தர்க்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலி பொன்னுமாபரணமுண்டாம்
சீதளமுகத்தினுளே தீங்குவந்தகன்றுபோமே.

இ-ள். வல்லமையையுடைய கேதுமகாதிசையில் புக்திநாதனுக வரும் சந்திரனுண்ணும் மாதங்கள்-7 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலன்களைச் சோதிக்குமிடத்து ஸ்திரீகள் மூலமான விவகாரங்களும் தன் புத்திரர்களுக்கு வியாதி துற்பலனும், பசு முதலிய வாகன விருத்தியும், பொன்பூஷண சேர்க்கையும் உண்டாகும். குளிர்ந்த முகத்தையுடையவளே! பல கஷ்டங்கள் உண்டாயினும் நிவர்த்தியாகும் என்றறிக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் ஜெனன லக்கினத்திற்கு 6-8-12-இவ்விராசிகளில் நின்றுணுகில் கலகங்களும், தானிய நஷ்டமும், பூஷண நஷ்டமும், பலவித தீங்கும் உண்டாகுமென்றும் கூறுவர். 182

கடையரவதனிற்செவ்வாய் கலந்திடுமாதம்நாலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தஹானி
படையுறுவழக்குச்சண்டை பலபலவிரோதமாகுந்
தடையுறும்பெண்ணுற்கேடு தழல்பயமிகவுண்டாமே.

இ-ள். கருநாகமென்று சொல்லும் கேதுமகாதிசையில் குஜன் உண்ணும் மாதம்-4, நாள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களை சோதிக்குமிடத்து பல கொடிய கஷ்டங்களும், மனபீதியும், அற்ப சவுக்கியமும், பொருள் விரயமும், விவாதங்களும், சண்டை முதலியவைகள் உண்டாகும். பலவிதமான சத்துருத்துவங்களாலும், ஸ்திரீஜனங்களால் தடை யுண்டாதலும், அபமிருத்துவும், நெருப்பால் பெருத்த ஆபத்தும் உண்டாகும் எ-று.

வி-ரை. குஜபகவான் ஜெனன காலங்களில் சுபாங்கிசம் பெற்றும் உச்ச சொக்ஷேத்திரங்களாகவு மிருந்தால் அவன் விவசாய லாபமும், தன லாபங்களும், சவுக்கியமும், அந்திய காலங்களில் அகால போஜனமும், களத்திர ஈனம் உண்டுபண்ணும் என்றறிக. 183

கேதுவிலிராகுபுத்தி கேள்பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பானாளும் விஷபயம்வந்துதீரும்
மாதர்கடமக்குப்பீடை மன்னவனுசமாவான்
போதவேயர்த்தநாசம் புகழ்நிலேநின்றிடாதே.

இ-ள். கேதுமகாதிசையில் தன்னைப்போன்ற செம்பாம்பென்னும் இராகு உண்ணும் வருடம்-1, நாள்-18 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனென்னவெனில் பயங்கரமும், விஷந்தீண்டுதலும், தன் குடும்ப ஸ்திரீகளுக்குப் புலகஷ்டமும், ஜாட்டியங்களும், மன்னவனென்னும் தன் பிதா இறந்துபோதலும், எந்நாளும் நீங்காத அர்த்த நாசமும், தன் மானபிமானமும் இழந்துபோவானென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன இராகு ஜெனனகாலங்களில் சுபாங்கிசமும் சுபர்கள் பார்வையும் பெற்றிருப்பாராகில் மிலேச்ச ராஜாக்களால் லாபமும், சுயகிராமத்திலேயே பற்பல நன்மையும் 6-8-12 என்னுமிடங்களி லிருப்பாரேயானுல் திரேகத்தில் வடுவுண்டாகுதலும், இஷ்டஜனநாசம் சிரபாதை குளிர்காய்ச்சல் இவைகள் உண்டாகுமென்றும் கூறுவர். 184

பருவுளகேதுவுக்குள் பாங்குள்ளமன்னன்புத்தி
ஒருபதினென்றுநாட்க ளோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனேயாள்சேர்வள் செல்வமுமிகுதியாமே.

இ-ள். உத்தமபலனே விளக்கும் கேதுமகாதிசையில் உத்தம கிரகங்களிலொன்றான குரு உண்ணும் காலமான மாதம்-11, நாள்-6 ஆகும். அக்காலம் அவன் தரும்பலன்களேச் சொல்லுமிடத்து சமரச வருமானமும், அன்புடைய இராஜாக்களே வந்தடைதலும், விஷ ஜெந்துவால் தீங்குண்டாதலும், அழகுடைய களத்திர சேர்க்கையும், தனசம்பத்து உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு, கேந்திர திரிகோணங்களில் இருப்பாரேயானுல் இராஜாக்களால் வருமானமும், வஸ்திராபரணமும், தண்டிகையும், குதிரை யானேயும் நற்பேரும் உண்டாகும் என்றும் 6-8-12-ல் இருப்பாராகில் ஆதியில் கஷ்டமும், பாவிகள் பார்த்தால் மித்துரு குரோதமும், நேத்திர வியாதியும், சோராக்கினி முதலிய துற்கருமங்களும் உண்டாம். 185

சதியுறுகேதுவுக்குட் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானும் பலபொருட்சேதமாகும்
அதிதலம்பேதமாகும் அங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடை மனமதுகிலேசமாமே.

இ-ள். சதியை விளக்கும் கேதுபகவான் திசையில் உண்ண வரும் சனிக்குரிய வருடம்-1, மாதம்-1, நாள்-9 ஆகும். அக்காலங் களில் அவன் தரும் பலன்களாவன. பற்பல திரவியங்களும் தன் கைவிட்டுப்போகும். தன் சுயக்ஷேத்திரத்தை விட்டு அந்நிய க்ஷேத் திரம்போய் சேர்வன். தன் உடலில் அடையாளங்களை உண்டு பண்ணும் சொறி சிரங்குண்டாகும். தன் குடும்ப ஸ்திரீக்கு பல கஷ்டங்களும் தான் எந்த காரியங்களிலும் சந்தேகமுள்ளவனாகவே இருப்பான் என சந்திரனைப் பழிக்கும் முகவிலாசத்தையுடைய பெண்ணே! இவ்விதம் சொல்லுவாயாக. எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் மூலத் திரிகோணத்திலும் உச்ச சொக்ஷேத்திரங்களிலு மிருப்பானாகில் சனிவாரங்களில் ஆபரண வருத்தும், லாபங்களும் உண்டாகுமென் றும் கூறுவர்.

186

குலமுளகேதிற்புந்தி குறித்திடும்புத்திமாதம்
நலமுறுபத்துமொன்று நாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந் தமரினாற்பயமுண்டாகும்
நிலைமையாய்புத்ரசோபம் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். நீச்சகுலத்தோனென்னும் கேதுமகாதிசையில் உண்ண வரும் புதனுக்குரிய மாதம்-11, நாள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லவெனில் தன் க்ஷேத்திரத்தைவிட்டு மாறுதலும், தன் சுயபந்துக்களென்னும் உறவினரால் ஆபத்தும், எந்நாளும் நீங்காத மக்கள் வியாகூலமும் உண்டாகும். தான் மனத்தில் உத்தேசித்த காரியம் அபஜெயமும் உண்டென கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதன் கேந்திரகோணம் உச்சம் ஆக்ஷியாக இருக்கில் ராஜாக்களால் நல்ல மேம்பாடான பலனும், புத்திர சவுக்கியமும், புராணகாவியக் கேள்வியும், தருமசிந்தையும், வாகனாதியுடன்கூடி இருக்கில் நூதன கிரகமும் இஷ்டஜென விஸ்வாச முதலிய சுபபலனும் நடக்கும் என்றறிக.

187

சுக்கிர திசையில் கிரகபுத்தி

வன்மையாம்புகரில்வெள்ளி மாதங்கள்நாற்பதுக்கும்
உண்மையாம்பணிகள்முத்து உயர்குடைபுரவியானை
தண்மையாம்புன்மைநீங்கி நாளிலேதனமுஞ்சேரும்
எண்மையங்கிசத்திற்றுக்க மெய்துமைப்பசியிற்றுனே.

இ-ள். நற்பலனையே தரும் சுக்கிரமகாதிசையில் தன் சுயபுத்தியான வருடம்-3, மாதம்-4 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து கட்டாயமாய் நல்ல நகைகளையும்,

முத்து பவழமென்று சொல்லும் பிரகாசமான பொருள்கள் உண்டாவ தோடு குதிரை யானை முதலியனவைகளும், பூச்சக்கிரக்குடைகளும், தன் துற்பலன்யாவும் நீங்கி நற்பலன் தருவதோடு நாளுக்குநாள் நல்ல மேலான பொருள்களைச் சேர்க்குதலும், ஆட்டுருவையுடைய மேஷராசிநாதன் என்னும் குஜன் அங்கிசம் பெற்றிருப்பானாகில் அவன் துக்கசாகரங்களை அனுபவிப்பானென்றும், அவை உண்டா கும் காலம் ஐப்பசிமாதத்திலென்றும் தெரிந்து கொள்வாயாக எ-று.

வி-ரை. அநேகருக்குச் சுக்கிரதிசை என்றால் வெகு பிரமாத மான திசை என்றும், அதைவிட யோகத்தைத்தரும் திசை வேறில்லை என்றும் அனேகர் கூறுவதுண்டு. சோதிடம் கல்லாதாரும் கூட சுக்கிரதிசை நடக்கிறதென்றால் உனக்கென்ன குறைவு என்று பதிலளிப்பார். சுக்கிரனது பண்டையபுராணக் கதையில் மகாவிஷ்ணு வானவர் மாபலியிடம்சென்று மூன்றடிமண் தானம் கேட்டபோது மாபலி தாரைவார்க்கையில் சுக்கிரன் ஓர் வண்டுருவாய் நீர்துவா ரத்தை யடைக்க, மகாவிஷ்ணு இது தெரிந்து ஓர் குச்சியால் குத்த அதனால் அவ்ஷி சுக்கிரனுக்கு ஓர்கண் பழுதென்பது பாகவதபுராணங் கள் கூறும். சுக்கிரனுக்கு நேர் சத்ரு சூரியனும் சந்திரனும் ஆவார்க ளென முன்கூறிய 27-ஆம் செய்யுளால் அறியலாம். அவ்வாறு பகை கிரகங்களுடனும், பகை க்ஷேத்திரங்களிலும் கொடியவர்களால் பார்க் கப்பட்டு மிருந்தால் மேற்படி சுக்கிரன் எவ்வித பலனைத்தருவானென் பதை சோதிடர்கள் நன்கு அறிந்து பலன் சொல்வது நலம். இதனா லேயே சோதிட ஆசிரியருள் ஒருவரான நடராஜ தம்பிரானும்,

உச்ச மித்ர சொக்ஷேத்திரத்திற் பலவானும்
இச்சுவை சுங்கனர் திசைவந்தேய்திடு-கச்சமற
வாழ்வுடைய மாடாடு வாகனமுண்டா நீசம்
தாழ்வுவரும் வெள்ளி திசைத்தான்.

என்று கூறியுளார். சுக்கிரன் உச்சனாகவும் ஆக்ஷியாகவும் பலம் பெற்றிருந்தால் நல்ல வாழ்வும், நாற்கால் சுகமும் உண்டு. நீச்சனாகி இருந்தாலோ தாழ்வையே உண்டுபண்ணு மென்றபடி சுக்கிரனிருக் கும் தராதரமறிந்து கூறல் வேண்டும். 188

சிறந்திடும்புகரிற்பானு திங்களீராறுந்துன்பம்
குறைந்திடுந்தனமும்நாளிற் கொடும்பகைஅரசராலே
பறந்திடுமனையாண்மக்கள் பலருடன்வழக்காமெண்க
உறைந்திடுதெய்வமுள்ளூ முறவதுபகையதாமே.

இ-ள். சிறப்புற்றோங்கிய சுக்கிரன் மகாதிசையில் சூரியன் உண் ணும் வருடம்-1 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சொல்லுமிடத்து கஷ்டங்களும் நாளுக்கு நாள் தன் செல்வம் யாவும் குறைந்துபோகும். கொடிய விரோதங்கள் மன்னரால் உண்டாதலும்,

தன் களத்திர புத்திரர்களை விட்டுப் பிரிதலும், பற்பலரோடு வழக்கு, தெய்வங்களால் சீற்றம், தன் பந்துஜெனங்களும் சத்துருவாகவே இருப்பார் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சூரியன் உச்சம் ஆக்ஷிபெற்று, சுபனுடன் கூடியிருந்தால் திரேகசவுக்கியமும், வீட்டில் கலியாண சம்பிரமும், இராஜ அபிமானமுண்டு. திரிகோணம் கேந்திரம் இவ்விடங்களிலிருந்தால் பிதுர்பாக்யமும், பிதுர்கிலேசமும், தாயாதி ஜெனப்பகை இவைகள் உண்டாகும். 189

மருவியபுகரிற்சோமன் மாதமோரிருபதுக்கும்
கருதியகருமநாளில் வந்துகைகூடுமென்க
அருகுறுமனையாளாலே அடர்பகைவந்துதீரும்
சருவியவின்பமாதர் தம்மொடுமிணக்கமாமே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் புக்திநாதனுக வரும் சந்திரன் உண்ணும் வருடம்-1, மாதம்-8 ஆகும். அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து, தான் நினைத்தகாரியம் ஜெயமடைதலும் தன் உயிர்க்கிணையான மனைவியால் கொடியபகை வந்து சேர்தலும், இன்பமாதர் என்று சொல்லும் நற்சொற்களைக் கூறும் ஸ்திரீகளுக்குக் கட்டுபட்டு அவர்கள் சொல்லின்படி நடக்கவும் செய்யும் என்றறிக.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் ஜெனனகாலங்களில் நீச்சம் பெற்று இருந்தாலும் அஸ்தமயமடைந்த கிரகங்களுடன் கூடி இருந்தாலும் மேற்சொன்ன நற்பலனைத் தவிர்த்து தனநஷ்டமும், அன்னிய கிராமவாசமும், மனநோய் வடக்குதிசைப் பிரயாணம் முதலிய பலனையே விளைக்கும். 190

புண்ணியபுகரிற்செவ்வாய் புகழ்திங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டாம் நாறியாற்கருமநாசம்
எண்ணியதேவர்சேவை யிருவராற்பகையுண்டென்னும்
கண்ணினோய்மெய்யிற்குட்டங் கண்டதுதீருந்தானே.

இ-ள். புண்ணியபலனையுடைய சுக்கிரமகாதிசையில் குஜன் உண்ணும் வருடம்-1, மாதம்-2 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தான் நினைத்த பூமிவந்து சேர்தலும், தான் நினைத்த காரியம் ஸ்திரீகளால் அபஜெயப்படுதலும், தான் எண்ணிய கடவுளைக் கும்பிடுதலும், சத்துருத்துவம் இருவரால் உண்டாதலும், விழிகளுக்கு பாதையும், உடலில் குஷ்டம் காணுதலும், பிறகு நிவர்த்தியாகுதல் முதலிய பலனுண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குஜன் ஜெனனகாலங்களில் 9-ஆம் வீட்டோனுடனும் மற்றும் சுபகிரகங்களுடனும் கூடி இருக்கில் லக்ஷிமிகடாக்ஷம், தான் நினைத்த பூமியை வாங்குதலும், அனேக பொருள் சேர்தலும்,

ஆடையாபரணமும். 6-8-12-இவ்விடங்களி லிருந்தால் இராஜகோபம், சண்டை, அபஜெயம் இவைகளுண்டாகும் என்க. 191

திருந்தியபுகரில்ராகு திங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போல பூமியிற்றபசுசெய்வன்
வருந்தியமைந்தராலே வருங்கலகங்கள்மெத்த
அருந்தியமருந்தினாலே விஷமதாயலைவன்றானே.

இ-ள். நற்கோட்களிலொருவரான சுக்கிரன் மகாதிசையில் இராகு உண்ணும் வருடம் 3-லும் அவன் தரும்பலனைச் சொல்லுமிடத்து வதிஷ்டர், விஸ்வாமித்திரர், ரோமரிஷி என்னும் ரிஷிகளைப் போல் இப்பூமியில் தவம் செய்தலும், தான் வருத்தப் படும்படியான கோள் தன் புத்திரர்களாலேயே உண்டாதலும், தான் புசித்த ஔஷதமே விஷமாகி இப்பூமியில் அலைந்து திரிந்துக்கொண்டு மிருப்பான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. இராகு 11-5-9-இவ்விடங்களிலும், உச்ச க்ஷேத்திரங்களிலும் 6-3-10 இவ்விடங்களிலு மிருந்தால் சத்துருநாசமும், சந்தோஷம், இராஜ சன்மானம், புத்தி முதலில் ஜுரநோய் மனஸ்தாபம், மத்தியிலும் கடைசியிலும் பொன் முத்துச்சிவிகை இவை லாபமும் நிருதிதிசை சென்று உத்தியோகம் செய்வானென்றும் கூறுவர். 192

முன்புறுபுகரின்மன்னன் முப்பத்திரண்டுமாதம்
இன்புறுதானியங்க ளெய்துமேயர்த்தலாபம்
அன்புறுமறையோராலே யதிசயமிகவுமுண்டாம்
மன்புகழ்தோணிவிட்டத் திசையினில்வருத்தமாமே.

இ-ள். முன்சொல்லிய சுக்கிரமகாதிசையில் குரு உண்ணும் வருடம்-2, மாதம்-8 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்களும், நவதானியங்கள் சேர்தலும், தன் வருமானம் அற்பமும், பிராமணர்களால் சந்தோஷம் உண்டாதலும், இராஜாக்களால் கொண்டாடும் கடற்பிரயாணம் செய்யும் தோணி என்னும் கருவி வந்தடைதலும், அவிட்டத்தின் திக்கான மேற்கு திசையில் சுலப சஞ்சலமும் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குரு 6-8-12-ல் இருந்தால் மேற்சொன்ன நற்பலனைத் தரான் திருடராலும் அக்கினியாலும் பயமும், சண்டை முதலிய மனவியாகூலமும், இல்லம் கைவிட்டுப் போதலும், இராஜ விரோதமும், குரு 2-7-க்கு ஆக்ஷி நாதனாக இருந்தால் நீங்காத பீடையும் உண்டு. இவை தீர ஏழைகளுக்கு அன்னதானம் செய்க. 193

சாலவேவெள்ளிதன்னிற் சனிமாதமுப்பத்தெட்டும்
மூலமாம்நோயினாலே முயங்கியேமீளுங்கைகால்
வேலெனும்விழியாய்துன்ப மெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்ன மரோசிகமாகுந்தானே.

இ-ள். போதுமான நற்பலனைத் தரும் சுக்கிரமகாதிசையில் சனி உண்ணும் வருடம்-3, மாதம்-2 ஆகும். இக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து சரீரத்தின் உட்கண்ட வியாதியால் கால் கரங்களுக்கு முடக்கைக் கொடுத்து மறுபடியும் சவுக்கியப் படுத்துதலும், பற்பல கஷ்டங்களும், உடலில் வியாதியும், உணவைக் கண்டால் விஷத்தைப்போன்ற வெறுப்பும் உண்டாகுமென வேலைப் போன்ற விழிகளையுடையவளே! சொல்வாயாக எ-று.

வி-ரை. சுக்கிரன் வீட்டில் சனியும், சனி வீட்டில் சுக்கிரனுமிருக்கில் இராஜ்ஜிய லாபமும் சவுக்கியமும், குலநாசமும், அபகீர்த்தியும் உண்டாகுமென்றும் மேலோர் கூறுவர். 194

வெள்ளியிற்புந்திமாதம் விரும்புமுப்பத்துநான்கும்
தெள்ளியமனையாள்மக்கள் சீருடன்பொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம் வாக்கினுற்பாடலாகும்
நள்ளியசிவப்பனாலே நன்மைகள்பலவுண்டாமே.

இ-ள். சுக்கிரன் மகாதிசையில் புக்திநாதனாக உண்ணவரும் புதனுக்கு உரிய வருஷம்-2 மாதம்-10 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து நல்ல களத்திரமும், அழகுடைய புத்திரரும் விருத்தியடைவதோடு தனமும், விருத்தியாகும் தெள்ளிய வித்தியா அப்பியாசமும், நல்ல கீர்த்தனைகளைத் தன் வாக்கினால் பாடுதலும், சிவப்பு நிறமுடைய மனிதனால் பற்பல உபகாரங்களும், க்ஷேமமும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதன் 1-4-7-10-என்னு மிடங்களிலாவது 5-9-என்னுமிடத்திலாவது இருந்தால் இராஜ பேட்டியும், நல்ல போஜனமும் உண்டாகும். 6-8-12-ஆம் இராசிகளிலிருந்தால் மனவியாகூலமும், முற்பாதியில் சவுக்கியமும், பிற்பாதியில் கஷ்டங்களும் உண்டாகுமெனக் கூறுவாய். 195

இட்டமாம்வெள்ளிதன்னிற் கேதுவீரேழுமாதம்
துட்டமாமிருகத்தாலே துன்பமுமிகவுண்டாகும்
அட்டமாமனையாள்தன்னி னனுபோகத்தாலேநோயாம்
திட்டமாய்விஷந்தான்வீட்டிற் றீண்டியேமீளுந்தானே.

இ-ள். யாவரும் கோரப்பட்ட சுக்கிரமகாதிசையில் புக்திநாதனாகவரும் கேது உண்ணும் வருஷம்-1, மாதம்-2 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களாவன. துஷ்ட குணமுடைய மிருகங்களால் பல கஷ்டங்களுண்டாகும். களத்திர விரோதமும், மனையாள் சேர்க்கையால் பிணி பீடைகளும், தன் வீட்டிலேயே விஷம் தீண்டி கஷ்டமுண்டாகி நிவர்த்தியாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. கேதுபகவான் ஜெனனகாலங்களில் 1-5-4-9-7-10-இவ் விடங்களிலிருந்தால் தேவாலய தரிசனமும், மன்னர்பேட்டி, சத்துரு ஜெயம், தனதானியலாபம் உண்டாகுமென்றும் கூறுவர். 196

பொது.

புத்தியின்பலன்கடம்மைப் பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்கோள்கள்நின்ற திரிகோணங்கேந்திரமுச்சம்
தத்தியவியமாறெட்டுப் பகைநீசந்தான்சேரம்சம்
ஒத்தநல்லாதிபத்தியம் வர்க்கமோடவஸ்தைவக்ரம்.

இ-ள். இதுவரையில் பலன் சொல்லியது ஒவ்வொரு புக்திக்கும் பொதுவாகையால், ஒவ்வொருவர் ஜாதக கிரமப்படி கோட்கள் நின்ற விபரமறிந்து 1-5-9-ஆம் இடங்களைத் திரிகோணமென்றும் 1-4-7-10-ஆம் இடம் கேந்திரமென்றும், ஒவ்வொரு கிரகங்களிலிருக்கும் பலமுடைய ஸ்தானங்களான உச்சத்தையும் ரோகம் அஷ்டமம் விரயமென்னும் 12-8-6-இவ்விடங்களும் நீச்சம் முதலிய விவரங்களையறிந்தும், ஒவ்வொருவருக்கும் உரிய ஆகூஷி அம்சம் பலம் வர்க்கம் நக்ஷத்திர பாதசாரப்படி உண்டாகும் வக்ரம் கொடிய க்ஷேத்திரங்களால் பீடித்தல் முதலியவைகளறிந்தும் எ-று. 197

இதுவுமது

பாவத்திற்கண்டயோக மவயோகந்தன்னைப்பார்த்தும்
பூவருமானேநல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவறுசித்ரமுட்சித் திரத்திற்குப்புத்திபோல
ஓவறப்பலன்கள்சொல்வ ருயர்மதிவல்லோர்தாமே.

இ-ள். ஒவ்வோரிடங்களுக்கும் உள்ள நல்ல யோகம் கொடிய யோகமென்னும் தரித்திரம் இவைகளை யறிந்தும், திசாபுக்திகளுக்குப் பலாபலன்சொல்லவேண்டும். (மேலும் போதகன் வேதகன் பாசகன் காரகன் என்னும் செய்யுளின்படியும்) சித்திரம் உள் சித்திரம் இவைகளை யறிந்தும், புக்திபலன் சொல்லவேண்டிய முறையாக ஆராய்ந்து நிர்ணயமாய்ப் பலன்சொல்லவேண்டுமென அழகுவாய்ந்த பெண்ணே! சோதிட வல்லோர்கள் கூறுவார் எ-று.

வி-ரை. சோதிடர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் என்னவெனில் நமது நூலாசிரியர் புக்தி ஒன்றுக்கு ஒவ்வொரு செய்யுளாக பொதுவாய்க் கூறியுள்ளார். யானும் அதைக் கைக்கொண்டு உரை எழுதியதோடு சோதிடநூலாசிரியருள் ஒருவரான பராசர் என்பவரால் இயற்றப்பட்ட நூலினின்று ஒவ்வொரு ஸ்தானங்களுக்கும் தக்கபடி ஸ்தானபலன் எழுதியுள்ளேன். திசாபுக்தி பலனென்றால் குமாரமுதல் எவ்வன பருவம் வரையில் உள்ள நான்கு பருவங்களுக்கும் ஏற்றவாறு பலன் சொல்வதே முறையாகும். ஏனெனில், ஜெனன காலப்போதே சுக்கிர திசையில் புதன்புக்தி வந்ததாக வைத்துக் கொள்வோம். அவன் தரும்பலன் நல்ல களத்திரமும் அழகுடைய புத்திரரும் விருத்தி யடைவதோடு வித்தை அப்பியாசம்,

ஞானமார்க்கங்களும், தன் வாக்கால் நல்ல கீர்த்தனைகளைப் பாடுதலும், சிவப்புநிற மனிதனால் பற்பல உபகாரமும், க்ஷேமமும் உண்டாகு மென 195-ஆம் செய்யுளில் கூறியுள்ளார். பிறந்த சிசுவுக்கு இவ்வித பலனுண்டாகில் அப்பலனை யார் அடைவாரென ஆராய்ந்து கூறுவதே சோதிடர்களின் கடமையாகும். லக்கினத்திற்கு 9-ஆம் வீட்டோன், திசாநாதனுக்கும் புக்திநாதனுக்கும் 6-8-12-ஆம் இடங்களிலாவது, 3-ஆம் இடத்திலாவது மறைந்து நீச்சம்பகை சத்துருசேர்க்கை முதலி யவைகளால் பீடிக்கப்பட்டிருந்தால், அவன் பிதா அனுபவியான். மாதுரு பிதுர்ஸ்தானாதிபர்களும் காரகர்களும் நல்ல க்ஷேத்திரங் களிலும், நற்கோட்களுடனும் கூடினாலேயொழிய பிதுரு மாதுருக் கள் அந்த சுகத்தை அனுபவியார்கள். பிதுரு மாதுருக்கும் அக்குழவி யால் சுகமுண்டு இவ்வாறே நற்பலனையும் துற்பலனையும் கூற வேண்டும். இத்துடன் முக்கியமாய் சோதிடர்களின் கடமை ஒன்று கும். பிறந்த குழந்தை தன் மாதாவை மணம் செய்த புருடனுக்கே பிறந்ததா? என்று உணர்ந்து ஆராய்ந்து திசைபுக்தி பலனையும் மற்றும் யோகங்களையும் சொல்லவேண்டும். அப்படி வேறுவிதமாய் உதித்ததாயின், அப்படிப்பட்ட பிதாவுக்கே இப்பலனைச் சொல்ல வேண்டுவது அவசியமென அறியவேண்டுவது கடமையாகும். இவை அறியவேண்டுமெனில் வருடம், மாதம், தேதி, பக்ஷம், திதி, நக்ஷத் திரம், உதயலக்கினம், கிரக அடவி, கிரகங்கள் நின்ற ஆக்ஷிஉச்சநீச்சம் பகை சமம். கிரகங்கள் நின்ற சத்துரு சமம். உதயம், அஸ்தமனம், கிரகபார்வை, மகாதிசை காலசக்கிரம், உயிராதி கணிதம், உடலாதி கணிதம், சவ்வியம், அபசவ்வியம், அஷ்டகவர்க்கு, இராசி குணாகாரம், கிரககுணாகாரம் ஆககுண சமுகம், பகல், இரவு இவைகளை ஆராய்ந்தே ஜாதக பலன் சொல்லவேண்டும். 198

கோசாரவிவரம்

கோசாரம் என்பது ஜாதகமுள்ளோர்க்கும் ஜாதகமில்லாதார்க் கும் பிரயோஜனப்படுவதாகும். கோசாரத்தைக் கொண்டு அஷ்டக வர்க்கபலன் சொல்வதோடு திசைபுக்தி காலங்களிலும் பலனறிய ஏதுவாகும். ஆதலால் கோசாரம் என்பதையும் ஜோதிடர் கவனித்தே மற்றும் பலன்களை யுரைக்கவேண்டும். கோசாரப்படி ஒவ்வோர் வீட் டிலும் கிரகங்கள் வாசம்செய்யும் காலங்களை சொல்லுமிடத்து,

ராசி 1-க்கு	சூரியன்	1-மாதம்	கோசார பார்வை விபரம்		
,,	சந்திரன்	$2\frac{1}{4}$-நாள்	சூரியனுக்கு	நாள்	5
,,	குஜன்	$1\frac{1}{2}$-மாதம்	சந்திரனுக்கு	நாள்	$\frac{1}{4}$
,,	புதன்	1-மாதம்	குஜனுக்கு	நாள்	8
,,	குரு	1-வருடம்	புதனுக்கு	நாள்	7
,,	சுக்கிரன்	1-மாதம்	குருவுக்கு	மாதம்	2
,,	சனி	$2\frac{1}{2}$-வருடம்	சுக்கிரனுக்கு	நாள்	7

,, ராகுகேது $1\frac{1}{2}$-வருடம்	சனிக்கு	மாதம்	6
	ராகுவுக்கு	மாதம்	3
	கேதுவுக்கு	மாதம்	3

என்றும் கூறுவர் இப்பால் அவர்கள் பலன் தரும் காலம் கூறுவார்.

ஓதியகோசாரந் திசைசக்கரங் கடம்மில்
உதித்த நவக்கிரகத்தா லுண்டாகும்பலன்கள்
ஆதவன்செவ்வா யிருவர்க்காதியிலே பலன்கள்
அம்புலிக்கும் புதனுக்கும் அனுதினமும்பலனே
பீதகன்சுக்கிரன் பலன்கள் மத்தியத்திற்றருவர்
பெருகுசனி பாம்பிரண்டும் பிற்பலனே தருவர்
சூதுமத கரிக்கோட்டைக் கமலமாமுகையைச்
சுந்தரப்பொற் கிரியைவென்ற துணைமுலைமாமயிலே.

இ-ள். தினசரி பஞ்சாங்க கணிதப்படி கோசார சக்கிரம் அறிந்து அதிலிருக்கும் 9-கோட்களும் பலனைத்தரும் காலங்களை சொல்லு மிடத்து குஜனும் சூரியனும் தான் ஓர் இராசியில் வந்தவுடனே பலனைத்தருவார். சந்திரனும் புதனும் எக்காலங்களிலும் பலனைத் தருவார். இராகு கேது சனி இவர்கள் அவரவர்களுக்குரிய வயது கடைசியில் தருவார். சுக்கிரன் குரு இவ்விருவரும் தன் கால அளவின் மத்தியிலும் பலனை தருவாரென அழகிய ஸ்தனங்களும் உச்சித நடையுடைகளையும் உள்ள பெண்ணே! சொல்வாய் எ-று. 199

கோசார வேதை

விருத்தம்

இரவியைந்தின்மதி யெட்டினேழிற்சேய்
பரவுமூன்றிற்பொன் பார்க்கவனாறிலும்
விரவுபுந்திநான் கொன்பானிராகுசூன்
உரவுசென்ம முறிற்கடுங்கேடுறும்.

இ-ள். ஜெனன நக்ஷத்திரத்திற்குத் தக்கபடி கண்ட இராசிக்கு 5-ல் சூரியனிருந்தாலும், சந்திரன் 8-லிருந்தாலும், குஜன் 7-லிருந்தாலும், புதன் 9-லிருந்தாலும், குரு 3-லிருந்தாலும், சுக்கிரன் 6-லிருந்தாலும், சனி ஜென்மத்திலிருந்தாலும், ராகு 9-லிருந்தாலும் துற்பலனையும் அவகேட்டையும் தருவாரெனக் கூறுவர் எ-று. 200

கோசார நற்பலனிடம்

கதிர்பதினொன்றுமூன்று கருதுபத்தாறில்நல்லன்
மதியொன்றுமூன்றோறு மன்னுமேழ்பதுபன்னொன்றும்
பதிபுகழ்சேய்சுன்ராகு பதினொன்றுமூன்றாறுகும்
மதிகமகதற்கிரண்டோராறு மன்னெட்டுபதுபன்னொன்றே.

இ-ள். மேலே சொல்லியபடி நக்ஷத்திரராசிக்கு 3-11-ல் சூரியன் வரும்போது நற்பலனை தருவான். 1-3-6-7-10-11-இவ்விடங்களில் சந்திரன் வாசம் செய்யுங்காலம் நற்பலனை தருவான். இப்பூமியில் புகழ்ந்து பேசும் குஜன்-சனி-இராகு-இவர்கள் 3-6-11 இவ்விடங்களில் வாசகாலம் நற்பலனைத் தருவார். 2-6-8-10-11 இவ்விடங்களில் புதன் வாசம் செய்யுங்காலம் நற்பலனை தருவாரென்றும் கூறுக எ-று. 201

பொன்னவன்பதினொன்றென்பான் பொருந்துமேழைந்திரண்டாம்
துன்னுசுக்கிரற்கொன்றுதி யைந்துமோரெட்டொன்பானும்
பன்னொன்றீராறுதன்னிற் பற்றிடில்நல்லராவர்
அன்னமேவேதைக்கோள்க ளூறிற்றீயராவரென்னே.

இ-ள். 2-5-7-9-11-இவ்விடங்களில் குரு வாசம் செய்யும்போது நற்பலனை தருவாரெனவும் 1-2-3-4-5-8-9-11-12-இவ்விடங்களில் வாசகாலம் நற்பலனையே தருவாரெனவும், அழகுவாய்ந்த பெண்ணே! இவர்களுக்கு தீயராசிகளில் தீயகிரகங்கள் இருந்தால் இந்த ராசியே அவர்களுக்கு துற்பலனைத்தரும் க்ஷேத்திரம் என்று சொல்வாய் எ-று. 202

வேதைஸ்தானம்

சூரியற்குரைத்தவீட்டிற் கேழினிற்கோள்நின்றாலும்
கூரியமதிக்கைந்தொன்பான் குலவுமீராறிரண்டும்
ஏர்பெறுமொருநான்கெட்டு மிராகுசுன்சேய்தமக்குக்
கார்பெறுங்குழலாயைந்தீ ராறென்பாமெனுங்கணக்கும்.

இ-ள். சூரியனுக்கு நற்க்ஷேத்திரமெனச் சொல்லிய இராசிக்கு 7-ஆம் இராசியில் கிரகமிருக்கினும் சந்திரனுக்கு 2-4-8-5-9-12-இவ்விராசிகளில் கிரகமிருந்தாலும், இராகு - சனி - குஜன்- இவர்கள் நற்பலனைத் தருவாரென உரைத்த இராசிக்கு 5 - 9 - 12 - என்னும் இராசிகளிலும் கிரகமிருந்தால் அழகு வாய்ந்த பெண்ணே! அவரவர்களுக்கு வேதைஸ்தானமென்று கூறுவாய் எ-று. 203

புந்திக்கைந்தொன்பானென்றெட் டீராறிற்புனிதப்பொன்னுக்
கந்தமாமெட்டுபத்து மூன்றுநான்கிராறுக்கும்
சந்தமார்புகருக்கெட்டே ழொன்றுபத்தொன்பதைந்தும்
உந்துபன்னொன்றுமூன்றே ராறுமுன்முரைக்கும்வேதை.

இ-ள். புதனுக்கு நற்க்ஷேத்திரமென்று உரைத்த இராசிக்கு 5-8-9-12-இவ்விடங்களில் கிரகம் இருக்கினும் குற்றமில்லாத குருவுக்கு 3-4-8-10-12-இவ்விடங்களில் கிரகமிருந்தாலும், சுக்கிரனுக்கு 5-7-8-9-10-3-6-11 - இவ்விடங்களில் கிரகமிருந்தாலும் அவரவர்களுக்கு வேதைஸ்தானமெனச் சொல்வாய் எ-று. 204

வீட்டிற்கு மனை நூல்

வாசற்படிவைக்க

வீட்டின் அகலத்தை 9-கூறு செய்து வாமத்தில் 5-பங்கும், வலத்தில் 3-பங்கும் விட்டு வாசற்படிவைக்கவும்.

கிழக்கு மேற்கு வீதிக்கு வலம் கிழக்காகவும், இடம் மேற்காகவும், தெற்கு வடக்கு வீதிக்குவலம் வடக்காகவும், இடம் தெற்காகவும் கொள்க.

கவி

வீட்டினளவை விளங்கொன்பான் கூறுசெய்து
நீட்டி அளந்த நிலைக்கோலால்—கூட்டிடுவாய்
வாமத்தேயைந்தும் வலத்தே யொருமூன்றாய்
சேமத்தே வாசலிடச் செப்பு.

ஆகாமாதம்

ஆடித்திங்களில் ராவணன்பட்டதும் ஆலமேய்பெரும் பாரதமார்கழி
வீடிட்டான்புரட் டாசியிரணியன் மேவிவீசனஞ் சுண்டதுமாசியில்
பாடிக்காமனெ ரிந்ததுபங்குனி பார்க்குளேகினன் மாபலியானியில்
வீடிட்டில்லங் குடிபுகவேண்டிஞே ரோடிட்டேயிரங் துண்பருலகினே.

நிலைச்சூலம்

4-மூலையுள்ள ஒருசதுரங்கீறி 4-மூலையிலும் சூலமிட்டுச் சதுரத்தின் கிழக்கில் ௨-வரையும், தெற்கில் 2-வரையும், மேற்கில் 3-வரையும், வடக்கில் 2-வரையும் கீற 28-முனையாம், கிழக்கிலுள்ள நடுவரையில் ரவிநின்ற நாளைவைத்து வலமாக அபிசித்துடன் எண்ணக் கிழக்கிலுள்ளவரை 6-ம் மேற்கிலுள்ளவரை 3-ம் ஆக-12ம் ஆகிய நாள் வாசக்கால் வைக்க ஆகாவாம், மற்றையநாள் 15-ம் உத்தமம்.

சாதகப்பொருத்தம் நிர்ணயம்

லக்னத்துக்கு 1-2-7-8-ல் பாபக்கிரகங்கள் இருந்தால் முழுப்பாப மென்றும்.

4-12-ல் இருந்தால் காற்பாபமென்றும் பேராம்.

மேலும் செவ்வாய் நீங்கிய பாபிகளுக்கு 4-ம் 12-ம் ஆட்சி வீடாயில் அரையும்.

உச்சவீடாயில் முக்காலும்,
நட்புவீடாயில் காலும்,
பகைவீடாயில் முழுமையும்,
நீச்சவீடாயில் முழுமையிற் குரூரமாகிய பாபமாம்.

பெண்சாதகபாபம் பிள்ளை சாதக பாபத்துக்குக் குறைந்திருக்க வேண்டும், சமனுமிருக்கலாம், அதிகப்படலாகாது.

சிலநூல்கள் சுக்கிரனின்ற ராசியைத்தொட்டும் சந்திரனின்ற ராசியைத்தொட்டும் பார்க்கும்படி சொல்லுகின்றன.

கவி

திட்டஞ்சொல்பாபர்கேது சேய்ரவிமந்தன்ராகு
எட்டுவாக்கொன்றதேழி லிருந்திடின்முழுதும்பாவம்
கட்டுநான்கிராறுயிற் காலதாங்குசனுக்கொன்றும்
இட்டமாய்ப்பார்க்கவெள்ளி யிந்துலக்கனத்தைப்பாரே.

ஓர்பாவிமாதருக்கா ணேறிநிற்கிலொக்கும்
சீர்காலோடரைமுக்கால் சேர்சரிநன்றாகும்
நாரியர்க்குக்காற்பாவி கூடிலாண்மரணம்
சேர்சிங்கம்வில்கயல்கோல் தேளாடாஞ்செப்பே.

1-வது நட்சத்திரப்பொருத்தம்

பெண்ணினுடைய நாள்முதல் புருஷனுடைய நாள்வரையில் எண்ணும்போது 2-4-6-8-9-12-14-16-19-22-23-26-ம் நட்சத்திரங்களுத்தமம்.

பத்து நட்சத்திரமானபின் மறுபடியும் பத்தா நட்சத்திரந் தொடங்கியும், இருபது நட்சத்திரமானபின் மறுபடியும் இருபதா நட்சத்திரந் தொடங்கியும் எண்ணிக்கொள்ளவும்.

2-வது கணப்பொருத்தம்

பெண்ணுடைய நட்சத்திரமும் புருஷனுடைய நட்சத்திரமும் ஒரே கணமானல் உத்தமம்.

இராக்ஷத கணமும், தேவ கணமுமாகில் சிறுகுண்டாம்.
இராக்ஷத கணமும், மனுஷ கணமு மாகில் மரணம்.
மனுஷகணமும் தேவகணமுமாகில் மத்திமம்.

3-வது மகேந்திரப் பொருத்தம்

பெண்ணாள் முதல்-புருஷன் நாள்வரை எண்ணும்போது 1-4-7-10-13-16-19-22-25 - ஆனல் உத்தமம்.

4-வது ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

பெண்ணாள் முதலாக எண்ணும்போது புருஷனாள் 13-க்கு மேலானல் உத்தமம்.

5-வது யோனிப்பொருத்தம்

யானைக்கு பகை	மனுஷர்
குதிரைக்குப் பகை	பசு
மானுக்கும் எருமைக்கும் பகை	புலி
பாம்புக்கு பகை	ஆடு
குரங்குக்குப் பகை	நாய்
எலிக்குப் பகை	பூனையாம்

இவையுமன்றி இரண்டும் புருஷயோனியினால் ஆகாவாம், பெண் ஸ்திரீயோனியும் புருஷன் புருஷ யோனியுமானால் உத்தமம். மாறியிருந்தாலாகாது.

6-வது இராசிப் பொருத்தம்

பெண்ராசிமுதல் புருஷன் ராசிவரை எண்ணினால் 6-இராசிக்கு மேலாயின் உத்தமம்.

7-வது இராசிக்கதிபதி பொருத்தம்

பெண்ராசிக்கும் புருஷன் ராசிக்கும் அதிபதிகள் நட்பாயிருக்கில் உத்தமம்.

8-வது வசியப் பொருத்தம்

மேஷத்துக்கு	சிங்கமும்-விருச்சிகம்
இடபத்துக்கு	கர்க்கடகமும்-துலாம்
மிதுனத்துக்கு	கன்னி
கர்க்கடகத்துக்கு	விருச்சிகமும்-தனுசு
சிங்கத்துக்கு	மகரம்
கன்னிக்கு	ரிஷபமும்-மீனம்
துலாத்துக்கு	மகரம்
விருச்சிகத்துக்கு	கர்க்கடகமும்-கன்னி
தனுசுக்கு	மீனம்
மகரத்துக்கு	கும்பம்
கும்பத்துக்கு	மீனம்
மீனத்துக்கு	மகரம்

வசியமாம்.

9-வது ரச்சுப் பொருத்தம்

நேரே மூன்று முக்கோணங்கீறி குறுக்காக நான்கு கீற்றுக் கீறினால் 27-பொருத்தாம்,

குறுக்காகக்கீறிய அடிவரைக்குக்காலென்றும்,
அதன்மேல்வரைக்குத் தொடையென்றும்,
அதன்மேல்வரைக்கு வயிறென்றும்,
அதன்மேல்வரைக்குக் கழுத்தென்றும்,
முக்கோணத்துச்சிமூன்றுக்கும் தலையென்றும் பெயராம்.

முன் சொன்ன பொருத்து 27-லும் முதல் பொருத்தில் அச்சுவினியைவைத்து மேல்கீழாய் வலமாக முறையே எண்ணும் போது புருஷனுடைய நக்ஷத்திரமும் பெண்ணினுடைய நட்சத்திரமும் குறுக்காகக் கீறியவரைகளில் ஒருவரையி லிருக்கலாகா.

கால்வரையில் வந்தால்	பொருளழிவு
தொடைவரையில் வந்தால்	மலடி.

வயிற்றுவரையில் வந்தால் புத்திர [illegible]
கழுத்துவரையில் வந்தால் புருஷ சிறப்பு
சிரசுவரையில் வந்தால் பெண் சிறப்பு

இப்படிப்பார்த்துக் கொள்ளவும்.

10-வது வேதைப் பொருத்தம்

ஒரு முக்கோணங்கீறி மூன்று மூலையிலும் நந் நான்கு வரை கீறில் 27-பொருத்தமாம், முன்போல அச்சுவினி முதலாக எண்ணும் போது இருவர்நாளும் ஒரு குறுக்குவரியி லிருக்கலாகாது.

11-வது மரப்பொருத்தம்

முன்சொன்ன மரங்களுக்குள்ளே பலாசு-புன்னை-நாவல்-மகிழ்-பலா - மா-இலுப்பை-சண்பகம் - எருக்கு-வஞ்சி-அரசு-ஆல் - அத்தி - மாதுளை-பிராய் என்னும் 14-ம், பாலுள்ளமரமாம்.

மற்றவை வயிரமுள்ளமரமாம்.

புருஷன்வயிரமரமும்-பெண் பால்மரமுமானல் புத்திரனுண்டு,
பெண் வயிரமரமும்-ஆண் பால் மரமுமானுல் மலடு,
இருவரும் வயிரமரமானுல் புத்திரசேதம்,
இருவரும் பால்மரமானுல் அதிகலம்.

12-வது பக்ஷிப் பொருத்தம்

மயிலுக்கும்-கோழிக்கும் வல்லூறு பகை
வலியனுக்கு-ஆந்தை பகை
ஆந்தைக்கு-வலியன் பகை
வல்லூறுக்கு-வலியனொழிய எல்லாம் பகை

இப்படியே புருஷனுக்கும் பெண்ணுக்கும் உள்ள பக்ஷிகளில் பகையில்லாதிருக்கவேண்டியது.

13-வது ஆயுட்சோதனைப் பொருத்தம்

பெண் நக்ஷத்திரமுதல் புருஷனுடைய நக்ஷத்திரம் வரை எண்ணின தொகையை ஏழிற் பெருக்கி இருபத்தேழிற்கிந்து நின்ற மிச்சமும், புருஷன்நாள் முதல் பெண்ணுள்வரையில் எண்ணி முன் போல் பெருக்கிக் கழித்த மிச்சமும் பார்க்கும்போது பெண்நாட் குறையில் பெண் முன்னும், புருஷன் நாட்குறையில் புருஷன் முன்னும் பதவி யடைவரென்பதாம்.

கவி

அன்றுபெண்பிறந்தநாள்தொட் டாணினுளவுமெண்ணி
நின்றவர்நாட்கடொட்டு நேரிழைநாளீருகச்
சென்றதையேழிற்ருக்கி யிருபத்தேழ்க்கிந்தசேடம்
மன்றலங்குழலாய்தாழ்ந்தோர் மரணமுண்டென்றுசொல்லே.

14-வது சாதிப் பொருத்தம்

கர்க்கடகம்-மீனம்-தனுசு மறையவராம்.
மேஷம்-விருச்சிகம்-அரசராம்.
கும்பம்-துலாம்-வைசியராம்.
இடபம்-மகரம்-சூத்திரசாதியாம்.
மிதுனம்-சிங்கம்-கன்னி நீச்சசாதியாகும்.

ஆதலால் பெண்ஜாதிக்குப் புருஷன்ஜாதி உயர்ந்திருக்கவேண்டும்.

15-வது ஊர்ப்பொருத்தம் நரச்சக்கரம்

ஊர்ப்பெயர் முதலெழுத்துக்கும், பொருத்தங் கேட்போன் பெயர் முதலெழுத்துக்கும் நக்ஷத்திரங் கண்டு, மனித வுருவமெழுதி சிரசில்-5, முகத்தில்-3, வயிற்றில்-5, காலில்-6, கண்ணில்-1, குய்யத்தில்-1, குதத்தில்-1, மார்பில்-4, புஜத்தில்-1, ஆக-27 நக்ஷத்திரங்களும் எழுதுக, எவ்வாறெனின் தலையில் ஊர்நாளைவைத்து பாதபரியந்தம் எண்ணத் தலைவன்நாள் தலை 5-ல் வரின் நன்று, முகம் 3-ல் வரின் ஆகாது, வயிறு 5-ம் உத்தமம், காலை 6-ம், கண்-முகம்-குய்யம் 3-ம் ஆக 9-ம் ஆகா. மார்பு 4-ம் புஜம் 1-ம், ஆக 5-ம் உத்தமம்.

கவி

படிதன்னிலூரின்முதனுடொடங்கிப் பகர்சன்மநாளினளவாய்
முடியைந்துநன்றுமுகமூன்று தீதுமுதிர்தொந்தியைந்துநன்று
அடியாறினேடுநயனத்திலொன்று மடியோனிரண்டுமசடாம்
வடிமார்பினுன்கும்புயமீதிலொன்றும் மனமேமகிழ்ச்சிதருமே.

16-வது நட்சத்திரவேதைப் பொருத்தம்

அசுவினிக்கு	...	கேட்டை
பரணிக்கு	...	அனுஷம்
கார்த்திகைக்கு	...	விசாகம்
ரோகணிக்கு	...	சோதி
திருவாதிரைக்கு	...	திருவோணம்
புனர்பூசத்துக்கு	...	உத்திராடம்
பூசத்துக்கு	...	பூராடம்
ஆயிலியத்துக்கு	...	மூலம்
மகத்துக்கு	...	ரேவதி
பூரத்துக்கு	...	உத்திரம்
அஸ்தத்துக்கு	...	சதயம்
பூரட்டாதிக்கு	...	உத்திரட்டாதி

இவை ஒன்றுக்கொன்று வைரம்

மிருகசிரம்-சித்திரை-அவிட்டம் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று பரஸ்பர வைரம், புருஷனுக்கும் பெண்ணுக்கும் இந்நாள் பொருந்தாது.

17-வது. சேவக பொருத்தம்

தன்னுடைய நட்சத்திர முதல்சேவகன் நட்சத்திரம் வரை எண்ணிக் கண்டதொகையை 12-ல் கொடுத்த சேடம் 1-5-9 ஆயின் உத்தமம், 2-6-10-ஆயின் ஆகாது, 3-7-11-ஆயின் மத்திமம்.

18-வது கூட்டாளிப் பொருத்தம்

தன்பெயரை ஒற்றுப்பட எழுத்தெண்ணி 10-ல் பெருக்கின தொகையுடன் கூட்டாளி பெயரை அவ்வா றெண்ணிக் கூட்ட 8-ல் கொடுத்த சேடம் 1-3-5-7-உத்தமம், 2-4-6-8-ஆகா.

நித்தயோகினிநிலை

பகலை எட்டுபங்காக்கி,

1-வது கிழக்கிலும்	5-வது மேற்கிலும்
2-வது வடமேற்கிலும்	6-வது தென்கிழக்கிலும்
3-வது தெற்கிலும்	7-வது வடக்கிலும்
4-வது வடகிழக்கிலும்	8-வது தென்மேற்கிலும்

நித்தியயோகினி நிற்கும்

இது யாத்திரைக்குப் பின்பக்கமும் இடதுபக்கமும் இருக்க வேண்டும், இதுநித்தியம் கிழக்குப் பக்கமுதலாகக் கொள்ளவும்.

கவி

சீர்பெறுநித்தியயோகினியதனைச் செப்பிடிற்கிழக்குடன்வடமேற்
கோர்பெறுதெற்கோடாகுமீசானம் எழில்பெறுமேற்குதென்கிழக்கு
பார்புகழ்வடக்குபகருதென்மேற்கு படியொருதினத்தில்ஓர்முகூர்த்தம்
நேருடன்கிழக்கையாதியாய்க்கொண்டு நிகழ்த்திடுயோகினிநிலையே.

திதி நக்ஷத்திர யோகங்களின் விர்த்திக்ஷயம்

நக்ஷத்திர வர்த்தனை	நாழிகை-$6\frac{1}{2}$	க்ஷயம்-$4\frac{1}{4}$
யோகவர்த்தனை	நாழிகை-1	க்ஷயம்-8
திதி வர்த்தனை	நாழிகை-$5\frac{1}{4}$	க்ஷயம்-$6\frac{1}{2}$

வருஷ மகாதிசை

ஜனன நக்ஷத்திரமுதல் பங்குனிப் பூர்வபக்ஷிப் பிரதமை யன்றைய நக்ஷத்திரம்வரை எண்ணி 5-ல் பெருக்கி 9-ல் கொடுத்த மிச்சம்.

1-க்கு சூரியன் நாள்-20,
2-க்கு செவ்வாய் நாள்-28,
3-க்கு குருநாள்-58,
4-க்கு கேது நாள்-21,
5-க்கு புதன் நாள்-56,
6-க்கு சுக்கிரன் நாள்-70,
7-க்கு சனி நாள்-36,

8-க்கு சந்திரன் நாள்-50,
9-க்கு இராகு நாள்-21, ஆகநாள்-360.

இதில் எந்தத் திசைமுதல் தோன்றுகிறதோ அதுமுதலாக மேற்சொன்ன முறைப்படி வருஷ திசைபார்ப்பது மகாதிசைபோல் பலன்கொள்ளவும்.

மாதமகாதிசை

ஜனன நக்ஷத்திரமுதல் மாதம் பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணிக் கண்டதொகையை 7-ல் பெருக்கி 9-ல் கொடுத்த மிச்சம்.

1-க்கு சூரியதிசை	6-க்கு சந்திரதிசை
2-க்கு புததிசை	7-க்கு சனிதிசை
3-க்கு இராகுதிசை	8-க்கு சுக்கிரதிசை
4-க்கு குருதிசை	9-க்கு செவ்வாய்திசையாகக்
5-க்கு கேதுதிசை	[கொள்வதாம்.

கிரகங்களின் மகாதிசை ஷ 7-க்கு நாள் நாலாகக் கொள்வது.

இவற்றின் பலன்

சூரியதிசை நாள் 1½க்கு-அலைச்சல், கபாலநோய்,
புததிசை நாள் 4¼-க்கு-இலாபம், பந்து தரிசனம்
இராகுதிசை நாள் 4½-க்கு-நீச்சசிநேகம்,
குருதிசை நாள் 5-க்கு-போசன சௌக்கியம் தனலாபம்.
கேதுதிசை நாள் 1¾-க்கு தேகபீடை,

சந்திரதிசை நாள் 2½-க்கு சுக்கிலபக்ஷமாயின் தனலாபம், கிருஷ்ணபக்ஷமாயின் தனநஷ்டம்.

சனிதிசை நாள் 4¾-க்கு விரோதம், குடும்பகலகம் ஆயுதவிரணம்.

சுக்கிரதிசை நாள் 5-க்கு-ரத்தினாபரணலாபம்.

செவ்வாய்திசை நாள் 1¾-க்கு போசன அசௌக்கியம், கலகம் என்றறிவதாம்.

நித்திய மகாதிசை

சூரியனின்ற நக்ஷத்திரமுதல் அன்றைய நக்ஷத்திரம்வரை எண்ணிக்கண்ட தொகையை 2-ல் பெருக்கி, இதனோடு அவனவன் சனன நக்ஷத்திர முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணிக் கண்ட தொகையும், ஞாயிறுமுதல் அன்றையவாரம் வரை யுள்ள தொகையையுங் கூட்டி 9-ல் கொடுத்து வந்த மிச்சம்.

1-க்கு சூரியதிசை	6-க்கு சனிதிசை
2-க்கு சந்திரதிசை	7-க்கு புததிசை
3-க்கு செவ்வாய்திசை	8-க்கு கேதுதிசை
4-க்கு இராகுதிசை	9-க்கு சுக்கிரதிசை
5-க்கு குருதிசை	

இவையாகக்கொண்டு பலன் சொல்லுவது இது [illegible]யமகா நிசயாம்.

மாதபலன்

ஜன்மநட்சத்திரமுதல் மாதம் பிறந்த நட்சத்திர[illegible] எண்ணிக்கண்ட தொகையை ஏழிற் பெருக்கி எட்டிற்கழித்த சே[illegible]ம்.

1-க்கு ரோகம்	5-க்கு போசனசௌக்கியம்
2-க்கு இலாபம்	6-க்கு ஐசுவரியம்
3-க்கு செலவு	7-க்கு கலகம்
4-க்கு அலேச்சல்	8-க்கு கஷ்டமாம்.

தினபலன்

ஜன்ம நக்ஷத்திரமுதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணிக் கண்ட தொகையுடன் ஞாயிறு முதல் அன்றையவாரம் வரையிலும் பிரதமைமுதல் அன்றைய திதிவரையிலும் கண்ட தொகையைச் சேர்த்து ஒன்பதிற் கழித்தமிச்சம்.

1-க்கு வியாகூலம்	6-க்கு சுபம்
2-க்கு சுபம்	7-க்கு கலகம்
3-க்கு துர்வார்த்தை	8-க்கு ரோகம்
4-க்கு பந்து	9-க்கு ஞானவாக்கியம்
5-க்கு பெண்போகம்	

தாராபலன்

ஜன்ம நக்ஷத்திரமுதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணிக் கொண்டு வந்ததொகையை ஒன்பதிற்கழித்து நின்ற மிச்சத்தில் 2-4-6-8-உத்தமம்.

முகூர்த்த நிர்ணயம்

விவாகம் செய்ய

ஆடி - மார்கழி - புரட்டாசி - மாசி மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் சுபர்வாரங்களில் உவா - இருத்தை அஷ்டமி நீங்கிய திதிகளில் - மிதுனம் - கும்பம்-கர்க்கடகம் - ரிஷபம் - தனுசு-கன்னி துலாம் என்னும் ராசிகளில் மூலம் - ரேவதி - மகம் - சோதி-மிருகசிரம்-ரோகணி-அனுஷம்-உத்திர மூன்றும் அஸ்தம் இந்த நட்சத்திரங்களில் 3-11-ல் பாபக்கிரகங்களும் குரு சுக்கிரன் புதன் 6-8-அல்லாத மற்ற இடங்களில் பலத்திருக்க அல்லது ஒன்று ஏழுக்குடையவர் பலக்க குருபார்க்க 2-3-ல் சந்திரன் இருக்க 7-ம் 8-ம் இடங்கள் சுத்தமாகிய லக்கனம் விவாகத்துக்கு உத்தமம்.

விவாகநாள்

சுடுமாமோருள் மூலம் ரேவதிமகமேசோதி
ஓடுபொன் ...ரோணி யனுஷமுத்திரங்களத்தம்
கூடி...னறுவாவோ டிருத்தையட்டமிதீயோர்நாள்
ஆடியாகழிபுரட்டை மாசிதள்ளன்னமனுய்.

அன்னமேமிதுனங்கும்ப மலவனேடிடபம்வில்லு
கன்னிகோனன்றீராறு மூன்றினிற்கொடுங்கோணல்லர்
பொன்னவனெட்டிற்றீ...ன் புகர்புதனெட்டோர்காரி
இன்னவரேழிற்றீயர் மதிநல்லனிரண்டின்மூன்றே.

விவாகசக்கரம்

எட்டுக்கோணமாக ஒரு சக்கரங்கீறி அந்தச் சக்கரத்தினடுவில் சூரியன் நிற்கும் நட்சத்திரத்தையும் அதற்குமுன் நட்சத்திரத்தையும் பின் நட்சத்திரத்தையும் வைத்து தனக்கு எதிரைக் கிழக்காகக்கொண்டு வலமாக திக்கொன்றுக்கு மும்மூன்று நட்சத்திரமாக எண்ணிக்கொண்டு வரும் போது நடுவிலும் அக்கினி மூலையிலும் தெற்கிலும் மேற்கிலும் வாயு மூலையிலும் இருக்கும் நட்சத்திரங்கள் 15-ம் ஆகா. மற்ற 12-நட்சத்திரங்களும் உத்தமமாம்.

கவி

தினகரனிருந்தநாண்முன்பின்னுளுஞ் சேர்ந்திடுநடுவினில்வலமாம்
அனலவன்மூலைமுதலதாமெட்டிற் கடைவுடன்மும்மூன்றுநாளாய்
மனமுறவெண்ணிலக்கினிதெற்கு வருணனும்வாயுவுநடுவும்
எனவருபதினைந்தென்னுநாட்கள் டீதெனவிளம்பினர்மேலோர்.

கவி

வட்டமதி இரவிநின்ற முன்னும்பின்னும்
வளமாக விவாகமது முடிப்பிற்றீதாம்
திட்டமுடன் கிழக்கிலுள்ள மூன்றும்நன்று
திரள்வன்னி மூலையது தீமையாகும்
நட்டமது தானுகும் யமனார்மூலை
நலமுண்டா நிருதியது மேற்குச்சாவு
தொட்டபிணி நீங்காது வாயுமூலை
சுகம்பெறலாம் வடக்குமீ சானன்றுனே.

நிஷேகம் செய்ய

ருதுநாள் மூன்றும், ஞாயிறு - செவ்வாய் - சனி - பூரணை - அமாவாசியை-அஷ்டமி-இருத்தை - சென்மநட்சத்திரம் - சென்மவாரம் - பரணி - திருவாதிரை - ஆயிலியம்-மகம்-முப்பூரம்-சித்திரை - சோதி விசாகம் ஆகாவாம். 1-4-10-ல் சந்திரனும், 1-5-9-ல் குரு-சுக்கிரரும், 7-9-ல் புதனும், 3-6-11-ல் பாபக்கிரகங்களும் இருப்பதும் ...ராசியும் லக்கனசுத்தமும் உத்தமம்.

க

திங்கள்ற்றிங்கண்முன்னுள் செவ்வ்யநாளேகாம்கேசி
ம யர்மூன்றுநாளும் வளர்பிறைமறைந்த ளுட
பொங்குறுநவமிநாளும் பூவையைப்புணர்வீராயின்
அங்கமேநோவாமற்று மாருயிரிழப்பர்தாமே.

4-6-8 என்னும் இரட்டித்த மாதங்களில் வளர்பிறையில் சுபர் வாரங்களில் அமாவாசியை பூரணை நவமி நீக்கிய ஒற்றைத் திதிகளில் ரோகணி-மிருகசிரம்-மூன்றுத்திரம்-அஸ்தம்-பூசம் முதலிய நட்சத்திரங்களில் சிங்கம்-விருச்சிகம்-நீங்கிய இராசிகளில் ஏறுபொழுதில் ஆகாசம் நிர்மலமாக இருக்கும் போது அஷ்டமசுத்தமான லக்கினத்தில் மாயோன் பலியாகிய சீமந்தஞ் செய்யலாம், பிராமணருக்கு 3-ம் மாதமுமாம்.

கவி

சொல்லுநான்காறெண்டிங்க டோணிமான்றலேபாரோணம்
புல்லுமுத்திரங்களத்தம் பூசங்கள்புகழ்கோள்வாரம்
நல்லவாமிரட்டைப்பக்கநவமி யோடுவாதேள்சிங்கம்
அல்லவாஞ்சீமந்தத்திற் கட்டமசுத்திநன்றும்.

கிரகப்பிரவேசம் செய்ய

ஆனி - ஆடி - புரட்டாசி-மார்கழி - மாசி - பங்குனி மாதங்களும், ஞாயிறு-செவ்வாய்-வியாழமும், அச்சுவினி-மிருகசிரம்-புநர்பூசம்-அஸ்தம்-சித்திரை-சோதி-மூன்றுத்திரங்கள்-அனுஷம்-திருவோணந்தவிர மற்ற நட்சத்திரங்களும், விருச்சிகம்-கும்பமும் இருத்தையும் ஆகாவாம். அஷ்டம சுத்தமுள்ள லக்கினம் உத்தமம்.

நாமகரணம் பண்ண

பிராமணருக்குப்பிறந்த 12-ம்-நாளும், மற்றவர்களுக்கு 30-ம் நாளும், சரராசியும், அஷ்டம சுத்தராசியும் உத்தமம்.

அச்சுவினி - பரணி-கார்த்திகை-திருவாதிரை-ஆயிலியம் - பூரம்-சித்திரை - விசாகம்-கேட்டை-பூராடம் - பூரட்டாதி - அமாவாசியை - பூரணையும்-ஒற்றைத்திதியும்-பாபர்வாரங்களும் - பிற்பகலும் பகை, நீசக் கிரகபார்வையும் ஆகாவாம்.

தினசரி கோசார போதினி மூலமும் உரையும்

முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1939.

சந்திரகாவியம்

மூலமும் விருத்தியுரையும்

இவை பண்டைக்காலத்து சாஸ்திரமேதாவிகளால் நன்கு புகழ்ப் பெற்று, ஒவ்வொரு ஜாதகங்களுக்கும், யோகபாவம், மாரகபாவம், நட்பு, ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகையென்னும் பஞ்சபலம், திசாபுக்தி, காலங்களிலுண்டாகும் போதகன் வேதகன் பாசகன் காரகரென்பவர் இயல்பு முதலியனவற்றைத் தெளிவாயும், அனுபவத்தில் ஒற்றுமையுடனும் எழுதப்பட்டு மூலபாடமாயிருப்பதுகருதியும் இதனை சோதிடர்கள் அறிவது மிக்க சிரமமாயிருப்பது கருதியும், மேற்படி செய்யுளுக்கு உரையும், பலவித நூற்களின் மேற்கோளாலும் நன்றாய் விளக்கிக்காட்டியுள்ளன. ஆதலால் தற்காலசோதிடர்களும் இதிலுள்ள விஷயங்களை எளிதில் அறிவார்களென்றும் நம்புவதால் ஒவ்வொரு சோதிடர்களும் வாங்கி வாசித்து தன் சந்தேகம் நீங்கி ஜாதகபலன் உரைக்குமாறு வேண்டுகின்றனம். விலை அணா 8

எமது விலாசம்:—

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.